# ரேவதியம்

## மணிவிழா மலர்

**12.03.2019**



## திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி

அதிபர்,
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்,
வவுனியா வடக்கு கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய அதிபர்

## திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி

அவர்களின்

# ரேவதியம்

## மணிவிழா மலர்

இதழாசிரியர்

திருமதி.மதனகுமார் பிருந்தாவனிதை

வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்

12.03.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அகவை அறுபது நிறைவுற்ற

**திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி**

அவர்களைப் பாராட்டும் முகமாக

**"ரேவதியம்"**

எனும் இம் மலரைப் பணிவன்புடன்

சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி
B.A, P.G.D.E (Merit), SLPS - I
அதிபர் - வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்
# V/Kanagarayankulam Maha Vidyalayam

**மகுட வாசகம்**
"கற்க கசடற"

**Motto**
'Learn throghly'

**நோக்கக்கூற்று**
"சவால்களை எதிர்கொள்ளக்கூடிய தேர்ச்சிமிகு சமூகத்தை உருவாக்குவோம்"

## Vision
"To create a competent society to meet the global challenges"

**பணிக்கூற்று**
"கல்வி, விளையாட்டு மற்றும் ஆன்மீக வளப்படுத்தலின் ஊடாக நவீன உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் சமநிலை ஆளுமையுள்ள தேர்ச்சிமிகு சமூகத்தை உருவாக்குவோம்"

## Mission
"To create a students society with balanced personality to face the world challenges through education Sports and spiritual activities"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா மலர்க்குழு

- திரு.த.சுகந்தன்
- திருமதி.ம.பிருந்தாவனிதை
- திரு.செ.விஸ்ணுராஜா
- திரு.பா.றஜீவன்
- திரு.சி.கிருபாகரன்
- ஸ்ரீமான்.மு.சு.கணேஸ்வரன்
- திரு.பா.பவிதன்
- திரு.செ.லெனின்வளவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**வ**ந்தாரை வாவென்று வரவேற்கும் வன்னி வள நாட்டின் வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபராக சேவையாற்றி, இன்று அகவை அறுபது நிறைவு நாள் காணும் திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் மணிவிழா மலராக **"ரேவதியம்"** எனும் சிறப்பு மலர் வெளிவருகின்றது.

இவரது முப்பத்தாறு வருட சேவைக்காலத்தில் 18 வருடங்கள் ஆசிரியராகவும் 18 வருடங்கள் அதிபராகவும் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலேயே ஆற்றியுள்ளமை சிறப்பம்சமாகும். கஷ்டப் பிரதேசமாக காணப்பட்ட வவுனியா வடக்கு கல்வி வலயப் பிரதேசத்திலே ஏழை மாணவர்களின் இன்னல் கண்டு அவர்களது கல்வி விருத்திக்காக தன்னை அர்ப்பணித்து அல்லும் பகலும் பணியாற்றியவர்.

இம் மலரிலே ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், அனுபவப் பகிர்வுகள், ஆய்வுக் கட்டுரைகள், வாழ்த்துப்பா எனப் பல்வேறு அம்சங்கள் இடம்பிடித்துள்ளன. இம் மலராக்கத்திற்கு பக்கபலமாக நின்ற அனைவருக்கும் மணிவிழா மலர்க்குழு சார்பான நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

மணிவிழா நாயகியின் வாழ்வு சிறக்க வாழ்த்துக்கள்.

- பாடசாலைச் சமூகம்

12.03.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழுவின் உள்ளத்திலிருந்து....

**க**னகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் ஆளுமையும் ஆற்றலும் மிக்க அதிபராக கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பற்ற சேவையின் அடையாளமாக **"ரேவதியம்"** என்னும் நூல் வெளியிடப்படுகின்றது.

கல்விப் புலத்திலே சிறந்து விளங்கி ஆசிரியராய் தன் கல்விப் பணியைத் தொடங்கி அதிபராய் உயர்ந்து நிற்கும் விழா நாயகியை கௌரவித்து **"ரேவதியம்"** எனும் இந்நூலை வெளியிடுவது சாலப் பொருத்தமானதே.

இவரது நீண்டகால கல்விச் சேவையிலே கடந்து வந்த பாதைகள் நெடியது. நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் தன் உயிரை துச்சமென மதித்து இப் பிரதேச மாணவர்களின் கல்விக்காக தன்னை அர்ப்பணித்த விழா நாயகி பற்றிய சில குறிப்புக்களையே இந்நூலில் பதிவு செய்துள்ளோம் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மணிவிழாக்காணும் அதிபர் திருமதி.ரே.கிருஸ்ணமூர்த்தி அவர்கள் எல்லா நலன்களுடன் கல்விப்புலத்தில் இன்னும் தன் பணியாற்றிட இறைவன் நீண்ட ஆயுள் வழங்க வேண்டி விடைபெறுகின்றோம்.

- மணிவிழா மலர்க்குழு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திராவிடநற் திருநாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்த பெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே.

மனோன்மணியம்
பெ.சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்த்துவோம் வணங்குவோம் வாழ்த்துவோம்
வாழ்த்துவோம் வணங்குவோம் வாழ்த்துவோம்
கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தை
வாழ்த்துவோம் வணங்குவோம் வாழ்த்துவோம்

செந்தமிழ் ஆங்கிலம் சீரியவிஞ்ஞானம்
சிறப்புடனேபயில்வோம்
பைந்தமிழ் கலைகள் பலவுமேகற்று
பாங்குறவே வாழ்ந்திடுவோம்
இன்னலைத் துடைத்திட இன்பமே பெற்றிட
இன்கலைதந்திடும் எம்தாய்க்கு
இன்னுயிர்தந்தும் அவள் புகழ் காக்க
இயற்றுவோம் பலதொண்டு

(வாழ்த்துவோம்...)

அறிவேசக்தி அறிவே வாழ்வு
அறிவே எமக்கு பேருதவி
அறிவால் கமத்தை அறிவால் தொழிலை
அறிந்தேநாம் வாழ்ந்திடுவோம்
அறிவை அறிந்து அவ்வழிநடந்து
அகிலமும் என்றும் போற்றிடவே
அறிவால் அருளால் அன்பால் வாழ்வை
அழகுறவேநாம் அமைப்போம்

(வாழ்த்துவோம்...)

கடவுளை வணங்கி கற்றவர் போற்றி
மற்றவர்கள் மதித்திடவே
கடமையுணர்ந்து கண்ணியங்காத்து
கற்றாங்கு ஒழுகிடவே
உலகம் உயர்ந்திடஈழம் உயர்ந்திட
உயர் தமிழ் என்றும் ஓங்கிடவே
ஒற்றுமை மிகுந்துஅனைவரும் ஒன்றாய்
உகந்தேநாம் வாழ்ந்திடுவோம்

(வாழ்த்துவோம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியின் வாழ்க்கைச் சுவடுகள்



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபராக கல்வி வளர்ச்சிக்கு உழைத்து அகவை அறுபதில் மணிவிழாக்காணும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் வாழ்க்கைத் தடமிடல்களை பதிவு செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

சரசாலை வடக்கு சாவகச்சேரியைச் சேர்ந்த மார்க்கண்டு சொர்ணலட்சுமி தம்பதியினருக்கு 12.03.1959 ஆண்டு பிறந்த திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் வ/புளியங்குளம் இந்துக்கல்லூரியில் ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் கற்று உயர்கல்வியை வ/ஓமந்தை மத்திய கல்லூரியில் கற்று 1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினார். பின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்தில் பெற்றுக் கொண்டார்.

21.04.1982 இல் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர், பதினெட்டு ஆண்டுகள் ஆசிரியராகவும் பதினெட்டு ஆண்டுகள் அதிபராகவும் சேவையாற்றியுள்ளார்.

அமைதி, தன்னடக்கம், தற்துணிவு, சிறந்த தலைமைத்துவம் கொண்ட இவர் எல்லோரிடமும் அன்புடனும் ஆதரவுடனும் பழகும் சுபாவம் கொண்டவர். திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி என்றவுடன் எம் மனக்கண் முன்னே நிற்பது அவரது கடமையுணர்வும் நேரந்தவறாமையுமான உயரிய பண்புகளே.

நாட்டில் இடம்பெற்ற யுத்தசூழ்நிலை காரணமாக வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி இடம்பெயர்ந்து மு/சிவபுரம் அ.த.க.பாடசாலையின் ஒரு பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த வேளையில் 1998ம் ஆண்டு கடமை நிறைவேற்று அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

01.04.2000 ஆம் ஆண்டு அவருக்கு அதிபர் சேவை தரம் II கிடைக்கப்பெற்றது. இவ்வேளை நாட்டில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக வ/புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பின் 2003 ம் ஆண்டு புளியங்குளம் இந்துக் கல்லூரியில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட போது, பாடசாலையின் நீண்டகால அபிவிருத்தியை கருத்தில் கொண்டு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் புளியங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு எதிராகவுள்ள பன்னிரண்டு ஏக்கர் காணியை பெற்று காடுகளை அழித்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தற்காலிக கொட்டகை அமைத்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மிகவும் சிறப்பான முறையில் பாடசாலையை நடாத்தி வந்ததுடன் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை சீர்படுத்தி மாணவர்களுக்கு விளையாட்டுப் பயிற்சியையும் வழங்கினார். இக் கல்லூரிக்கான நிரந்தரக்கட்டடம் இவரது சேவைக்காலத்தில் கட்டப்பட்டது. அதுமட்டுமல்லாது ஆசிரியர் விடுதி, கணினி அறை, விஞ்ஞான ஆய்வுகூடமும் கட்டப்பட்டதுடன் பாடசாலைக்கான இரு மாடிக்கட்டிடமும் கட்டப்பட்டது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்கு ஆசிரிய மத்திய வள நிலையம் அமைப்பதற்கு நிலம் இல்லாத போது பாடசாலைக் காணியில் ½ ஏக்கர் நிலப்பரப்பினைக் கொடுத்து உதவினார்.

நெடுங்கேணி பிரதேச சபைக்குட்பட்ட மக்களின் நலன்கருதி வடமாகாண அமைச்சினால் நடாத்தப்பட்ட நடமாடும் சேவை சிறப்பாக நடைபெற தன்னாலான உதவிகளையும் பாடசாலை வளாகத்தையும் கொடுத்தார்.

இப் பிரதேச வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு நபர்கள், அமைப்புக்களிடம் பணஉதவி, கற்றல் உபகரணங்கள் பெற்றுக்கொடுத்து உதவியதோடு வாழ்வாதாரத்திற்கு அல்லலுற்ற குடும்பங்களுக்கும் அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் பல்வேறு அமைப்புக்களிடமும் உதவி பெற்று அவர்கள் சுயதொழில் செய்து முன்னேறுவதற்கு வழிவகுத்தார்.

2007 ஆம் ஆண்டு முதல் இலங்கை அதிபர் சேவை தரம் I இல் நியமனம் பெற்ற இவர் புளியங்குளம் இந்துக்கல்லூரிக்கு ஆற்றிய கல்விச் சேவைகள் பலவுள.

06.07.2015 ஆம் ஆண்டு முதல் வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலப்பகுதியில் வ/கனகராயன்குளம் மகாவித்தியாலய அலுவலகம் தொடர்பான தகவல்கள் நேர்த்தியான முறையில் இற்றைப்படுத்தப்பட்டதுடன் ஆசிரியர், மாணவர்களுடைய சுய விபரக்கோவைகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயம் அண்மைய பாடசாலை சிறந்த பாடசாலை எனும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டது இவரது காலப்பகுதியிலேயாகும்.

கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் கலைத்திட்ட மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளின் அடைவு மட்டம் இவர் அதிபராக இருந்த காலப்பகுதியில் சிறப்பானதாக காணப்பட்டது. 2016ம் ஆண்டு நா.நிசாந்தினி என்ற மாணவி மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில் தேசிய நிலையில் 2ம் இடத்தினையும் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 2017ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.சாதாரணதர பெறுபேற்றில் கு.புகழ்நிலா 9A தரச் சித்தி பெற்ற ஒரே ஒரு மாணவி என்ற பெருமையினையும் பெற்றுக்கொடுத்தது இவரது காலப்பகுதியிலே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலைக்கு வெளியே அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணியில் அதிபர் மற்றும் ஆசிரியர் விடுதிகள் புதிதாக அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டதுடன் பாடசாலை வளாகத்துக்குள் புதிய சிற்றுண்டிச்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டது. மேலும் பாடசாலையின் ஒரு தொகுதி சற்றுபுற மதில் அமைக்கப்பட்டதுடன் பாடசாலையின் கணேசன் மண்டபமும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

திரு.சி.சிவமோகன் (பாராளுமன்ற உறுப்பினர்), திரு.இ.சாள்ஸ் நிர்மலநாதன் (பாராளுமன்ற உறுப்பினர்) ஆகியோரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் ரூபா.20,00,000/= (இருபது இலட்சம்) எமது பாடசாலையின் மைதான புனரமைப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ/கனகராயன்குள மகாவித்தியாலயத்தில் 2012 ஆம் ஆண்டின் பின் 2015 - 2018 வரையான காலப்பகுதிக்கான பரிசளிப்பு விழாவினை 08.03.2019 அன்று திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் சிறப்புற நடைபெற்று முடிந்தது.

வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலுகின்ற வறிய மாணவர்களை இனங்கண்டு நிதியுதவிகளையும் கற்றல் உபகரணங்களையும் பெற்றுத்தருவதற்கு பல்வேறு நபர்கள், நிறுவனங்களை நாடி உதவிபுரிந்துள்ளார்.

சமூகத்தோடு ஒன்றித்து குறை நிறைகளை எல்லோரோடும் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வுகாணும் வல்லமை கொண்டவர்.

இவரது கல்விப்பணி சிறப்பானதாக அமைந்தது போலவே இவரது இல்லற வாழ்வும் மகிழ்ச்சிகரமானதாகவும் சிறப்பானதாகவும் அமைந்திருந்தது. 2000 ஆம் ஆண்டு திரு.சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி அவர்களை (கிராமசேவையாளர்) கரம்பிடித்த இவருக்கு கல்வியில் சிறந்து விளங்கும் கிருஸ்ணமூர்த்தி அபிநயன் என்ற மைந்தனும் வ/வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகின்றான்.

செல்வச்செழிப்பும் மகிழ்ச்சியும்மிக்க இவரது குடும்பத்தாருடன் என்றும் இவர் வணங்கித் துதிக்கும் முள்ளியவளை வற்றாப்பளை கண்ணகி அம்மனின் அருளாசியுடன் நீண்ட ஆயுளுடன் வாழவேண்டும் என வாழ்த்திநிற்கின்றோம்.

**மணிவிழா மலர்க்குழு**
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில்
பரிபாலனசபை

VATTAPALAI KANNAKAY AMMAN TEMPLE
Board of Trustee
Vattapalai, Mulliyawalai. வற்றாப்பளை, முள்ளியவளை

பதிவு இல : HA/MU/05

T.P No:-024-3243558 Web:- www.vattappalaiamman.com
E-mail:-vattappalaikannakiamman@gmail.com

Date:..12.../..03../20.19...

# ஆசிச்செய்தி



கல்விப்புலத்தில் முப்பத்தாறு ஆண்டுகள் அரும்பணியாற்றி 12.03.2019 இல் மணிவிழாக் காணும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் சேவையை மனங்கொண்டு ஆசி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தானங்களில் சிறந்த வித்தியாதானத்தை வவுனியா வடக்குப் பிரதேசத்துக்கு நீண்டகாலம் வழங்கிய அற்புதமான ஒளிவிளக்கு இவர். தனது சேவைக்காலத்தின் முன்னரைப் பகுதியை கற்பித்தலுக்காகவும் பின்னரைப் பகுதியை கற்பிப்பவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்தி உயர்ந்த இலக்கை அடையச் செய்யும் பணியிலும் ஈடுபடுத்தியவர். அவரது சேவைக்கு அவரது பெயர் சொல்லும் மாணவர்களே சான்று.

இப்படியான சிறப்பு வாய்ந்த இவர் வற்றாப்பளைக் கண்ணகைத் தாயின் பக்தை. எமது பரிபாலனசபையின் உந்து விசையான செயலாளர் அவர்களின் பாரியார். இது அவருக்கு இன்னுமொரு சிறப்பு. இப்படியான ஒருவருக்கு எல்லாம்வல்ல வற்றாப்பளை கண்ணகி அம்மனின் அருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு, அவரும் அவர்தம் குடும்பமும் எல்லா சுகங்களும் பெற்று மகிழ்வோடு வாழ ஆசி வழங்குகின்றேன்.

**சிவஸ்ரீ.சிவகந்ததாசக்குருக்கள்**
பிரதம குரு,
வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில்,
முள்ளியவளை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



வன்னியின் முத்தாம் வவுனியா வடக்கில் சீரிய ஒழுக்கமும், சிந்தனை தெளிவும், நல்லறிவும் கொண்ட சமூக இசைவாக்கமுள்ள ஓர் பாடசாலையாக கனகராயன்குளம் மகா வித்தியாலயம் அமைந்துள்ளது சிறப்பிற்குரியதாகும்.

இத்தகைய சிறப்புமிகு வித்தியாலயத்தை புலமைமிக்க அறிவு, செயற்றிறன், நேயம்மிக்க மனப்பாங்கு இம் மூன்றையும் உள்ளன்போடு நல்கி வழிகாட்டும் அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களை பாராட்டி மணிவிழா எடுப்பதும் "ரேவதியம்" எனும் நூல் வெளியீடு செய்வதும் பெருமைக்குரிய விடயமாகும்.

கனகராயன்குளத்தின் ஒளிவிளக்காக விளங்கும் மகா வித்தியாலத்திற்கு அறிவொளியூட்டி அயராது செயற்படும் இவ் அதிபரது சேவை அளப்பரியது. அவரது ஆசிரியப் பணியின் சிகரமாக விளங்கும் அதிபர் சேவையை மனநிறைவோடு ஏற்று அளப்பரும் சேவையாற்றி அறுபதாம் அகவைதனில் ஓய்வுபெறும் எங்கள் மணிவிழா நாயகியின் புகழ் எங்கும் பரவ, அவரது சேவை வளர எல்லாம்வல்ல இத்தியடி சித்தி விநாயகப் பெருமானின் நல்லருள் கிடைக்கப் பிரார்த்தித்து என்னுடைய நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**குகஸ்ரீ.கா.வேந்தன் ஐயா**
பிரதம குரு,
இத்தியடி சித்திவிநாயகர் ஆலயம்,
கனகராயன்குளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



கனகராயன்குளம் மகா வித்தியாலய அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அம்மா அவர்கள் தனது நீண்டகால ஆசிரிய உயர்சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்ற வேளையிலே அவருக்கு நல்வாழ்த்துக்கள் கூறி, இறை ஆசீர்வேண்டி எனது நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன்.

தனது கல்வியூட்டும் பயணத்திலே பல போர்வடுக்களைச் சுமந்து தான் இந்தத் தாய் தனது பணிகளைத் தொடர்ந்துள்ளார். எமது நாட்டிலே ஆயுதப்போர் நடைபெற்ற காலத்திலே, இவர் ஆற்றிய சேவைகளைச் சொற்களிலே சொல்லமுடியாது. நான் இந்தப் பிரதேசத்திற்குப் பங்குத்தந்தையாக வந்தபோது இவரை நான்கு தடவைகள் சந்தித்து இருக்கின்றேன். இவருடைய ஆளுமைப் பண்புகளை எண்ணிப்பார்க்கும் போது எனது மனம் நிறைவடைந்து கொள்கின்றது.

மனித வரலாற்றில் உள்ள ஒவ்வொரு பொற்காலமும், ஏதோ ஒரு தனிநபரின் அர்ப்பணிப்பிலிருந்து, நெறிசார்ந்த விருப்பத்திலிருந்துதான் தொடங்குகின்றது. திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அம்மா அவர்களும் மாணவர்களுக்குக் கல்விச் செல்வத்தை ஊட்டிய போது வரலாறு படைத்துள்ளார்.

எனவே தனது ஓய்வுகாலத்தில் நல்ல சுகத்தோடும், மனநிறைவோடும் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அருட்தந்தை யே.ஜெறால்ட் அ.ம.தி B.Ph, B.Th (Rome)**
பங்குத்தந்தை,
கனகராயன்குளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உலகின் மிகஉயர்ந்த பணியான கல்விச் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் அதிபர் திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களை வாழ்த்தி, பாராட்டி உவகை கொள்ளும் ஆயிரக்கணக்கானவர்களுடன் இணைந்துகொள்கின்றேன்.

முப்பத்தேழு வருடங்கள் முழுமையான அர்ப்பணிப்புடன் தனது தலைமைத்துவத்தைக் கல்விச் சமூகத்துக்கு வழங்கிய அதிபர் அவர்களை வவுனியா மண் ஒருபோதும் மறந்துவிடப்போவதில்லை. அதிபர் அவர்களும் ஓர் ஆத்ம திருப்தியுடன் கல்விப் பணியிலிருந்து விடைபெற்றுச்செல்வார் என நம்புகின்றேன். **"ரேவதியம்"** என்ற பெயரில் அவரது பெயரோடு மணிவிழா மலர் வெளியிடுவது சாலப்பொருத்தமானதாகவும் அமைந்திருக்கின்றது.

அதிபர் திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பாக புளியங்குளம், கனகராயன்குளம் பிரதேசங்களில் கல்வியின் உயர்ச்சிக்கும், தரத்துக்கும் ஊன்றுகோலாக செயற்பட்டதால் இன்று பழைய மாணவர்களாலும், கல்விச் சமூகத்தினராலும் கௌரவிக்கப்படுகின்றார். கல்வி கற்பதற்கும், கற்பிப்பதற்கும் கரை இல்லை என்பார்கள். எனவே ஓய்விலும் தான் சார்ந்த சமூகத்திற்கு தனது கல்விச் சேவைகளைத் தொடர்வார் என நம்பிக்கை கொண்டுள்ளேன். மீண்டும் அதிபருக்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துநிற்கின்றேன்.

**செல்வம் அடைக்கலநாதன். பா.உ**
பாராளுமன்ற குழுக்களின் பிரதிதலைவர்.
தலைவர் - தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N.SIVASAKTHY ANANTHAN,
MEMBER OF PARLIAMENT
VANNI DISTRICT.

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

No.26/10, 1st Lane,
Kandy Road, Vavuniya.
Telephone: +94 24 2221898
+94 24 2228048
+94 23 2232441
Fax : +94 24 2221898
+94 24 2228048
Mobile : +94 71 4347480

Date:-02.03.2019

# வாழ்த்துச் செய்தி



முப்பத்தேழு ஆண்டுகால கல்விச்சேவையைப் பூர்த்திசெய்து அகவை அறுபதில் மணிவிழாக் காணும் திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தியினை வழங்குவதில் மக்கள் பிரதிநிதி என்றவகையில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1982ம் ஆண்டுமுதல் ஆசிரியராக நியமனம் பெற்று 2000ம் ஆண்டுதொடக்கம் இன்றுவரை அதிபராகப் பணிபுரிந்து அரச பணியை நிறைவுசெய்யவுள்ள இவரது இரண்டு தசாப்த கல்விச் சேவைகள் பலரதும் பாராட்டைப் பெற்றவையாகும்.

ஆரம்ப மற்றும் இடைநிலைகல்வியை வ/புளியங்குளம் இந்துக்கல்லூரியில் பயின்று ஓமந்தை மத்திய கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியை முடித்துக் கொண்ட இவர் யாழ் பல்கலைக்கழகம் சென்று பொதுகலைமாணித்துறையில் பட்டதாரியாக வெளியேறினார். 1994ம் ஆண்டு தேசியகல்வி நிறுவகத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை முடித்துக் கொண்டதன் மூலம் தொழிற்தகைமையினையும் உயர்த்தி தனது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்தவர். 1982ம் ஆண்டு வ/பட்டிகுடியிருப்பு அ.த.க. பாடசாலையில் தனது ஆசிரியபணியைதொடங்கிய இவர் 06.07.2015 தொடக்கம் 12.03.2019 வரை வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் தரம்-1 அதிபராகக் கடமையாற்றி 37 வருடகால ஆசிரிய, அதிபர் சேவையின் மூலம் பாடசாலைகளின் சூழலை நன்கு புரிந்துகொண்டு கல்விப் பணிமனையின் ஒத்துழைப்புக்களுடன் அர்ப்பணிப்பான பணிகள் மூலம் பாடசாலைகளின் தரவிருத்திக்கு உழைத்த அதிபர் என்றால் மிகையாகாது.

இவரது கல்விச் சேவையில் அதிகமான காலம் வவுனியா வடக்கு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். சாந்தமும், அமைதியும், புன்சிரிப்பும், தன்னடக்கத்தையும் தன்னகத்தே கொண்டு கல்விப் பணிமனையின் மேலதிகாரிகளுடனும் அவரின் கீழ் பணியாற்றும் ஆசிரியர்கள் தொடக்கம் ஏனைய பணியாளர்கள் வரை எந்தவித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரண்பாடுகளுமற்ற சமநிலையைப் பேணி பாடசாலையினை சிறப்பாக நிர்வகித்த பெருமை இவரைச் சாரும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்திலான பல்துறைசார்ந்த போட்டிகள் போன்றவற்றில் பாடசாலை மாணவர்கள் சாதனைகள் பல படைக்கவும் காரணமாகவிருந்து வழிகாட்டியவர் என்றவகையிலும் அவரை இச்சந்தர்ப்பத்தில் பாராட்ட விரும்புகின்றேன்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்விப்பணிமனையின் அலுவலர்கள் போன்ற அனைவரதும் ஆசிகளுடன் தனது பணியை நிறைவுசெய்யவுள்ள இச் சந்தர்ப்பத்தில் அவரது ஓய்வுக்காலத்தில் நல்லாரோக்கியத்துடன் குடும்பத்தினருடன் இணைந்து இனிதே வாழவேண்டும் என வாழ்த்துவதுடன் எனது மனம் நிறைந்த நல் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ந.சிவசக்திஆனந்தன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னிமாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.சாள்ஸ் நிர்மலநாதன்
# ඉ.චාල්ස් නිර්මලනාතන්
# I.CHARLES NIRMALANATHAN

நாடாளுமன்ற உறுப்பினர்
வன்னி மாவட்டம்
தமிழ் தேசிய கூட்டமைப்பு

Member of Parliament
Vanni District
Tamil National Alliance

පාර්ලිමේන්තු මන්ත්‍රී
වන්නි දිස්ත්‍රික්කය
දෙමළ ජාතික සන්ධානය

அலுவலகம் / office / කාර්යාලය: 023 222 3828
தொலைநகல் / Fax / ෆැක්ස්: 023 222 3828
ஈ.மெயில் / e.mail / ඊමේල්: charlesnirmalanathan@gmail.com
கைபேசி / Mobile / ජංගම දුරකතන: 077 190 6707


## வாழ்த்துச் செய்தி



மனிதகுல மாண்பினையும் மனிதத்துவ பண்பினையும் மானிடர்கள் நெறிமாறிடாது ஒழுகிட கல்வியே அதன் காப்பரணாகவும் வழிகாட்டியாகவும் இருப்பதை வரலாறு சுட்டி நிற்கிறது. காலத்தால் அழியாத கல்வியினை ஞாலத்திற்கு ஞானமாய் ஊட்டுகின்ற உத்தம புருசர்கள் ஆசான்களே. இவர்கள் என்றும் எங்கும் நிலைபெறுவார்கள். அவ்வகையில் இன்று தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெறும் ஆசான் திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களை வாழ்த்தி வணங்குவதில் பெருமகிழ்வடைவதோடு,

இவரின் 37 வருட உயரிய உன்னத கல்விச் சேவையினை காணும் பொழுது ஆனந்த வெள்ளத்தில் என் மனம் அலைபாயுது. அழிவுகளையும் ஆக்கிரமிப்புக்களையும் உயிர், உடைமை இழப்புக்களையும் எமது மக்கள் எதிர்கொண்ட போதும் தொன்மை கொண்ட எமது செம்மொழியினையும் கலை கலாசார பண்பாட்டு விழுமியத்தினையும் காத்து நின்று கல்வியில் மாறிவரும் உலக தொழிநுட்ப மாற்றங்களுக்கேற்ப மாணவர்களை வழிநடத்தியும் நின்ற மதிப்பிற்குரிய ஆசான் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களுக்கு எனது உள்ளார்ந்த அன்புகலந்த வாழ்த்தினைத் தெரிவித்து நிற்கின்றேன்.

நன்றி.

இ.சாள்ஸ் நிர்மலநாதன்
பாராளுமன்ற உறுப்பினர்
(வன்னி மாவட்டம்)

இ. சாள்ஸ் நிர்மலநாதன்
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னித் தேர்தல் மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஆசிரியராய், அதிபராய் உன்னத சேவை நல்கிய திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் மணிவிழாக் காண்பதையிட்டு மகிழ்வடைகின்றேன். கால்நூற்றாண்டிற்கும் மேலாக வவுனியா வடக்கு கல்வி வலயத்திலே கல்விப் பணியாற்றிய பெருமை இவரைச் சாரும்.

வடபகுதியில் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலங்களிலும் தன் உயிரையும் பொருட்படுத்தாது மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு தினமும் பல சோதனைச்சாவடிகளில் பல சோதனைகளையும் கடந்து கடமையே கண்ணாகக் கொண்டு செயற்பட்டவர்.

2000 ஆம் ஆண்டுமுதல் அதிபராக சேவையாற்றிய இவர் கல்வியைத் தொடர இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து பெற்றுக்கொடுத்து கல்வியில் உயர உறுதுணையாய் நின்றவர்.

கல்விப்பணி கடவுட்பணி காலம் முழுவதும் போற்றும் பணி. இவரின் கல்விச்சேவை என்றும் மறக்கவும் மறுக்கவும் முடியாத ஒன்றாகும். ஓய்வின் பின்னரும் இவரின் சேவை மங்காது தொடர்ந்தும் எமது சமூகத்திற்கு கிடைக்க வேண்டும் எனவும், நீண்ட ஆயுளுடன் குடும்பத்தாருடன் மகிழ்வுடன் வாழ வேண்டும் எனவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**வைத்தியகலாநிதி சி.சிவமோகன்**
பாராளுமன்ற உறுப்பினர்,
வன்னி மாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பாரினில் பெண்கள் அறியாமை, இருளிலிருந்து விடுபட்டு கல்வியறிவு பெற்று ஆணிற்கு நிகராகசமத்துவம் பெற்றவளாக வாழவேண்டும் என்கிற பெண்களின் எழுச்சி, முன்னேற்றம் குறித்த புரட்சிக் கவிஞர் பாரதியாரின் மனவெண்ணத்தின்படி, இன்றைய 21ம் நூற்றாண்டில் அவ்வாறான பெண்கள் சமூகத்தினை முழுஉலகத்திலும் காணக்கூடியதாக உள்ளது.

"எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணவேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்தநல் லறிவுவேண்டும்"

பாரதியாரின் இந்தவாக்கிற்கேற்ப, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நான் நன்கறிந்த செல்வி.ரேவதி மார்க்கண்டு அவர்கள் தனது பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு, சீரியசிந்தனையும் நல்லறிவும், எண்ணியகாரியம் முடிக்கும் திடநெஞ்சும் கொண்ட ஒரு பண்புள்ள ஒருபட்டதாரி ஆசிரியையாக தனது ஆசிரிய சேவையை தொடங்கியநாள் முதற்கொண்டு, சக ஆசிரியர்களுடான உறவில் மட்டுமன்றி மாணவர்களுடனும் ஒரு அன்பும் கண்டிப்பும் நிறைந்தஅன்னையாகவேசெயற்பட்டுள்ளார். இன்றைய மாணவ சமூகத்தை கல்வியில் உயர்த்துவது மட்டுமன்றி பண்பிலும் நேர்மையிலும் உருவாக்கி சமூகத்திற்கு ஒரு முன்னோடியாக களமிறக்கும் பணியில் அர்ப்பணிப்புடன் நன்கே செயலாற்றியுள்ளதை அவருடன் கடமையாற்றிய சக ஆசிரியகர்களுக்கூடாகவும், பாடசாலைச் சமூகத்தின் வாயிலாகவும் அறிந்துகொள்ளமுடிகின்றது.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கமான போர்ச்சூழலின் மத்தியில், வவுனியா மாவட்டத்தில் துன்புற்ற மாணவசமூகம் கல்விப்பாதையினின்றும் விலகி விடாது மேற்கொண்டு கல்வியினைத் தொடருவதற்கு, மாணவர்களுக்கு மட்டுமன்றி அவர்களின் பெற்றோருக்கும் வேண்டிய மனவுறுதியையும் பல கல்வி உதவிகளைப் பெற்றுக் கொடுத்துகல்விப் பணியை முன்னெடுத்துச் சென்றுள்ளார்.

இறைவனால் அருளப்பட்ட முப்பத்தாறு வருட சேவைக்காலத்தில், ஆசிரியையாக அதிபராக அர்ப்பணிப்புடனும் வினைத்திறனுடனும் திறம்படசேவையாற்றி, .மனநிறைவுடன் தனதுஓய்வுக் காலத்தினுள் பயணப்படவுள்ள திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களை நான் மனதார வாழ்த்துவதோடு அவரின் ஓய்வுகால வாழ்க்கை ஆரோக்கியம், சமாதானம் சந்தோஷம் நிறைந்ததாக இருப்பதோடு, மீளவும் சமூகத்திற்கு பயன்படத்ததக்கவகையில் விளங்க இறைவன் அவருக்கு பல வாசல்களை திறக்கவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**அ.பத்திநாதன்**
பிரதம செயலாளர்
வட மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியின் திருமண நிகழ்வின் போது...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டச் செயலகம் - வவுனியா

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - වවුනියාව

DISTRICT SECRETARIAT - VAVUNIYA

ආයතන අංශය | தாபனப்பிரிவு | ESTABLISHMENT BRANCH

පොදු / பொது / General - 024-2222233 | දිසාපති / அரச அதிபர் / Govt.Agent -024-2222235 | අතිරේක දිසාපති / மேலதிக அரச அதிபர் / Addl.Govt.Agent - 024-2222203 | පරිපාලන නිලධාරී / நிர்வாக உத்தியோகத்தர் / Administrative Officer - 024-2222106

ෆැක්ස් / தொலைநகல் / Fax - 0242222212 | ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - gavavuniya@gmail.com | වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web Site - www.vavuniya.dist.gov.lk


எனது இல / මගේ අංකය / My No : GA/VA/PA/GEN

உமது இல / ඔබේ අංකය / Your No :

திகதி / දිනය / Date : 2019.02.27

# வாழ்த்துச் செய்தி



வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமை புரிந்து ஓய்வுபெறும் திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் மணிவிழா நிகழ்வினை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள **“ரேவதியம்”** நூலிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் தமது சேவைக்காலத்தில் தமது பாடசாலையின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பு வழங்கி, இன்று வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தினை வவுனியா வடக்கு வலயத்தில் முன்னணிப் பாடசாலையாகவும், உயர்தரத்தில் ஐந்து பாடப்பிரிவுகளை உள்ளடக்கிய ஒரே பாடசாலையாகவும் மாற்றியுள்ளமை பாராட்டுதலுக்குரிய விடயமாகும்.

அப்துல்கலாம் அவர்களின் “நாட்டின் மிகச்சிறந்த அறிவு வகுப்பறையின் கடைசி இருக்கையில் இருக்கலாம்” என்கின்ற கருத்துக்கமைய, தனது சேவைக்காலத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீதான இவரது ஊக்கப்படுத்தலினையும், அர்ப்பணிப்பினையும் அப் பாடசாலையின் உயர்தர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளிக்காட்டுகின்றன.

ஒரு மனிதனின் வாழ்க்கையானது அவனது குடும்பம் மற்றும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பிக்கின்றது. அந்தவகையில் தன் சேவைக்காலத்தில் இச் சமூகத்திற்கு சிறந்த பிரசைகளை உருவாக்கித்தந்தமைக்கு நன்றி கூறி தனது ஓய்வுகாலத்தினை மகிழ்வுடனும், ஆரோக்கியமாகவும் கழிக்க இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

இந் நூலின் கதாநாயகியான திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் தமது கல்விச் சேவையினை இச் சமூகத்திற்கு வழங்கி விடைபெறும் நிகழ்விற்காக நூல் வெளியிடுவதனையிட்டு மலர்க்குழு மற்றும் ஏற்பாட்டுக்குழுவிற்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஐ.எம்.ஹனீபா
மாவட்டச் செயலாளர்,
வவுனியா.

*I.M.Haniffa*
***District Secretary / Government Agent***
***Vavuniya***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சேவையாற்றிய சேவையாளர்



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெறவிருக்கும் திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் மணிவிழா மலரான **"ரேவதியம்"** மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் ஆசிரிய சேவையில் 18 வருடங்களும், 18 வருடங்கள் அதிபராகவும் தன் கல்விப் பணியை செவ்வனே ஆற்றியுள்ளார். திருமதி. கி.ரேவதி அவர்கள் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை வ/புளியங்குளம் இந்துக் கல்லூரியிலும் உயர்கல்வியை வ/ஓமந்தை மத்திய கல்லூரியிலும் பயின்றுள்ளார். தனிமனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழிவகுப்பதுமே கல்வியாகும். அத்தகைய கல்வியுடன் சேர்த்து ஒழுக்கத்தையும் மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்து மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்களின் எதிர்காலத்தில் நன் மக்களாக வாழ்வதற்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். இவர் தனது கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் வாழ்க்கையில் உயர்ந்தவர். பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டுள்ளார். பௌதீக கட்டமைப்பு மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு தன்னாலான பெரும்பணியை ஆற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்பெறுகின்றார்.

கல்விச் சமூகத்திற்கு அளப்பெரிய பணியினை ஆற்றியதுடன் இவர் தனது கடமைக்காலத்தில் சமூகம் சார் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு மாணவர்களினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்தில் பங்கேற்றமையினை பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுகாலத்தில் பலசமூக, சமயபணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழஎல்லாம் இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டிப் பிராத்திக்கின்றேன்.

**சி.சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வட மாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோருடன் மணிவிழா நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகி குடும்பத்தினருடன்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தினது அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களது சேவையினைப் பாராட்டி வெளியிடப்படும் **"ரேவதியம்"** இதழிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1982 ஆம் ஆண்டில் ஆசிரியராகப் பணியினை ஆரம்பித்த இவர் 18 ஆண்டுகள் ஆசிரியராகவும் 18 ஆண்டுகள் அதிபராகவும் கல்விப் பணியாற்றி ஓய்வுபெறுகின்றார். யாழ் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரியான இவர் தனது ஆசிரியப் பணியினையும் அதிபர் பணியினையும் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி, வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராய் இவர் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. பாடசாலைகளினது பௌதிக வளத்தேவைகளை நிறைவு செய்வதிலும், மாணவர்களது கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகளின் மேம்பாட்டிற்காகவும் அயராது உழைத்தவராவார்.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளைப் பாராட்டுவதோடு, இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல
මගේ අංකය
My No.

உமது இல
ඔබේ අංකය
Your No.

திகதி
දිනය
Date

# வவுனியா வடக்கு பிரதேச சபை
# වවුනියාව උතුරු ප්‍රාදේශීය සභාව
# VAVUNIYA NORTH PRADESHIYA SABHA

நெடுங்கேணி,
வவுனியா

නෙඩුංකේනි
වවුනියාව

Nedunkerny,
Vavuniya.

## வாழ்த்துச் செய்தி



இன்று மணிவிழாக் காணுகின்ற வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் அதிபர் எங்கள் எல்லோருடைய அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி மற்றும் திரு.சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி ஆகியோருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

மானுட வாழ்வில் அறுபது அகவை என்பது மனித சிந்தனைகளின் ஒரு பகுதியிலிருந்து மறு அத்தியாயத்திற்கு பிரவேசிக்கும் ஒரு தருணமாகக் கொள்ளமுடியும். ஒரு நெருக்கடிமிக்க சூழ்நிலையில் பயணித்து அதனை விட ஒரு பரபரப்பான சூழலுக்குள் பிரவேசிக்க வேண்டிய ஒரு அவசரம் மிக்க ஒரு காலப்பகுதியாகவும் அதற்கு ஈடு கொடுத்து மிகுதியான வாழ்க்கையையினுள் சங்கமிக்க வேண்டிய தருணமாகவும் கொள்ளப்படலாம்.

இந்தவகையில் திருமதி ரேவதி பற்றிய நினைவுக் குறிப்புக்களை இவ்விடத்தில் பதிவுசெய்து கொள்ள விளைகின்றேன். எனது அயற்கிராமமான புளியங்குளத்தில் திரு.திருமதி. மார்க்கண்டு தம்பதியினரின் ஏழு பெண்களுள் இவர் இரண்டாவது மகள், தந்தையார் அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர். அந்நாளில் அவருடைய மாத வருமானத்தில் அவர்கள் ஏழு பெண் பிள்ளைகளையும் வளர்க்க வேண்டிய சூழ்நிலை. அந்நிலையிலும் அவர்களது எதிர்காலம் பற்றி அவர்கள் கண்ட கனவுகள் இன்று நிஜமாகி நின்று அதன் பூரணத்துவத்தை அமரராகி போன தந்தையும் கூடவே வாழ்ந்து புளங்காகிதத்துடன் தன் பிற்கால வாழ்வுதனை ஏற்று தள்ளாத வயதிலும் தன் இயலாமையை மறந்து மனஅமைதி கண்டு கொண்டிருக்கின்ற அவர்களது பாசத்திற்குரிய தாயாரையும் நினைத்து பார்க்கின்றேன். கால சூழ்நிலையில் இடங்கள் மாறி வாழ்ந்தாலும் பண்பாலும் குணத்தாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்து நிற்கின்ற அக்குடும்பத்தினுள் ஒருத்தியான சமூகத்தின் வழிகாட்டியாக விளங்குகின்ற திருமதி.ரேவதியையும் அவரது குடும்பத்தையும் பாராட்டுவதில் நான் பெருமை கொள்கின்றேன்.

கல்விக்காலம், பதவிக்காலம், ஓய்வுக்காலம் இவை எல்லாமே மனிதனுக்கு அனுபவங்களைதான் பகிர்ந்து கொள்ள உதவுகின்றது. பல்கலைக்கழகங்களில் பட்டம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெற்றபோதும் பண்போடு பழகி பதவிகளினால் கர்வம் கொள்ளாது தனது சீரிய நடைமுறைகளினால் எல்லோரிடத்திலும் அன்பையும் மதிப்பினையும் பெற்றுக்கொண்டவர்.

இல்லறத்திலும் இவரது பதியான திரு.கிருஸ்ணமூர்த்தி எனது மிக நிண்டகால தொழில் நிலை குடும்பநிலை நண்பன் சமூகசேவகன், வற்றாப்பளை கண்ணகி அம்மனின் தொண்டன், கர்மவீரன் இவ்வாறு பல விடயங்கள் இவரைப்பற்றி கூறமுடியும். குடும்பத்தில் பெயர் சொல்ல ஒரு மைந்தன் சிறப்பான வாழ்க்கை அமைதியுடன் தன் சுற்றத்தாருடன் சேர்ந்து வாழ்கின்ற பேறு பெற்றவர்கள்.

திருமதி. ரேவதி அவர்கள் கனகராயன்குளம் மகாவித்தியாலயத்திற்கு அதிபராக வந்த கடந்த நான்கு வருடங்களில் கல்விசார் விடயங்களிலும் மாணவர்களின் ஒழுக்கம் சார்ந்த விடயங்களிலும் அவர் காட்டிய அக்கறை அதற்காக அவர் சமூகத்தினருடன் சேர்ந்துபங்காற்றியவிதம் இனி இங்கு பணியாற்றி வருபவர்களுக்கு ஒரு உதாரணமாகக் கொள்ளமுடியும். பல சிக்கலான தருணங்களையெல்லாம் தன் சமயோசித் திறமையால் அவற்றை சமாளித்து வெற்றி கண்டவர். அந்தவகையில் இக்கல்லூரியின் பணிகளில் இணைந்து கொண்ட நேரங்கள் எனக்கு மனநிறைவை தருகின்றது. இவரது எண்ணற்ற பல விடயங்களை இவ்விடத்தில் நினைவு கூரலாம். எனவே இன்றைய மணிவிழா நாயகி திருமதி.ரேவதிகிருஸ்ணமூர்த்தி அவர்களும் அவர்களது வாழ்க்கைத்துணையான திரு.சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தியும் பிள்ளைகளும் இந்த உலகத்தில் தமது வாழ்நாளில் நகமும் சதையும் போல் ஈருடலும் ஒருயிருமாக வாழ்ந்து வாழ்வில் காணவேண்டிய அத்தனை பேறுகளையும் பெற்றுவாழ எல்லாம்வல்ல புளியங்குளம் பதி வேலாயுதப் பெருமானின் பூரணமான அருள் கிட்டவேண்டும் எனமனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சபாரத்தினம் தணிகாசலம்**
தவிசாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" என்ற ஔவையார் வாக்கிற்கமைய பெறற்கரிய பேறான இம் மானிடப் பிறவியை எடுக்கும் நாம் பிறக்கின்றோம், வாழ்கின்றோம், மடிகின்றோம். இவ்வாறான வாழ்வியல் சுழற்சியில் எமக்கு கிடைத்த அரிய பிறவியை எவ்வாறு வினைத்திறனாயும், பயனுறுதிமிக்கதாயும் வாழ்ந்தோம் என்பதை நாம் வாழ்த்த சமூகம் எம் ஓய்வுக்காலத்தில் வெளிப்படுத்தும் பிரதிபலிப்புக்களைக் கொண்டு நாம் உணர்ந்து கொள்ளலாம்.

அந்தவகையிலே சேவைசார் அரச பணிகளுள் போற்றத்தக்கதான சேவையே ஆசிரியர் சேவை. "எழுத்தறிவித்தவன் இறைவன்" என போற்றும் அளவிற்கு வைத்து நோக்கப்படும் சேவையே வாழ்க்கைப்பணியாக கிடைப்பது பெறற்கரிய வரம். இத்தகைய வரத்தை 21.04.1982 அன்று பெற்றுக்கொண்டு வ/பட்டிக்குடியிருப்பு அ.த.க.பாடசாலையில் தன் பணி வாழ்வை ஆரம்பித்தார் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அம்மையார்.

வவுனியா வடக்கு பிரதேசத்தில் நாட்டின் அசாதாரண சூழ்நிலையிலும் பல சவால்களை எதிர்கொண்ட வண்ணம் கல்வியை கற்கும் சிறார்களே! அதிகம் இவர்களுக்கு தாய்க்கு தாயாக சிறந்த பாதுகாவலராக வழிகாட்டியாக அன்புடனும், கருணையுடனும் கற்பித்து அவர்களும் அவர்கள் குடும்பங்களும் நன்நிலையடைய சேவையாற்றியுள்ளார்.

தொடர்ந்து மாணவர்களுக்கு மட்டும் கற்பித்து வாழ்நாள் ஆசிரியராக மட்டும் வாழாது தன்னுடைய சுயமுன்னேற்றத்திலும் சளைக்காது பாடுபட்டு தொடர்கல்வி கற்று அதிபர் சேவைக்கு தரமுயர்த்தப்பட்டு வவுனியா வடக்கு பாடசாலைகளில் அதிபராக சேவையாற்றி தனது சிறந்த நிர்வாகத்திறனை வெளிப்படுத்தியவர்.

பெண்கள் இன்றைய காலகட்டத்தில் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் அத்தனை தடைகளையும் உடைத்தெறிந்து ஏனைய பெண்களுக்கு முன்னுதாரணமாக உள்ளவராக இவரது சேவை உன்னத நிலையை அடைந்தது எல்லோராலும் மெச்சத்தக்க ஒன்றாக இருக்கின்றது.

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலேல் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பட வைத்த சிறந்த தலைமைத்துவம் மிக்க பெண் ஆளுமையாளரான இவருக்கு **"ரேவதியம்"** என்ற நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இவரது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று மனசாந்தியுடன் வாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்புரியவேண்டும் என ஆசி கூறி வாழ்த்தி நிற்கின்றேன்.

**க.பரந்தாமன்**
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
வவுனியா வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமளிப்பு விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் மணிவிழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் **"ரேவதியம்"** எனும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் அகமகிழ்வடைக்கின்றேன்.

தனது சேவைக்காலத்தில் ஆசிரியராக, அதிபராக கடமையை அலங்கரித்த திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் கல்விப்புலத்தில் ஆற்றிய சேவை அளப்பரியது. இவர் எமது வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் முன்னணி பாடசாலைகளான வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி, வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் கடமைகளை பொறுப்பேற்று அதிபராக பணியாற்றும் போது இவரது அர்ப்பணிப்பானதும் கடமையுணர்வுடனுமானதுமான சேவையைக் கண்டு நான் மெய்சிலிர்க்கின்றேன். இவரது காலத்தில் இப்பாடசாலைகள் கல்வியிலும் விளையாட்டிலும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கிற்று. நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையுடனும் செயலூக்கம் கொண்ட இவரின் பணி பாராட்டப்படவேண்டியது.

தனது பணியை மனநிறைவுடன் நிறைவேற்றி அறுபதாவது அகவையை எட்டி மணிவிழாக்காணும் இவர் தனது ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புடன் தமது குடும்பத்தாருடன் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

ஓய்வுகாலத்திலும் இவரது அர்ப்பணிப்பான சேவை எம் கல்விச் சமூகத்திற்கு கிடைக்கும் என நம்புகின்றேன்.

**திருமதி.அன்னமலர் சுரேந்திரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வவுனியா வடக்கு,
புளியங்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி எமது வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நெடுங்கேணிக் கோட்டத்தில் ஆசிரியராக பதினெட்டு வருடகாலமாகவும், அதிபராக பதினெட்டு வருடகாலமாகவும் மொத்தமாக முப்பத்தாறு வருடங்களை எமது மண்ணில் எமது மாணவர்களின் கல்விக்காக தன்னை அர்ப்பணித்து இன்று தனது அகவை அறுபதினை பூர்த்தி செய்கிறார்.

இவ்வேளையில் இவரின் சேவையில் எமது நெடுங்கேணிக் கோட்ட மாணவர்களின் கல்வி நிலை உயர்ச்சியைக் காட்டியதோடு, இவரின் வழிகாட்டலின் கீழ் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று பயின்று பட்டத்தை ஈட்டி நாட்டின் நற்பிரசைகளாகத் திகழ்கின்றனர். ஆசிரியன் என்பவன் தனியே கற்பித்தல் செயற்பாட்டை மட்டும் மேற்கொள்பவன் அல்ல. தன்னிடம் வரும் மாணவனின் உடல், உள நிலைகளை அறிந்து அதற்கேற்ப ஓர் ஒழுக்கமுள்ள நற்பிரசையாக முன் கொண்டு வருவதே ஆசிரியப்பணியின் மகத்துவமாகும். இவ் அரிய பணியினை திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் மிகவும் காத்திரமாக நிறைவேற்றியுள்ளார். இவரின் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் கீழ் ஓர் வளம் மிகுந்த சமூகம் எமது மண்ணிற்கு கிடைத்துள்ளது என்றால் அது மிகையாகாது. அதைவிட அதிபராகக் கடமையாற்றிய அனைத்து பாடசாலைகளிலும் தனது நிர்வாகத் திறமையினால் ஆசிரியர்களை ஒன்று திரட்டி வளமான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கு மிகவும் உறுதுணையாக நின்று சாதித்து காட்டியுள்ளார்.

நெடுங்கேணிக் கோட்ட மக்களின் முத்தாகத் திகழும் திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் தனது அளப்பரிய சேவையின் மூலம் மக்களின் மனதிலும் நீங்கா இடத்தைப் பிடித்துள்ளார்.

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்"

என்ற ஔவையாரின் கூற்றுக்கு இணங்க தனது வாழ்நாளில் பிறரைப் பற்றி ஒருநாளும் குறைகூறுவதில்லை. அவ்வாறு குறைகள் காணப்பட்டாலும் உரிய நபரிடம் உரியவேளையில் எடுத்துக்கூறி அக்குறையை நீக்குவதில் இவரின் குணம் சிறப்பானது.

அகவை அறுபதில் காலடி எடுத்து வைக்கும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் எல்லா சிறப்புக்களும் பெற்று தனது குடும்பத்தாருடன் பல்லாண்டு காலம் நிறைவுற வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**வே.கிருபானந்தமூர்த்தி**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நெடுங்கேணி கோட்டம்,
புளியங்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம்
மாகாண சபை உறுப்பினர் (முன்னாள் சுகாதார அமைச்சர்)
வவுனியா மாவட்டம்

Dr.Pathmanathan Sathiyalingam
Member of Provincial Council (Former Minister of Health)
VAVUNIYA DISTRICT

வடக்கு மாகாண சபை  Northern Provincial Council

# வாழ்த்துச் செய்தி



வவுனியா மாவட்டத்தில் கடந்த 36 வருடங்களுக்கு மேலாக ஆசிரியர் சேவையில் பணியாற்றி மணிவிழாக் காணும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் மணிவிழா மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.திருமதி.சொ.மார்க்கண்டு தம்பதிகளின் மகளாக பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை வ/புளியங்குளம் இந்துக்கல்லூரியிலும், உயர்கல்வியை வ/ஓமந்தை மத்திய கல்லூரியிலும் பின்பு பட்டப்படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், (1982-1985) பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை தேசிய கல்வி நிறுவகத்திலும் (1994) பயின்றார்.

1982 இல் ஆசிரியர் சேவையில் பிரவேசித்த இவர் 18 வருடங்கள் ஆசிரியராகவும், 18 வருடங்கள் அதிபர் சேவையிலும், பதவிகளை வகித்து வந்துள்ள தரம் 1 அதிபராவார். இதற்கு அப்பாற்பட்டு பல்வேறுபட்ட சமய, சமூக மற்றும் கலைத்துறை சார்ந்த சேவைகளை ஆற்றிவருகின்ற ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இவரது ஓய்வுகாலம் சிறப்புற அமையவும், இவரும், இவரது குடும்பத்தினரும் நோய் நொடியற்று சிறப்புடன் வாழவும் வாழ்த்துகின்றேன்.

நன்றிகள்....

மக்கள் சேவையில்,
**மருத்துவர் ப.சத்தியலிங்கம்**
முன்னாள் சுகாதார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஆசிரியராக அதிபராக கடமையாற்றி, தனது அறுபதாவது வயதில் அதிபர் சேவையில் ஓய்வுபெறும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் இதுவரை காலமும் கல்விப்பணிக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படவுள்ள மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட புளியங்குளம் கிராமத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட இவர் ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வி என்பவற்றை புளியங்குளம் இந்துக்கல்லூரியில் கற்று உயர்கல்வியை ஓமந்தை மத்திய கல்லூரியிலும் பயின்று தனது பட்டப்படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பயின்று வந்துள்ளார்.

தனது அரசவேலையில் முதல் நியமனமாக ஆசிரியராக 1982ல் பட்டிக்குடியிருப்பு அ.த.க.பாடசாலையில் தனது கல்விச் சேவையை ஆரம்பித்து தொடர்ந்து தான் ஆரம்பக்கல்விகற்ற புளியங்குளம் இந்துக்கல்லூரியில் சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் 1985ம் ஆண்டு தொடக்கம் 2000ம் ஆண்டுவரை ஆசிரியராக பணிபுரிந்து பின் அதே பாடசாலையான புளியங்குளம் இந்துக்கல்லூரியில் 04.08.2000 ம் ஆண்டு தொடக்கம் 31.12.2002 வரை அதிபராகவும் பின் புதுக்குளம் மகா வித்தியாலயத்திலும் அதன்பின் திரும்பவும் புளியங்குளம் இந்துக்கல்லூரியில் கடமையாற்றி பின் கிடாச்சூரி அ.த.க.பாடசாலையிலும் ஒருவருடம் தனது அதிபர் சேவையை பணியாற்றி திரும்பவும் புளியங்குளம் இந்துக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றி 2015ம் ஆண்டில் இருந்து 12.03.2019ம் வரை தனது அறுபது வயதை பூர்த்தியாகி ஓய்வுபெறும் போது கனகராயன்குளம் மகாவித்தியாலயத்திலும் தமது கல்விக்கான பயணத்தை தனது பிரதேசத்திற்குள்ளேயே மாறிமாறி சேவை செய்து எமது பிரதேச மாணவர்களை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவராவார்.

இவரைப்பற்றி குறிப்பிட்டுக்கூறுவதானால் இவரது குடும்பத்தினரை சிறுவயதிலிருந்தே எனக்கு நன்கு தெரியும். இவர் எனது நண்பனான கிராம சேவையாளரான சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி என்பவரைத் திருமணம் செய்து அழகான ஓர் அபிநயன் என்ற ஆண்பிள்ளையையும் பெற்று வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர் சிறந்த ஆசிரியராகவும் சிறந்த அதிபராகவும் சிறந்த நிர்வாகியாகவும் இருந்து கல்விச்சமூகத்துக்கு அளப்பரிய சேவையை செய்து அரசசேவையில் இருந்து ஓய்வுபெறும் இவர் தனது கணவர் பிள்ளைகளுடன் சந்தோசமாக இருந்து நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**ம.தியாகராசா**

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்,
வவுனியா மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2015 ல் இடம்பெற்ற யாழ்.தினக்குரல் கல்விச்சங்கமம் நிகழ்வில்**
**தேசிய தரம் 05 புலமைப்பரிசில் சாதனையாளர் கௌரவிப்பின் போது...**




**SUWASARA THAKSALAWA - 2016**
**on 14th February 2016, At Central Environmental Authority Auditorium**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி கல்விப்புலத்தில் ஆசிரியராகவும், அதிபராகவும், சேவையாற்றி ஓய்வுபெறுவதை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி என்று சொல்லும் பொழுது திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களுடைய உருவமும், சிறப்பான செயற்பாடுகளும் என்மனதில் நினைவிற்கு வருகின்றன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் போது கல்லூரியின் செயற்பாடுகளை பல்வேறு இடங்களிலும், சூழ்நிலைகளிலும் கட்டிக்காத்து, தக்கவைத்து மீண்டும் அதே இடத்தில் கல்லூரியை நடாத்துவதற்குப் பொருத்தமான வளங்களைப் பெற்றுச் செயற்பட்டமை அவரது ஆளுமைக்கும், தலைமைத்துவத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கிவருகின்றது. நிமிர்ந்த மிடுக்கான தோற்றமுள்ள இவ் அதிபர் கல்வி அலுவலகஅதிகாரிகளுடனும், ஏனைய பாடசாலைகளின் அதிபர்களுடனும், தனது ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் பண்பானமுறையில் பழகி வந்ததையும், மற்றவர்களை மதிக்கும் பண்பையும் அளவான வார்த்தைப் பிரயோகத்தையும் கொண்ட அதிபராகவே அப்பொழுதும் இப்பொழுதும் எனக்குத் தெரிகின்றார். தனது கல்லூரி மாணவர்களின் கல்வித்தரவிருத்திக்கும் பெறுபேற்றுகளின் உயர்ச்சிக்கும் மாணவர்களது விழுமியங்களின் வளர்ச்சிக்கும் இயன்றவகையில் சேவையாற்றி வந்துள்ளதை நான் அறிவேன்.

தொடர்ந்தும் வன்னிமக்களின் கல்விவளர்ச்சிக்கு ஓய்வின் பின்னரும் தனது சேவையை வழங்கவேண்டும். அதற்கான உடல் ஆரோக்கியத்தையும், தன் குடும்ப வாழ்வின் பிற்காலப் பகுதியை சிறப்பாக வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து, எனது நல்லாசிகளையும் திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்திக்கும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்புடன்
**த.மேகநாதன்**
ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய தற்போதைய அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களை, மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சீரும் சிறப்புடன் வாழ்க பல்லாண்டு.

இப் பாடசாலையில் 1990 தொடக்கம் 1995 வரை நானும் அதிபராக இருந்தபடியால் அப் பாடசாலையிலும், நடைபெறும் நிகழ்வுகளிலும் எனது பாடசாலை என்ற உணர்வு இன்றும் உள்ளது. அந்தவகையில் மணிவிழா நாயகி கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் இருந்து ஓய்வுபெறுவது மிகச்சிறப்பானது.

மணிவிழா நாயகியை முதன்முதலில் அமரராகிவிட்ட ஓமந்தை பிறப்பு, இறப்பு பதிவுகாரர் சின்னத்துரை அவர்களின் மகன். செல்வராசா அவர்களுடன் புளியங்குளம் வீட்டுத்திட்டத்தில் உள்ள இவர்களது வீட்டுக்கு சென்ற போது அறிமுகமாகினார். தொடர்ந்து புளியங்குளம் இந்துக்கல்லூரி ஆசிரியையாக, பிரதிஅதிபராக கடமை புரியும் போது மிக கூடுதலான அறிமுகமும் ஏற்பட்டது. புளியங்குளம் இந்துக்கல்லூரி அதிபராகவிருந்த அமரர். திரு.இரா.வரதராஜன் அவர்களது வழிகாட்டலிலே சிறந்த கடமை உணர்வு, விசுவாசம், நம்பிக்கை கொண்ட ஆசிரியையாக பிரதிஅதிபராக கடமை புரிந்ததை காணமுடிந்தது. இவர்களது தாய், தந்தை சாவகச்சேரியாகினும் திருமதி ரேவதி அவர்களது சேவை வன்னி மண் பிள்ளைகளுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. புளியங்குளம் இந்துக்கல்லூரியில் மிக நீண்டகாலம் அதிபராக இருந்து அர்ப்பணிப்புடன் கடமை புரிந்தார். அதன்பின்பு இப்போதைய வ/கனகராயன்குளம் மகாவித்தியாலய அதிபராகச் சென்று அரும்பெரும் சேவைகளைப் புரிந்து பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் நல்ல பெயரையும் புகழையும் பெற்றுள்ளார். பொறுமையாக நிதானமாக சிந்தித்து முடிவுகளை எடுக்கக் கூடியவர். சிறப்பான கடமையுணர்வு கொண்டவர். போர் நடைபெற்ற காலங்களில் இவரது அர்ப்பணிப்பான சேவையைக் காணமுடிந்தது.

திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அதிபரது மணிவிழா நிகழ்வை **"ரேவதியம்"** எனும் நூல் வெளியீட்டுடன் பெற்றோரும் பழைய மாணவர்களும், புலம்பெயர் பழைய மாணவர்களும் ஒன்றிணைந்து நடாத்துவதையிட்டு மிக்க மகிழ்ச்சி. மணிவிழா சிறப்புற வாழ்த்தும், ஆசியும் வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

**ம.ச.பத்மநாதன்**
முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
வவுனியா வடக்கு,
ஓய்வுநிலை அதிபர்,
வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வன்னி மண்ணின் புகழ்பூத்த பழம்பெரும் கிராமங்களில் ஒன்றான பட்டிக்குடியிருப்புக் கிராமத்தின் வ/பட்டிக்குடியிருப்பு அ.த.க.பாடசாலையில் 1982 ஆம் ஆண்டு தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து, தொடர்ந்து வ/புளியங்குளம் இந்துக்கல்லூரியின் ஆசிரியராகவும், அதிபராகவும் நீண்டகாலம் கடமையாற்றி அதன்பின் வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் கடமையாற்றி ஓய்வுபெறும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் **"ரேவதியம்"** மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தன்னுடைய வசதியைக் கருத்தில் கொள்ளாது பின்தங்கிய பிரதேசத்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டையே நோக்காகக் கொண்டு தினமும் நீண்டதூரம் பிரயாணம் செய்து அவர் ஆற்றிய சேவை போற்றுதற்குரியது. நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க தன்னம்பிக்கை, திட்டமிட்ட வாழ்வு முறைகள், விடாமுயற்சி, தியாக உணர்வு, தன்னலமற்ற பணிகள் என்பன இவரின் தீவிர சிந்தையில் எழுந்ததால் பாரதியின் மாதவப் பெண்ணாக மலர்ந்தார்.

பெரிய பதவியில் உள்ளவர்கள் அல்லது பொறுப்பான விடயங்கள் கலந்துரையாடப்படுகின்ற போது தன்னடக்கமாகவும் பொறுப்புடனும், வினையமாகவும் தீர்க்கமாகவும் உரையாடுகின்ற பண்பு சிறப்பானது. அவர் ஒருவிடயத்தைக் கூறினால் அது சரியாக இருக்கும் என்று மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் தனது கருத்துக்களை சீர்தூக்கிப்பார்த்து பொருத்தமாகக் கூறுதல் சகஅதிபர்களுடன் நட்புரிமையுடன் பழகுதல் என்பன அவரது தனிச்சிறப்பு.

காலம் யாருக்காகவும் காத்து நிற்பதில்லை. 60 அகவை அரச சேவையில் ஓய்வுகாலம். இருந்தும் தங்களின் கல்விப்பணி மேலும் தொடரவும் ஓய்வுகாலத்தில் தங்கள் குடும்பத்தினருடனும் உறவுகளுடனும் பல்லாண்டுகாலம் மகிழ்வோடும் தேகாரோக்கியத்துடன் வாழவும் இறையாசி வேண்டி வாழ்த்துகிறேன்.

**ச.சுபாஸ்கரன்**
அதிபர் - வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்,
தலைவர் - அதிபர் சங்கம்,
வவுனியா வடக்கு கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பள்ளியின் முதற்பெண் முதல்வர்



அறுபதாவது அகவையில் தடம்பதிக்கும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களது மணிவிழா மலரில் அவர் பற்றிய எனது மனப்பதிவை பதிவுசெய்து கொள்வதில் அகமகிழ்வடைகிறேன்.

சமகாலத்தில் நாம் இருவரும் பல்கலைக்கழக மாணவர்களாக, ஆசிரியர்களாக, பிரதிஅதிபர்களாக, அதிபர்களாக கடமையாற்றிய ஒவ்வொரு காலகட்டத்தையும் நினைத்துப் பார்க்கிறேன். நாம் இருவரும் அயல் கிராமங்களில் வாழ்ந்த போதும் அவரது அறிமுகம் யாழ் பல்கலைக்கழகத்தில் தான் ஏற்பட்டது. என்னைவிட ஒரு வருடம் சிரேஸ்ர மாணவியாக அவர் இருந்தார். இதுவே எங்களுக்கான பிணைப்பின் ஆரம்பம் எனலாம்.

பட்டிக்குடியிருப்பில் இருந்து கனகராயன்குளம் வரை ஏறக்குறைய 36 வருடங்கள் கல்விப் பணியை ஆற்றயிருக்கும் அவர் மிகச்சிறந்த ஆசிரியராக விளங்கினார். புளியங்குளம் பிரதேசத்தில் உள்ள ஆசிரியர்கள், அரசஉத்தியோகத்தர்கள் பல்கலைக்கழகம் சென்ற பல மாணவர்கள் மற்றும் கற்றவர்கள், வல்லவர்கள், நல்லவர்கள் யாவரும் அவர்தம் மாணவர் பரம்பரையைச் சேர்ந்தவர்களே என்பது மிகையல்ல.

நல்லதொரு ஆசான் தான் நல்லதொரு அதிபராக தொழிற்படமுடியும் என்பதற்கமைய அவருடைய ஆசிரியப் பணி விதந்து போற்றப்படக் கூடியதொன்றாகும். அவர் பல பாடசாலைகளில் சேவையாற்றி இருந்தாலும் கூட அவரை புளிங்குளம் இந்துக் கல்லூரியில் இருந்து பிரித்துப்பார்க்கமுடியாது. அவரது 36 வருடசேவையில் ஏறக்குறைய 26 வருடங்களுக்குமேல் அவரது பணி அப்பாடசாலையிலே தான் கழிந்திருக்கின்றது. ரேவதி என்றால் புளியங்குளம் இந்துக்கல்லூரி என்று விதந்து பேசப்படும் அளவிற்கு அவர் அந்தப் பாடசாலையோடும் அந்த மக்களோடும் நெருக்கமான உறவையும் பிணைப்பையும் கொண்டுள்ளார். பல்வேறு நெருக்கடியான கால கட்டங்களில் எல்லாம் அப்பாடசாலையை வழி நடத்திச் சென்ற பெருமை அவருக்கே உரியது.

எமது வலயத்தில் ஒரு மூத்த அதிபராக இருக்கும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் அறிவும் ஆளுமையும் நேர்மையும் நியாயமும் கடமையுணர்வும் சேவை மனப்பாங்கும் கொண்ட அதிபராக விளங்குவதற்கு வித்திட்ட பெருமை முன்னாள் புளியங்குளம் இந்துக்கல்லூரி அதிபர் திரு.இ.வரதராசன் அவர்களையே சாரும் என நான் நினைக்கின்றேன். அவரின் நெறிப்படுத்தலிலும் வழிப்படுத்தலிலும் தான் அவர் உருவாக்கப்பட்டார். **“கீழ்ப்படியக் கற்றுக்கொள் கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்”** என்பதற்கு இணங்க திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் தனது மேலதிகாரிகளுக்கு பணிந்து நடந்து கொண்டதன் விளைவு தான் அவர் இன்று உயர்நிலை அடைவதற்கு மூலகாரணமாகும். 96 வருட வரலாற்றைக் கொண்ட கனகராயன்குளம் மகாவித்தியாலய வரலாற்றில் முதல் பெண் அதிபர் என்ற வரலாற்றுப் பெருமையும் சிறப்பும் இவருக்கே உரியது. மணிவிழா நாயகி தனது குடும்பத்துடன் பல்லாண்டு காலம் நோயின்றி நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**சண்முகம் நித்தியானந்தன்**

அதிபர் - தவசியாகுளம் அ.த.க. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத் துணைத்தூதுவர் கௌரவ அ.நடராஜன் அவர்கள்
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்திற்கு சமூகமளித்த போது...



19.11.2016 ல் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலையின்
நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட போது...



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற
கல்விக் கண்காட்சியின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



ஈழ மணித்திருநாட்டில் நீர்வளம், நிலவளம் சிறந்து விளங்கும் வன்னி மண்ணின் பெருமைதனை எடுத்துரைக்கும் வடக்கு வலயத்தில் உள்ள பாடசாலைகளிலே கல்வி கற்று நகர்ப்புறம் நோக்கிச் செல்லாமல் வன்னிக் குழந்தைகளாகவே சேவையாற்றி மணிவிழாக் காணும் என் அன்புச்சகோதரி திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் **"ரேவதியம்"** மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு அகமகிழ்கின்றேன்.

தலைமைத்துவம் என்பது சகல மாணவர்களும் சிறந்த கற்றல் விளைவுகளை அடைய வைப்பதற்காக பாடசாலையை அதிக இயங்கு தன்மையுடையதாக ஆக்கும் ஒரு அதிபராக மிளிர்ந்தவர்.

இன்றைய உலகில் அதுவும் இலங்கையில் சவால் நிறைந்த ஒரு தொழிலாக வருகின்றமை பலரும் அறிந்ததே. சவால்களை எதிர்கொண்டு எமது சமுதாயம் பின்நோக்கிச் செல்லாது இருக்க அயராது பாடுபட்ட அதிபர்களுள் இவரும் ஒருவர்.

வடக்கிலே இருள் சூழ்ந்த மேகங்களிடையேயும் ஒளியேற்றிய தாரகை. சிறந்த நிர்வாகி மட்டுமல்ல மற்றவர்களை மதித்தல், உதவுதல் போன்ற நற்பண்புகளுடன் கள்ளம் கபடமில்லா வார்த்தைகளால் உள்ளம் நெகிழ வைக்கும் ஒரு மடந்தை. பன்முக ஆளுமை கொண்ட பெண். ஏனைய தொழில்கள் போலன்றி சேவை மனப்பாங்கோடு செய்கின்ற சேவைக்கும் பொருத்தமானவர் என்பதில் நானும் பெருமகிழ்வடைகின்றேன்.

வடக்கு வலயத்திலே ஒன்பது வலயக்கல்விப் பணிப்பாளர்களுடனும் சேவையாற்றிய பெருமைக்குரியவர். மனிதனுக்குரிய விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு இன்முகத்துடன் பணியாற்றி சரிநிகராக எல்லோரிடமும் பழகும் ஒரு அதிபர் அறுபது அகவை காண்பது மகிழ்ச்சியாக இருந்தாலும் பிரிவு என்பது எமக்கு ஒரு இழப்பே. நான் கண்ட நல்ல மனிதர்களில் அகத்தினில் நிறைந்தவர்களில் ரேவதி கிருஸ்ணமூர்த்தியும் ஒருவர். தனிப்பட்ட முறையில் நல்லதொரு குடும்பப் பெண். தற்பெருமையற்ற கணவர் கிருஸ்ணமூர்த்தி. ஆசைக்கும் ஆஸ்திக்கும் ஒரேயொரு அன்பு மகன். மணிவிழாவும் அகவை அறுபதும் காணும் அன்பு அக்காவை, மணிவிழா நாயகியை பெருமையுடன் வாழ்த்துகிறேன். வாழ்க வளமுடன்.

**திருமதி.க.சொக்கலிங்கம்**
அதிபர் - S.L.P.S-1,
வ/புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் கல்விப் பணியாற்றி அரச சேவையில் இருந்து பணி நிறைவுபெறும் இந்நாளில் வாழ்த்துவதிலும், சேவையின் தடமாய் வெளிவரும் **"ரேவதியம்"** மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் மிக மகிழ்கின்றேன்.

1959 ல் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை வ/புளியங்குளம் இந்துக் கல்லூரியிலும், க.பொ.த.(உ.தர)க் கல்வியை வ/ஓமந்தை மத்திய கல்லூரியிலும் பயின்ற யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். 1982ல் ஆசிரியர் நியமனம் கிடைக்கப்பெற்று பல பாடசாலைகளில் கடமையாற்றியிருந்த போதிலும் எமது பாடசாலையில் ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக பல வகிபாகங்களில் 27 வருடங்களுக்கு மேலானகாலம் கடமையாற்றியுள்ளார் என்பது அவரின் கிராம, பிரதேச பற்றினையும், சமூக முன்னேற்றத்துக்கான கரிசனையையும் எடுத்துக் காட்டுகின்றது.

பல ஆண்டுகளாக கடந்து போன கடுமையான சூழலிலும் கடமையாற்றிய இவர் அக்காலப்பகுதியில் தன்னையும் தனது குடும்பத்தையும் மட்டுமன்றி கூடவே மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாதுகாக்கவேண்டிய இயல்பான பொறுப்பினைக் மேற்கொண்டு பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் முக்கிய ஆவணங்களைப் பேணிப் பாதுகாத்த பெருமையும் இவருக்குரியது.

கல்விப் பணி என்பது மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணி செய்கின்ற அனைத்து அலுவலர்கள், பெற்றோர்கள் போன்ற பலராலும் அறிவார்ந்த முறையில் மிக நேர்த்தியானதும், நுட்பமானதுமான வழிமுறைகள் ஊடாக ஆழ்மனது ஈடுபாட்டுடன் செயற்பட்டால் மட்டுமே.

எதிர்பார்த்த நிலையை அடையக்கூடியதொன்றாகும். அதற்கேற்ற மனஉந்துதல் வேண்டும். ஊக்கம் மனதின் அடித்தளத்திலிருந்தும் வெளியிலிருந்தும் கிடைத்தல் வேண்டும். உயர்ந்த எண்ணம் கொண்ட உள்ளம் எல்லோரையும் உயர்த்தவல்லது. தொடர்ந்தும் இவ்வாறு பொதுப்பணியாற்றி வெற்றிகள் பல காணவேண்டும். நீண்டஆயுளும் நோயற்ற வாழ்வும் நிறைந்த செல்வமும் பெற்று உயர்ந்த வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

அப்போதுதான் நாம் நினைத்த இலக்குகளை இலகுவாக அடையமுடியும். இவ்வாறே எதிர்காலத்திலும் பொதுப்பணியாற்றி மனநிறைவோடு நீண்டஆயுளும், நோயற்ற வாழ்வும், நிறைந்த செல்வமும் பெற்று உயர்ந்த வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

"உயர்ந்த எண்ணம் கொண்ட உள்ளம் எல்லோரையும் உயர்த்தவல்லது"

**ச.பரமேஸ்வரநாதன்**
அதிபர்,
வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் வரலாற்றில் தடம் பதித்த அதிபர் திருமதி. ரேவதி கிருஸ்ணமூர்த்தி அம்மையாரின் மணிவிழா தொடர்பில் வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்வு கொள்கின்றேன்.

36 வருடங்கள் வவுனியா மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக இடர்மிகுந்த காலக்கட்டத்திலும் சோர்வின்றிப் பணியாற்றியவர். பதினெட்டு ஆண்டுகள் ஆசிரியராகவும் பதினெட்டு ஆண்டுகள் அதிபராகவும் சேவையாற்றியுள்ளார். எமது கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் ஒரு 1AB பாடசாலையாக, தரம்பெற்ற போது பாடசாலையின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் அயராது பல்முயற்சிகளை மேற்கொண்டு பல்கலைக்கழகத் தெரிவுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் எம் பிரதேசத்துப் பிள்ளைகளை அனுப்பிவைப்பதில் பெரும் பங்காற்றியவர்.

ஒரு மனிதனின் வாழ்வு வளம்பெற சமூகசேவை முக்கியமானது. அம்மையார் ரேவதி அவர்களின் கல்வியினூடாக சமூக சேவையினை எமது சமூகத்திற்கு வழங்கியுள்ளார். சேவை மீதான விருப்பு, மக்கள் மீதான விசுவாசம், சமூக அங்கத்தவர்களோடு சேர்ந்தியங்கும் இயல்பு, ஆன்மீக ஈடுபாடு ஆகிய நற்பண்புளைக் கொண்டு சமூக ஈடுபாட்டுடன் சேவைதனை ஆற்றியவர்.

எமது பாடசாலையின் நிறைவேற்று அபிவிருத்திக் குழு சார்பான மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் செயலாளர் என்றவகையில் மகிழ்வடைகின்றேன். ஓய்வின் பின்னர் அவரின் வாழ்வு வளம்பெறவும், ஆரோக்கியமான வாழ்வு அமையவும். மகிழ்வான நாட்கள் கிடைக்கப்பெறவும் எல்லாம்வல்ல புதூர் ஸ்ரீ நாகதம்பிரானை வேண்டி நிற்கின்றேன்.

**"சேவையைச் சேவையாய் வழங்கும் அர்ப்பணிப்பு மிக்க மனிதர்கள் சேவையால் மதிக்கப் பெறுவர்"**

நன்றி.

**ந.ஞானசுந்தரம்**
செயலாளர்,
பாடசாலை நிறைவேற்று அபிவிருத்திக் குழு,
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக்காணும் நாயகிக்கு வாழ்த்துச் செய்தி



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றி மணிவிழாக்காணும் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

வீரம் விளைந்த வன்னி பெருநிலப்பரப்பில் பெயர்பெற்று விளங்கும் கிராமங்களில் நிலவளமும், நீர்வளமும் நிறைந்து வளங்கொழிக்கும் ஒரு கிராமம்தான் கனகராயன்குளம். இக்கிராமத்தைச் சூழ்ந்து பத்திற்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் காணப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் அறிவுக்கூடமாகவும், தாய்ப்பாடசாலையாகவும் விளங்குவது வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம் ஆகும்.

1923 ஆம் ஆண்டில் முற்போக்காளர் ஒருவரின் சிந்தனைக் கருவூலத்தில் முகிழ்ந்த இப்பாடசாலை இன்று நூற்றாண்டு விழாவை அண்மித்து வானளவில் உயர்ந்து நிற்கின்றது. அந்தவகையில் பல்கலைக்கழகத்திற்கு மாணவர் தெரிவு, க.பொ.த.சாதாரணச் சித்தி, விளையாட்டுக்கள், கலை, கலாசாரம் மற்றும் ஏனைய பல துறைகளில் வவுனியா மாவட்டத்திலும் குறிப்பாக வவுனியா வடக்கு கல்வி வலயத்திலும் வெற்றிவாகை சூடும் பாடசாலையாகத் திகழ்கின்றது.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அரும்பணியாற்றி இருக்கின்றார்கள். அந்தவகையில் 06.07.2015 அன்று இப்பாடசாலையின் இருபத்து ஆறாவது அதிபராக (பாடசாலையின் எழுத்து மூல ஆவணங்களின் படி) திருமதி ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் பதவியேற்றார். இவரது பதவிக்காலத்தில் பாடசாலையில் கல்வி, விளையாட்டுத்துறை, கலை, கலாசாரங்கள், சாரணியம் மற்றும் ஏனைய பலதுறைகளில் வளர்ச்சியைப் பெற்றது பாராட்டத்தக்க விடயமாகும்.

இவ்வாறாக பல சேவைகளைப் புரிந்த அம்மணி தனது அறுபதாவது அகவையில் 12.03.2019 அன்று அரச சேவைகளில் இருந்து ஓய்வுபெற்று மணிவிழாக்கோலம் காண்பதில் பெருமை கொள்கிறது வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்.

**S.P.பவிசன் B.A (Hons)**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபுரம் அ.த.க.பாடசாலை இடம்பெயர்ந்து இயங்கிய வேளை...
(துணுக்காய் வலயம்)



வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி இடம்பெயர்ந்து
சிவபுரம் பகுதியில் இயங்கிய வேளை நடைபெற்ற
விளையாட்டுப் போட்டியின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V/Kanagarayankulam Mahavidyalayam

**Alumni Association – Canada**

President: Vela Subramaniam; Secretary: Nanthini Nanthakopu; Treasurer: Thivethan Thiagarajah

Email: canada.osaofkanagarayankulammv@gmail.com; Tel: 416 786 0760

facebook Kanagarayankulam osa


# வாழ்த்துச் செய்தி



திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்கள் அகவை அறுபதை எட்டியதை ஒட்டி "மணிவிழா" செய்யப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்வடைகிறேன்.

ஒரு மனிதர் உயர்ந்தவராக விளங்குவாராயின், வாழ்வாங்கு வாழ்வாராயின் அவர் வாழ்ந்து கொண்டிருக்கும்போதே அவர் ஆற்றிய சேவைகளையும் அவரது நற்குண, பண்புகளையும் பாராட்டிக் கௌரவிப்பது சாலச்சிறந்தது. அந்தவகையில் இவ்விழா ஏற்பாட்டாளர்களுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால வட்டத்தின் சுழற்சியால் அறுபது என்ற எண் ஒரு தனிச்சிறப்புடையது. ஒரு நாளின் நேரத்தை அளவிட்டால் ஒரு நிமிடத்திற்கு 60 மணித்துளிகள்; ஒரு மணியில் 60 நிமிடங்கள் என அமைகின்றது. தமிழ் ஆண்டுகள் 60. அறுபது ஆண்டுகள் முடிந்தால் வாழ்நாளில் முதற்சுற்று முடிந்து இரண்டாவது சுற்று ஆரம்பமாவதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரை தொழில் ரீதியாக ஒருவர் ஓய்வுபெறும் ஆண்டும் 60 ஆகவே அமைந்துவிட்டது.

திரு.திருமதி.மார்க்கண்டு சொர்ணலக்சுமி தம்பதியர் ஆழ்கடல்தேடி ஈன்றெடுத்த ஏழு புதல்விகளில் இரண்டாவதாக உதித்தவர் திருமதி ரேவதி அவர்கள். இவர் கடந்துவந்த பாதைகள் மிகக் கரடுமுரடானவை. இவர் பட்ட கஷ்டங்கள், எதிர்நீச்சல் போட்ட சம்பவங்கள் சிலவற்றை இந்த இடத்தில் பதிவுசெய்வதும், பகிர்ந்து கொள்வதும் பொருத்தமானதென நினைக்கிறேன்.

இவரது குடும்பத்தில் முதன்முதலாக இவருக்கு ஆசிரிய நியமனம் 1982 ல் கிடைக்கிறது. மரணப்படுக்கையில் இருந்த தந்தையாரிடம் ஆசிரிய நியமனம் பற்றிக் கூறிய போது அவர் மகள் ரேவதியை அழைத்து குடும்ப பாரத்தைப் பொறுப்பு எடுக்கும்படியும் சகோதரிகளை ஒரு குறையும் வராதவாறு பார்த்துக்கொள்ளும்படியும் கேட்கிறார். தந்தையார் நினைத்தது போலவே இவர் பதவி ஏற்று 3 வது நாளில் குடும்பத்தை தூணாகத் தாங்கிக் கொண்டிருந்த அன்புத் தந்தையை இழக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகிறார். சிறுவயதிலேயே குடும்பப் பொறுப்பும் பாரமும் ஒருபுறம்; ஆசிரியத் தொழில் மறுபுறம்; பல்கலைக்கழகப் படிப்பு இன்னொருபுறம் என்று பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இருப்பினும் எந்தவகையிலும் சளைத்துப் போகாது தந்தையின் ஓய்வூதியம் கைக்கு எட்டும்வரை தனது தனி உழைப்பில் குடும்பத்தின் பாரத்தைச் சுமக்கும் சுமைதாங்கி ஆனார். கல்வி ஒன்றே வாழ்வை உயர்த்தும் ஏணிப்படி என்பதை அன்றே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து வழிகாட்டியாக நின்று தானும் வாழ்ந்து காட்டியிருக்கிறார்; வெற்றியும் கண்டிருக்கிறார்.

திருமதி ரேவதி அவர்கள் 26.04.1982 ல் ஆசிரியராக நியமனம் பெற்ற காலத்தில் இருந்து அவர் பட்ட கஷ்டங்களை அறிகின்ற போது எவ்வளவு சேவை மனப்பான்மையோடு தன்னையே அர்ப்பணித்து இந்தப் புனித ஆசிரியத் தொழிலை ஆற்றியிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவர் தனது முதல் நியமனத்தைப் பெற்று பதவி ஏற்பதற்காக பட்டிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலைக்கு செல்ல முனைந்தபோது பகல் பேருந்து சேவைகள் எதிர்பாராத விதமாக இரத்துச் செய்யப்பட்டதால் அன்றிரவு 9.30 மணிக்கே அப்பாடசாலைக்குச் சென்று குப்பி விளக்கு சகிதம் பதவி ஏற்றதாக அறிகிறேன். பல நாட்கள் சுமார் 8 மைல்கள் நடந்து பாடசாலைக்குப் போகவேண்டிய சந்தர்ப்பங்கள் கூட இருந்திருக்கின்றது. மண்ணின் மீதும் மக்களின் மீதும் இவருக்கு இருந்த இறுக்கமான பிணைப்பின் காரணமாக இவை எதுவும் வலியாக இருந்திருக்கவில்லை என்பதுதான் சிறப்பு.

1985 ல் பட்டிக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களின் காரணமாக 2 வருடம் 8 மாதங்களில் அந்தப் பாடசாலைக்குரிய சேவையை முடித்துக்கொண்டு தற்காலிகமாக புளியங்குளம் இந்துக் கல்லூரியுடன் இணைய வேண்டிய நிலை உருவானது. 1990 ம் ஆண்டிலிருந்து "ஜெயசிக்குறு" என்றழைப்பட்ட போர் நடவடிக்கை காரணமாக புளியங்குளத்திலிருந்து புதூர், புதுவிளாங்குளம், துணுக்காய், சிவபுரம் எனப் பல கிராமங்களுக்கும் ஒன்றன்பின் ஒன்றாக சொந்த மண்ணிலேயே அகதிகளாக இடம்பெயர்ந்து செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அத்தகைய சூழல்களில் கஷ்டப்பட்டாலும் கதி கலங்கி நின்ற பிள்ளைகளுக்கு அந்த இடங்களில் கல்வி புகட்டியது மகிழ்வான தருணங்களாகவே இருந்ததாக அவர் கூறியதைக் கேட்டபோது மிக ஆச்சரியமாக இருந்தது.

இந்த இடத்தில்,

**"அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது**
**சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது"**

என்ற வள்ளலாரின் அடிகளே நினைவுக்கு வருகின்றது.

இவ்வாறு 18 ஆண்டுகள் 3 மாதம் பல இன்னல்களுக்கு மத்தியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்து 2000ம் ஆண்டு தனது பிறந்த மண்ணான புளியங்குளம் இந்துக்கல்லூரியில் அதிபராகப் பதவி ஏற்கிறார். 2002 ல் வவுனியா - புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் சொந்த விருப்பின்பேரில் தற்காலிகமாக கடமையாற்றிவிட்டு 2003ல் புளியங்குளம் இந்துக்கல்லூரியில் மீண்டும் அதிபராக இணைகிறார். 2009ல் ஏற்பட்ட இறுதிப்போரால் மீண்டும் இடப்பெயர்வு காரணமாக கிடாச்சூரிக்குச் சென்று அகதிகளுடன் இணைந்து தற்காலிகமாக தனது பதவியைத் தொடர்கிறார். 2010ல் மீள் குடியேற்றம் என்ற பெயரில் புளியங்குளம் இந்துக்கல்லூரி மீண்டும் அழைத்தது. இறுதியில் 2015ம் ஆண்டு கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் பதவியேற்று 4 வருடங்களின் பின்னர் தற்போது ஓய்வுபெறுகிறார். மொத்தம் சுமார் 19 ஆண்டுகள் அதிபராகப் பணி செய்திருக்கிறார். சுமார் 37 ஆண்டுகள் வவுனியா வடக்கு வலயத்திலேயே இவரது சேவையை எங்கள் மண் சுவைத்திருக்கிறது.

இவரது ஆசிரியத் தொழில் சார்ந்த பயணத்தைப் பார்க்கின்ற போது இவரது அர்ப்பணமும், தியாகமும், மண் மீதும் மக்கள் மீதும் வைத்திருந்த பிணைப்பும், ஆசிரியத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் மீது கொண்டிருந்த ஈடுபாடும் வெள்ளிடை மலையாகத் தெரிகிறது. எமது கல்லூரியில் இந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியும் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளும் அவர்கள் ஈட்டியுள்ள சாதனைகளும் இவரது கடின உழைப்புக்குக் கிடைத்த சான்றாகவே பறைசாற்றி நிற்கின்றன. கடந்த வாரம் பிரமாண்டமான அளவில் எமது கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழா இவரது வாழ்நாள் சாதனையின் ஒரு எடுத்துக்காட்டு. நல்லாசிரியர்களின் விளைநிலங்கள் வரண்டு போவதில்லை. விளைந்து கொண்டே இருக்கும்.

ஒருவன் உயர்வு பெற வேண்டுமாயின் அடக்கமுள்ளவனாக இருக்கவேண்டும். பதவி வரும்போது பணிவு வேண்டும் என்பதற்கிணங்க, பண்பிலும் பாவனையிலும் செயலிலும் எளிமையாக தன்னடக்கத்துடன் செயற்பட்டதை நான் 2016ம் ஆண்டு எமது கல்லூரிக்கு வந்திருந்த போது நேரில் கண்டு கொண்டேன். "பண்புடையாளர் பட்டுண்டுலகம்" என்ற திருமறை வாக்கு உயிருடன் வாழ்வதை உணர்ந்து கொண்டேன்.

ஒன்றை வெற்றியாகவும் மிக நேர்த்தியாகவும் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆதங்கத்தில் பலரையும் தன் வழியில் உள்வாங்க முயற்சிக்கின்றபோது சிலவேளைகளில் சிலரது முரண்பாடுகளைச் சந்திக்க வேண்டிவருவது தவிர்க்க முடியாதது. சகலரையும் திருப்தி அடையச் செய்வது என்பது இயலாத காரியம். உண்மைகள் நிரந்தரமாக உறங்கியதாக வரலாறு இல்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் கூட எதிர்ப்புக்களைச் சவால்களாக ஏற்று வென்றெடுத்து வீறுநடை போடும் திறனைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. மன்னிப்போம் - மறப்போம் என்ற இவரது கொள்கை கூட மற்றவர்கள் கற்கவேண்டிய ஒரு பாடம்.

**"புரட்சிப் பார்வையும் புதுமை சிந்தனையும்**
**உள்ளதை உள்ளபடியே துணிந்து சொல்லும்**
**உயர்வான குணமும் இனிமையான பேச்சும்**
**சாதிக்கத் துடிக்கும் நேரிய பெண்ணாய்**
**காரியம் தன்னில் வீரியம் கொண்டு**
**நம்பிக்கை நாணயம் நயமாகப் பேணி**
**அறிவு புகட்டும் ஆசிரியப் பணியில்**
**பெருமை பெற்று மிளிர்ந்தனை நன்றாய்**
**சமூகத்தொண்டன் கிருஸ்ணமூர்த்தி துணை நிற்க**
**அருமை மகன் அபிநயன் நலன்கண்டு மகிழ்வுற்று**
**ஏற்றம் பெற்று இமயமாய் நின்று**
**குன்றில் ஏற்றிய சுடர் விளக்காக**
**மணிவிழா தொடங்கி முத்துவிழா, பவளவிழா**
**சப்தவிழா கண்டு இன்பமாக வாழ வாழ்த்துக்கள் கோடி"**

வாழ்த்துகளுடன்
**வேலா சுப்பிரமணியம் - தலைவர்**
க.ம.வி பழைய மாணவர் சங்கம் - கனடா
12.03.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



எமது வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் நாங்கள் கல்வி கற்ற காலத்தில் எங்களை ஊக்கப்படுத்தி, உற்சாகமளித்த அதிபர்கள், ஆசான்கள் போல் இவரும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் அளப்பரிய பணியை வழங்கியுள்ளார். முப்பத்தாறு வருடங்களுக்கு மேல் ஆசிரியப்பணியிலும் அதிபர் பணியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து இளம்சந்ததியினரின் அறிவு வளர தனது பங்களிப்பை வழங்கியமையினால் இன்று எல்லோர் மனதிலும் இடம் பிடித்துள்ளார்.

யுத்தச் சூழ்நிலையால் எமது வாழ்விடங்கள் சிதைக்கப்பட்டு சின்னாபின்னப் படுத்தப்பட்டபோது பெரும் அழிவைச் சந்தித்தது கல்வியும்தான், ஏற்கனவே கல்வி வளர்ச்சியில் பின்தங்கியிருந்த எமது பிரதேசம் யுத்தகாலத்தில் மேலும் பின்னோக்கிச் சென்றது.

எனினும் அழிவுகளைச் சந்தித்த எமது கல்வியினை மீண்டும் துளிர்விட வைப்பதில் அதிபர் ஆசிரியர்களின் பங்கும்பணியும் அளப்பரியது .

அந்தவகையில் எமது பிரதேசத்தின் கல்வியை மீளெழ வைத்ததில் திருமதி ரேவதி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வகிபாகம் போற்றத்தக்கது.

இப்பணியில் அல்லும் பகலும் அயராது உழைத்து மாணவச்செல்வங்களின் வளர்ச்சியைக்கண்டு அகமகிழ்வுடன் ஓய்வு பெற்று மணிவிழாக்காணும் அதிபர் அவர்களை இன்னும் நூற்றாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துவதில் பழைய மாணவர் சங்க பிரித்தானியாக் கிளையினராகிய நாங்களும் மகிழ்வடைகின்றோம்.

நன்றி.

**வினாயகமூர்த்தி சுரேந்திரகுமார்**
தலைவர்,
வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம் - பிரித்தானியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ/ புளியங்குளம் இந்துக்கல்லூரி
## ஆசிரியர் குழாம் - 2012



## வ/ புளியங்குளம் இந்துக்கல்லூரியில்
## சாரணர் அணி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதில் பதிந்தவை



மணிவிழா மலரில் என் மனதில் பதிந்த எண்ணங்களை எழுதுவதில் அகமகிழ்கின்றேன். கல்வி புலத்தில் சேவைதனை புரிந்த என் இனிய ஆசான் ரேவதி அம்மா அவர்களைப் பற்றி ஒரு சில விடயங்களை முன்வைக்கலாம் என எண்ணி தொடருகின்றேன்.

ஆசிரியராக, அதிபராக, தோழியாக, தாயாக என்னோடு பொழுதைக் கழித்த அந்த நாட்கள் பசுமையானவை. வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி அக்காலத்தில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்றே பெயர் பெற்றிருந்தது. அப்போது தான் நான் தரம் 4 இல் கல்விக் கற்றுக்கொண்டிருந்த வேளையில் தமிழ் மொழிப் பாடத்திற்கு ஒரு சிறந்த ஆசிரியராக ரேவதி ரீச்சர் எமது பாடசாலையில் இணைந்து எமக்கு கற்பித்தவர். தரம் 11 வரையிலும் தமிழ் மொழிக்கு ஆசிரியராக கடமையாற்றி எமக்கெல்லாம் சிறந்த பெறுபேற்றை பெற்றுத்தந்து, நான் க.பொ.த.உயர்தரத்தில் கல்வி கற்க அடிக்கல் நட்டவராவார். அத்தோடு க.பொ.த.உயர்தரத்தில் இந்துநாகரிகம் கற்பித்து சிறந்த பெறுபேற்றைப் பெற காரணமானவர். அதுமட்டுமல்லாது வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்லவற்றை கூறி எம்மை வழிப்படுத்திய பெருமைக்குரிய ஆசான் தான் எங்கள் ரேவதி டீச்சர்.

அக்காலத்தில் தான் இடப்பெயர்வு ஒன்று ஏற்பட்டது. 1997ம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வில் பாடசாலை மல்லாவி சிவபுரத்திற்கு மாற்றப்பட்டது. அப்போதுதான் எனக்கும் ஆசிரியர் நியமனம் எனக்கு சொந்தமான பாடசாலையிலே கிடைத்தது. மிக மன மகிழ்ச்சியோடு வேலைக்கு சென்றேன். அங்கு என் மனதை கவர்ந்த என் மதிப்பிற்குரிய ரேவதி டீச்சர் தான் அதிபராக இருந்தார்.



இப்போது நான் இவரிடம் மாணவி என்ற ஸ்தானத்திலிருந்து ஆசிரியராக கடமையாற்றத் தொடங்கினேன். எந்த வேலையாக இருந்தாலும் அடிக்கடி கௌரியை வரட்டாம் என்று உரிமையோடு அழைப்பார். எனது மனதிலும் அதிகளவு குதூகலத்துடனே பத்து ஆண்டுகள் அவருடன் ஆசிரியராக கடமையாற்றினேன். இக்காலத்தில் நாட்டு சூழ்நிலையில் கடினமான இறுக்கத் தன்மை காரணமாக போக்குவரத்து இடையூறுகள், தங்குமிட வசதியின்மை என்பன ஏற்பட்டன. இந்த சமயத்தில் மிக அன்பான புரிந்துணர்வுடன் கூடிய ஒரு அதிபராகவும் அதேவேளை ஒரு பாசமிகு தாயாகவும் ஒரு சிறந்த தோழியாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை வழிநடத்தி பாதுகாத்த பெருமை என் மதிப்பிற்குரிய குருவையே சாரும். 2008ம் ஆண்டில் ஏற்பட்ட நாட்டின் சூழ்நிலை காரணமாக இடமாற்றம் பெற்று வேறு பாடசாலைக்கு சென்றுவிட்டேன்.

அப்போது நான் ஒரு வெறுமையை உணர்ந்தேன். கடமையை கடந்த ஒரு உரிமையோடு செயற்பட்ட எனது ஆசிரியத்துவத்தில் ஒரு சோர்வும் வெறுப்பும் ஏற்பட்டது. இதற்கு காரணம் எனது ஆசானையும் அதிபரையும் விட்டு பிரிந்த மனநிலை என்று இனங்கண்டு கொண்டேன்.



இருந்தபோதும் இன்றுவரை எனது ஆசானுக்கும் எனக்கும் உள்ள உறவு அன்று போல் இன்றும் நிலைத்து இருக்கிறது. அடிக்கடி தொலைபேசி மூலமாவது தனது தேவைகளையும் விருப்பங்களையும் கதைத்துக் கொள்வார். இன்று நான் எனது குடும்ப வாழ்விலும் சமூக இடத்திலும் வேலைத்தளத்திலும் ஒரு சிறந்த செயற்பாட்டை மேற்கொள்வதற்கு இவரது வழிநடத்தல் எனக்கு துணைநிற்கிறது என்றே கூறலாம்.

என்னைப் போல பல மாணவர்கள் எமது ரேவதி அம்மாவிடம் கல்வி கற்று வாழ்வில் உயர்ந்த படிநிலையில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். எனவே எம் ஆசான் ஆசிரியர் பணியில் அதிபர் பணியில் ஓய்வுபெற்ற போதும் தனது வாழ்வில் சீரும் சிறப்பும் பெற்று உயர்ந்த நிலையில் வாழவேண்டும் என வாழ்த்துகூறுகின்றேன். அத்தோடு என்னையும் இந்த சமூகத்தில் சிறப்புமிக்க ஒரு பிரஜையாக வாழ வழிகாட்டியதற்கு நன்றியோடு கூடிய அன்பையும் தெரிவித்து என் மன எண்ணங்களை முடிக்கிறேன்.

திருமதி.விஜயவர்தன ஜெயகௌரி
வ/ஓமந்தை மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய அதிபர்

## திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின்

# மணிவிழா வாழ்த்துப்பா

மீனோடும் குளங்களிங்கே நிறைந்திருக்கும்
மிதக்கின்ற தாமரைகள் பூத்திருக்கும்
தேனோடு வாழைகள் கனிந்திருக்கும்
தித்திக்கும் மாங்கனிகள் பழுத்திருக்கும்
வானோடு முட்டுகின்ற பனை மரங்கள்
வாழ்வதற்கு வழிகாட்டும் வயல்வெளிகள்
மானோடும் சோலைகளில் மயிலாடும்
மாண்புள்ளோர் வாழுகின்ற வன்னி நிலம்

வன்னிநகர் வவுனியா குடியிருப்பில்
வாழ்ந்து வந்த **மார்க்கண்டு சொர்ணலட்சுமி**
முன்னாளில் செய்த தவப்பயனின் பேறாய்
முத்தரசி **ரேவதி** அவதரித்தார்
சின்னஞ் சிறு சிட்டாக புளியங்குளத்தில்
சிறகடித்து ஆசையுடன் கல்வி கற்று
கண்ணகியை மாரியை மனதிலிருந்து
கல்வியிலே உயர்ந்திட்ட கலைத்தாய் இவர்

ஓமந்தைப் பள்ளியிலே உயர்தரம் கற்று
உவகையுடன் பல்கலைக்கழகம் சென்று
நாமகள் பட்டிக்குடியிருப்பில் ஆசானாகி
நற்பணியில் உழைத்ததனால் அதிபராகி
பூமகளாய் புளியங்குளம் இந்துக் கல்லூரியில்
பொறுப்புடனே நிர்வகித்த நாளினிலே
வாமகளே கனகராயன்குளம் நீயென்று
வரவேற்றாள் ரேவதியை கலைத்தாய் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமே செல்மழையாய் பொழிந்த போதும்
வைக்கின்ற காலடியில் வெடித்த போதும்
ஓலமே ஊரெல்லாம் கேட்ட போதும்
ஓடியே மக்களெல்லாம் அழுத போதும்
நாளெல்லாம் இளசுகளை மனதில் இருத்தி
நல்லதையே உள்ளத்தில் தானும் சுமந்து
வாழுகின்ற சந்ததியை வளர்க்க எண்ணி
வலி துன்பம் எல்லாமே மறந்த அன்னை

செல்வந்த பூமியாம் புளியங்குளத்தை
சிறப்பான உழைப்பினில் உயர்த்த எண்ணி
வில்லங்கம் வருமென்று தெரிந்த போதும்
வடிகாலை தடைகள் பல கடந்து வந்து
நல்லதொரு பள்ளியினை கட்டியெழுப்பி
நமக்கெல்லாம் அறிவுரை தந்த ஆசான்
கல்விப்பணி ஓய்வாக இருக்கும் போதும்
கலைமகளின் அருளாலே என்றும் வாழ்க

வெற்றிகள் பல பெற்று விருப்புடன் வாழ்க
விண்ணைத் தொட்டிடும் புகழுடன் வாழ்க
கற்றவர் மனதுடன் வாழ்த்திட வாழ்க
கரம் கோர்த்த **கிருஸ்ணமூர்த்தி**யும் வாழ்க
சுற்றியே வந்திடும் **அபிநயன்** செல்வமும்
சுகமாய் கண்ணகி அருளுடன் வாழ்க
நற்றமிழ் போலே நலமுடன் வாழ்க
**நாளும் மணிவிழா நாயகி வாழ்க.**

**ஆக்கம் : கல்மடு செல்வதேவன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் ந.நிசாந்தினி
குண்டு போடுதல் நிகழ்வில் 2ம் இடம் பெற்று
கௌரவிப்பு நடைபெற்ற போது...




தொழிநுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழாவின்
போது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகியே!
# மாண்புயர நீர் வாழி...

புளியங்குளப் பதி பெற்றெடுத்த ஆளுமையே!

புதுமைகள் பல புரிந்த தேவதையே

ஆசானாய், அதிபருமாய், அன்னையாய்

அன்புமிகு தோழியாய் அரவணைத்தவரே

உம்மோடு நாம் கொண்ட அன்பும்

எம் மீது நீர் கொண்ட அக்கறையும், அளவற்றவையே

நிமிர்ந்த நின் நடையும், நேர்கொண்ட பார்வையும்

எம் மனக்கண் முன் நித்தம் நித்தம் நிழலாடும்

உம் பெயர் கேட்கையிலே

எங்கட ரீச்சரென்ற இறுமாப்பு எப்போதுமுண்டு எமக்கு

மணிவிழா நாயகியே! மனம் நெகிழ்ந்து வாழ்த்துகிறேன்

மாநிலம் வியக்கவே மாண்புயர நீர் வாழி.....

அன்புடன்
**திருமதி.நந்தினி நாகேஸ்வரன்**
யாழ் வீதி,
புளியங்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானுக்கு என் வரிகள்

அன்பெனும் மொழிபேசி அறிவெனும் நடைபயின்ற
அன்னையாம் எங்கள் ஆசான் ரேவதி
ஐயேழு ஆண்டுகளாய் நீர் இங்கு
ஆசிரியர்ப் பணி தொடர்ந்தீரம்மா
அத்தனை மாணவருமே என்றும் உம்மை
அன்னையே என்றிட வாழ்ந்தாயம்மா
காலத்தின் கட்டளை வந்ததின்று
பிரியவே மனமின்றி பிரியாவிடை நாமளிக்க
சொல்லொனாத் துயரங்கள் ஆயிரம் தான்
ஆயினும் நான் செப்புகின்றேன் சில அற்புதங்கள்.

சின்னதாய் ஒருசிக்கலை எதிர்கொண்டால்
அன்னையாய் உம் அறிவுரை ஏராளம்
பண்புதனை எங்கள் முதலாக விதைக்க
பாசத்தையே நீ பரிசளித்தாயம்மா
சிந்தனை கெட்டு நாம் சிதைந்து போய்விடாமல்
அற்புதமாய் பல வழிகாட்டினாயம்மா
போர் என்ற புயலில் நாம் தட்டுத்தடுமாறிய வேளையில்
விருட்சத்தின் நிழலையே வித்தியாசாலையாக்கிய வித்தகியே
உங்கள் அற்புதம் தன்னை எடுத்து நான் இயம்பிட
அடியேனுக்கில்லை அத்தனை அதிசயம்

இந்துநாகரிகத்தை நாம் இன்புறும் வண்ணமே கற்பித்து
தாய்மொழியாய் எங்கள் தமிழ்மொழியின்
தத்துவங்கள் அத்தனையும் தளைத்துவிடவே
தரணியில் உதித்திட்ட தாரகையே
பித்தாகிப் போன மனதுடனே இன்று
செப்புகின்றேன் என் வாழ்த்துக்களை
உண்மைகள் உரைத்து ஊக்கங்கள் அளித்து
உத்தமராய் நாம் உலகத்தில் உயர்ந்திட
அத்தனை வழியையும் செப்பெனவே
அற்புதமாய் உரைத்த ஆசானே
உங்கள் எண்ணங்கள் உயர
பண்புடன் போற்றியே கூறுகின்றேன் வாழ்த்துக்களை.

வாழ்க வளமுடன்
வளர்க நின் பணி.

**திருமதி.மாலினி ஜெகநேசன்**
A9 வீதி, பரசங்குளம்,
புளியங்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கல்வி : அனுபவ நோக்கு



**க.பேர்ணாட்**
ஓய்வு நிலை பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

இன்றைய கல்விச்சூழலில் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு சவாலாகவும், பிரச்சினையாகவும் அமைவது மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களை ஏற்படுத்தி வகுப்பறைச் சூழலை மகிழ்ச்சிகரமாகப் பேணுவதும், அதிபர்களுக்கு சவாலாக அமைவது விளைதிறனும் வினைத்திறனும் உள்ள பாடசாலை சூழமைவை ஏற்படுத்துவதுமேயாகும். அவ்வாறு ஆசிரியர்களிடையே கடமையுணர்வையும் அர்ப்பணிப்பையும், மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களையும், அறநெறிப்பண்புகளையும் ஏற்படுத்துவது பாடசாலைச் சூழலில் செயற்படும், பாடசாலையுடன் தொடர்புபட்ட அனைவரினதும் பொறுப்பாகும். குறிப்பாக அதிபர், ஆசிரியர் - மாணவர்- பெற்றார் கூட்டிணைவு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆசிரியர் கல்வி தொடர்பான விழிப்புணர்வும், ஆசிரியரின் பொறுப்புக்களும் கடமைகளும், ஆசிரியர்கள் என்ன செய்கின்றார்கள், எதைச்செய்யவேண்டுமென்ற சிந்தனைகளும், ஆசிரியத்துவம் தொடர்பான விமர்சனங்களும், ஆசிரியர்கல்வியின் அனுபவங்களும், ஆசிரியர்கல்வியின் பண்புகள் தொடர்பாகவும், கற்றல் கற்பித்தல் தொடர்பான அவதானிப்புக்கள் தொடர்பாகவும் சில அனுபங்களை பகிர்ந்துகொள்ளும் நோக்கில் இக்கட்டுரை அமைந்தள்ளது.

ஆசிரியர்கல்வியின் பண்புத்தரவிருத்தி தொடர்பான சிந்தனைகளும், முன்னெடுப்புக்களும் அண்மைய காலங்களில் அதிகரித்தவண்ணம் உள்ளன. ஆசிரியர் கல்வியின் பண்புத்தரவிருத்தியின் மூலமே கல்வியின் பண்புத்தரவிருத்தியும் கண்டுகொள்ள முடியும் என்பது அநேக நாடுகளின் அனுபவங்களாகும். இதனாலேயே ஆசிரியர்கல்விக்கான சிந்தனைகளும் காலத்திற்கு காலம் மாற்றமுறும் செல்நெறியைக் கொண்டிருக்கின்றன. தரமான கல்விக்கு தரமான அசிரியர் என்ற நிலையிலிருந்து தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கல்வி என்ற நிலை இன்று எல்லோராலும் உணரப்பட்டு, தற்போது தரமான ஆசிரியர் கல்விக்கு "தரமான வழிகாட்டல்" என்ற புத்தாக்க சிந்தனைகள் வலுப்பெறத் தொடங்கியுள்ளன. அந்தவகையில் ஆசிரியர் கல்வித்துறையில் உள்ள நாங்கள் ஆசிரியர் கல்வியில் பண்புசார் செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இதனை தனியொருவரினால் செய்யமுடியாது. கல்விப்புலத்திலுள்ள ஒவ்வொரு தனிநபரும் இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்து செயற்பட வேண்டும்.

ஒரு வினைத்திறனுள்ள ஆசிரியரின் செயற்பாட்டில் முக்கியமானது வகுப்பறையில் ஒரு கற்றல் சூழ்நிலையை வருட ஆரம்பத்திலேயே ஏற்படுத்துவதேயாகும். (Mary Beth)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறனுள்ள ஆசிரியர்களின் உருவாக்கத்தில் கல்வியியல் கல்லூரிகளின் பங்களிப்பு பற்றியும், இன்று பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளுக்கும், ஆசிரியர் கல்விக்கும் இடையில் ஏதாவது காணப்படுகின்றதா என்பது பற்றி நோக்கும் போது பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளலாம்.

1. ஆசிரியம் என்பது ஒரு ஒப்பந்த அடிப்படையிலான வேலை போன்று அதாவது (காலை 7.30 - பிறபகல் 1.30 வரை) பாடசாலை நேரத்தை நிறைவுசெய்தால் போதுமென்ற எண்ணமே மேலோங்கியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எனினும் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி வருவோரையும் காணலாம். ஆசிரியர் மாணவர்களிடத்தில் பாடவிடயங்களை மனனஞ்செய்து இலகுவாக பரீட்சையில் சித்தி பெற்றுவிடலாம் என்ற எண்ணமும், பாடவிடயங்கள் தொடர்பாக குறிப்புக்கொடுக்கும் ஆசிரிய கல்வியியலாளர்கள் - ஆசிரிய மாணவர்களினால் சமகாலத்தில் விரும்பப்பட்டமையும் பயிற்சி நிறைவு பெற்றபின் அவர்களின் செயற்பாடுகளை விமர்சித்ததையும் நேரடியாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தேடல்கள் மூலம் கல்வியைப்பெற்றுக் கொண்டவர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை விளைத்திறனுள்ளவகையில் ஆற்றி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். வெறுமனே பரீட்சைக்கு மட்டும் தயார்படுத்தலை ஆசிரியர் கல்வி கொண்டிருக்கவில்லை. இணைப்பாடவிதான செயற்பாடுகள், கலை கலாசார அம்சங்கள், சமய வழிபாடுகள் என பொதுவாக எல்லாவிதமான செயற்பாடுகளுக்கும் கல்வியியற் கல்லூரிகளில் களம் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. இதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர்கள் இன்று தாம் வேலை செய்யும் பாடசாலைகளிலோ நிறுவனங்களிலோ ஓர் ஆர்வமும் வினைத்திறனும் உள்ளவராக செயற்படுவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

2. "ஆசிரியரின் தரம் என்பது தனிமனித கல்வித்தகமைகளுக்கப்பால் மனிதப்பண்புகளிலும் மனித விழுமியங்களிலுமேயே தங்கியுள்ளது. ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் மனதில் நிலைத்து நிற்கின்றார் என்றால் அது கடவுள் வரத்தினாலோ அல்லது யாதேனுமொரு அபூர்வசத்தியினால் ஆசிரியர் இவ் வல்லமையைப் பெற்றதாகக் கருத முடியாது". மாறாக மாணவர் இயலுமையை இனங்கண்டு இயலுமானவரை உதவிசெய்து கற்றல் கற்பித்தலை விருப்புக்குரிய செயற்பாடாக மாற்றியமைத்தமையையே பிரதான காரணமாகக் கொள்ளலாம்.

3. "வகுப்பறையில் கற்றல் சூழலை எவ்வாறு ஏற்படுத்தமுடியும் என்ற கேள்விக்கு, ஆசிரியர் எப்போது வகுப்பறையில் பிரசன்னமாகியிருக்கிறாரோ அப்போது அவரால் வகுப்பறையில் கற்றல் சூழலை ஏற்படுத்த முடியுமெனக் கல்வியியலாளர்கள் கூறுகின்றனர்". வகுப்பறைச் சூழலை ஒழுங்குபடுத்தல் என்பது ஆசிரியரின் கற்றல் செயற்பாடுகளுக்கான ஒரு திறவுகோலகும். இச்செயற்பாடானது ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவும் அமையும். வகுப்பறை ஒழுங்மைப்பைக்கொண்டு அங்கு நடைபெறும் கற்றல் செயற்பாடுகளின் வினைத்திறனை ஓரளவு ஊகித்துக்கொள்ளலாம். இன்றை கல்விச் சூழலில் பெரும்பாலான ஆசிரியர்களின் பிரச்சினையாக அமைவது மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களை ஏற்படுத்தி வகுப்பறைச் சூழலை மகிழ்ச்சிகரமாகப் பேணுவதாகும். அவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களை ஏற்படுத்துவது பாடசாலைச் சூழலில் செயற்படும், பாடசாலையுடன் தொடர்புபட்ட அனைவரினதும் செயற்பாடாகும். கல்வியியலாளர்கள் குறிப்பிடுவதுபோல் ஆசிரியர் எப்போது வகுப்பறையில் பிரசன்னமாகியிருக்கிறாரோ அப்போது அவரால் வகுப்பறையில் கற்றல் சூழலை ஏற்படுத்த முடியுமெனபதே எனது முதலாவது எடுகோள். இரண்டாவது முன்னாயத்தம் மூன்றாவது நேர முகாமைத்தவம் இவை தான் ஆசிரியர் ஒருவரின் வெற்றிக்கு பிரதான காரணமாக அமைந்தவையாகக் கருதுகின்றேன். எனினும் இவைபற்றிய மேலதிக தேடல்களும் ஆய்வுகளும் அவசியம் தேவைப்படுகின்றது. பெருமளவிலான முகாமைத்துவ நுட்பங்கள் விரிவுபடுத்தப்படுவது வகுப்பறையிலும் வீட்டிலுமேயாகும். என்ற Fred Jones என்பவரின் கருத்தினை இங்கு வலியுறுத்த விரும்பகின்றேன்.

4. தமிழர் கல்வி மரபில் இருந்துவந்த ஆன்மீகம் தொடர்பான செயற்பாடுகள் மீழெழுச்சிபெறவேண்டிய அவசியம் உள்ளதாகவே கருதுகின்றேன். ஆன்மீகம் - கல்வி - மாணவர் - இவற்றிற்கிடையிலான கூட்டிணைவு அவசியமாகின்றது.

### ஆன்மீகத்திற்கும் கல்விக்குமிடையிலான தொடர்பு

- ஆன்மீகம் - மனித நடத்தை மாற்றத்தை விரும்பகின்ற நெறிமுறையாகும்.
- கல்வியும் பொருத்தமான நிரந்தரமான மனித நடத்தை மாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட செயன்முறையாகும்.
- ஆன்மிகம் சமூக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் அதேவேளை கல்வி சமூகப்பொருத்தப்பாட்டை அடிப்படை நோக்காகக்கொண்டு இயங்குகின்றது.
- ஆன்மீகம் ஏற்படுத்த முனைகின்ற நல்ல விழுமியங்களையே கல்வியும் எற்படுத்த முனைகின்றன.
- கல்வியானது ஆன்மீகத்தின் எதிர்பார்ப்புகளுக் அப்பால் சமூக பொருளாதரா அபிவிருத்தியினையும் நாட்டின் பொருளாதார உற்பத்தி சேவை அபிவிருத்தியையும் தனிமனித அபிவிருத்தியூடாக ஏற்படுத்தி அதனூடாக நாட்டின் தேசிய கல்விக்கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன.

எனவே கல்வியானது ஆன்மீகத்துடன் இணைத்து வழங்கும் போது மனித விழுமியங்களும், பண்புகளும் தனாக மாணவரிடத்தில் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக யப்பான், சீனா, தாய்வான் இந்தியா போன்ற நாடுகளில் யோகா பயிற்சிகள் பாடசாலைகளில் வழங்கப்படுகின்றதை காணலாம். இவை மாணவரின் பண்புத்தரவிருத்தியை மேம்படுத்துவதில் உதவுவதாக கல்வியியலாளரகள் குறிப்பிடுகின்றனர்.

5. பெற்றார்களுக்கும் பிள்ளைகளின் நடத்தைப் பண்புகளிற்குமிடையில் உள்ள தொடர்பு பற்றி குறிபிட்டேயாக வேண்டும். பிள்ளைகளுக்கான சிறந்த நண்பன் பெற்றோரைத்தவிர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுயாராகவும் இருக்க முடியாது. பொதுவாக தாய், தந்தை இருவரும் தொழில் புரியும் இக்காலகட்டத்தில் பிள்ளைகளுடனான இருக்கை உறுதிசெய்யப்பட வேண்டும். குறைந்த பட்சம் சாப்பாட்டு நேர உரையாடலையாவது ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். சிலவற்றை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடவேண்டும்..

- ❖ பெற்றார் முன்மாதிரியானவர்கள் - பிள்ளைகளுக்கு செவிமடுக்க வேண்டும்.
- ❖ பெற்றார் பிள்ளைகளுக்கிடையில் சிறந்த ஒளிவுமறைவற்ற தொடர்பாடல் மேற்கொள்ள வேண்டும்.
- ❖ பிள்ளைகளின் தேவைகள், விருப்பு வெறுப்புக்கள், விசேட திறன்கள், ஆற்றல்களை அறிந்து செயற்படல்
- ❖ பாடசாலைகளில் பிள்ளைகளின் செயற்பாடுகள் பற்றி அறிந்து செயற்படல்
- ❖ ஆசிரியருடனான தொடர்பாடலின் - ஆலோசனைகளின் அடிப்படையில் பிள்ளைகளுக்கு உதவுதல்
- ❖ பிள்ளைகளின் பலங்களை ஊக்குவித்து பலவீனங்களைக் கட்டுப்படுத்துதல்
- ❖ பிள்ளைகளின் நண்பர்களை இனங்கண்டு செயற்படல்.
- ❖ பிள்ளைகள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளுவதற்காக மற்றவர்களை தேடிச் செல்லாத வகையில் தேவைகளை நிறைவுசெய்ய, வழிப்படுத்த முயற்சித்தல்.

மேற்படி செயற்பாடுகள் விடயத்தில் பெற்றார்களும் பெரியவர்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். இதனை இன்னொருவகையில் கூறுவதாயின் SSPS களுக்கிடையிலான இணைவு அதாவது பாடசாலை (School) - ஆன்மீகம் (Spritual) - பெற்றார் (Parents) - சமூகம் (Society) அவசியமாகும். இந்நான்கிலும் மாணவர் முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். மனித விழுமியங்கள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். - வாழ்க்கைப்பரிட்சயங்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். இவை இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

6. "எந்த ஒரு கல்விமுறையும் அதன் ஆசிரியர் தரத்தைவிட உயர்ந்ததாக இருக்கமுடியாது". இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன் இலங்கை கல்வி நூற்றாண்டு மலரில் ஆசிரியர் கல்வி தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கூற்று இதுவாகும். இக்கருத்தானது மாற்றமுறும் கல்வி முறைக்கு ஏற்றவாறு தமது தரத்தை ஆசிரியர்கள் அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. ஆசிரியர்கள் மாற்றத்திற்கான முகவர்களாவார் என்ற இன்னொரு கருத்தும் காணப்படுகின்றது. மாற்ற முறும் கல்வி உலகின் தேவையை நிறைவுசெய்வதற்கு கல்வி உலகமும் மாற்றமுற வேண்டும். அதற்கேற்ப ஆசிரியர் கல்வி உலகமும் ஆசிரியர்களும் மாற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்ததப்படவேண்டியுள்ளது. அதே வேளை 40 ஆண்டுகளுக்கு முன் குறிப்பிட்ட விடயம் தற்போதும் எமக்கு பொருந்துவனதாகவே உள்ளது. காரணம் ஒவ்வொருவரும் தான். எனினும் அதற்கான ஏற்பாடுகளை செய்பவர்களிடத்திலும் நடைமுறைப்படுத்துபவர்களிடத்திலும் அதிக பொறுப்புக்கள் இருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.1. தேசிய கல்விக்கொள்கைகள் சமூக எதிர்பார்க்கைகளுக்கு அப்பால் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்லக்கூடிய பொருத்தமானவர்களை உருவாக்கக்கூடியதாக அமைக்கப்படவேண்டும். கல்விமூலம் சான்றிதழ்களைப் பெற்றவர்களை உருவாக்குவதை விடுத்து நாட்டின் உற்பத்தித்துறைக்கு பொருத்தமான மனித வளங்களை உருவாக்கக்கூடியதாக கல்விக்கொள்கைகளும் அதன் கலைத்திட்ட ஏற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதில் எல்லோரும் கவனம் செலுத்துதல் வேண்டும். கல்விநிறுவனங்கள் வெறுமனே சான்றிதழ் பெறுவதற்கு சொல்லிக்கொடுக்கும் நிறுவனங்களாக இல்லாது வாழ்க்கைக்கு தயார்படுத்தும் மாணவர்களை வழிப்படுத்தும், தலைமைத்துவப் பண்புகளையும் தேடலையும், புத்தாக்கத்தையும் கிளர்ந்தெளச்செய்யக்கூடிய வாய்ப்புக்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இதன் முக்கிய பொறுப்பு கலைத்திட்டத்தினை அமுல்படுத்தும் ஆசிரியர் குழாத்திற்கே உரியது. மாணவர்களிடம் தன்னம்பிக்கையையும் தன்னையும் தன் நாட்டையும், சூழலையும் நெசிக்கும் தன்மையை வளர்த்தெடுப்பதற்கு பாடவிடங்களை தேசிய கறிக்கொள்களுடன் - அடிப்படைத் தேர்ச்சிகளுடன் இணைத்து அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள, தேடல்களை மேற்கொள்ள மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.

6.2. கல்வி நிர்வாகமும் பாடசாலைகளும்: கல்வி நிர்வாகமும் பாடசாலைகளும் பாடசாலைக் கலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தி மதிப்பெண்களை அதிகம் பெற்றுக்கொள்ளக்கூடியவர்களை உருவாக்குகின்ற பணிகளுக்கு வெற்றிகரமாக உதவிவருகின்றன. நாட்டிற்குப் பொருத்தமானவர்களையும் தொழில் உலகுக்கு பொருத்தமானவர்களையும், பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வு காணக்கூடியவர்களையும் புதிய நூற்றாண்டுக்கான சவால்களையும் எதிர்கொள்ளக்கூடியவர்களையும் அவை உருவாக்க முனைய வேண்டும். இதற்கான ஊற்பாடகள் பாடத்திட்டத்திலும் வழிகாட்டல் குறிப்புக்களிலும் போதுமானளவு வழங்கப்பட்டுள்ள போதிலும் அதனை நடைமுறைப்படுத்தவதில் இடர்பாடுகள் காணப்படுகின்றது.

6.3. பெற்றோர் பிள்ளைகளின் எதிர்பார்க்கைகள்: பெற்றோர்களும் சமூகமும் பிள்ளைகள் எல்லோரும் உயர் தொழில் வாய்ப்பைப் பெறக்கூடியவர்களாக கல்வி மூலம் உருவாக்கப்படவேண்டுமென எதிர்பார்க்கின்றார்கள். இதில் தவறேதும் இல்லை. ஆனால் இங்கு பிள்ளைகளின் விருப்புக்கள், அவர்களுக்கு இருக்கக்கூடிய விசேட ஆற்றல்கள், திறன்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறுபவர்கள் மட்டும் பாராட்டப்படுகின்றார்கள். சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றார்கள் ஏனையவர்கள் பற்றி எந்தக்கவனமும் செலுத்தப்படுவதில்லை. கல்வி சகலரையும் கவனத்தில் கொள்ள வேண்டும். வெற்றிபெற்றவர்களாக உருவாக்க வெண்டும். அதற்கேற்பவே பெற்றோர்களும் சமூகமும் தமது எதிர்பார்க்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். தேர்ச்சிமட்டக்கல்வி கூறப்படுவது போல பிள்ளைகளின் தேர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.4. தொழில்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமை பாடசாலைக்கல்வி பரீட்சையை மையமாகக்கொண்ட, சான்றிதழ் வழங்கும் கல்வியாக மட்டும் இருக்காமல் தொழில் நோக்கிய கல்வியாகவும், அமைய வேண்டும். சுயதொழில் வாய்ப்பிற்கு இட்டுச் செல்லக்கூடிய தொழிற்கல்வி அடிப்படைகளை ஏற்படுத்தக்கூடிய கல்வி வழங்கள் முறைகளைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். பொதுக்கல்வி முறையிலிருந்து இடைவிலகிச் செல்வோர், க.பொ.த. உயர்தரத்தின்பின் பாடசாலையைவிட்டு சமூகத்திற்குள் செல்லும்போது எந்தவிதமான தொழில் ஆயத்தங்களுமின்றியும், எந்தவித தொழில் வழிகாட்டலுமின்றியும் இருட்டிலே விடப்பட்டவர்களைப்போல் வெளியே வருகின்றனர்.

இவ்வாறானவர்களினால் சமூகத்தில் பிரச்சினைகள் எழ சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. இவர்களுக்கான தொழில் வழிகாட்டல்கள் பாடசாலைகளினூடாகவே வழங்கப்படுதல் வேண்டும். பாடசாலைக்கல்வியை விட்டு வெளியெறும் மாணவர் அறிவியல் ரீதியல் நல்ல சாதனைகளை நிகழ்தினாலும் பண்புரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒழுக்கஅமைப்போடு வெளியெறுவதில் குடும்பத்திற்கு அடுத்தநிலையில் பாடசாலைகளே முக்கியத்துவம் பெறுகின்றன. பொதுவாக கீழைத்தேய நாடுகளில் பாடசாலைகளில் ஒழுங்க மீறல்கள் அதிகரித்தவண்ணமே காணப்படுகின்றது. பாடசாலை மட்டத்தில் ஒழுக்க மீறல் சம்பவஙகளைக் கையாள்வதில் சில நுட்பமுறைகளையும் முன்னேற்பாடுகளையும் ஆசிரியர்களும் மாணவர்களும் மேற்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும். இதற்காக நான் முன்னர் குறிப்பிட்டது போல் SSPS களுக்கிடையிலான இணைவு அதாவது பாடசாலை (School) - ஆன்மீகம் (Spritual) - பெற்றார் (Parents) - சமூகம் (Society) ஆகியவற்றின் இணைவு பாடசாலைக்கல்வி தொடர்பான அல்லது பொதுக்கல்வி தொடர்பான இலக்குகளை இலகுவாகச் சென்றடைவதற்கான ஒரு வழியாகவே கருதுகின்றேன்.

நிறைவாக ஒரு வினைத்திறனுள்ள ஆசிரியர் ஒரு தெளிவான தொடர்பாளன், ஒரு நல்ல தொடர்பாளன் ஒரு விளைதிறனுள்ள ஆசிரியர் - ஒரு ஓவியரிடம் உள்ள சிறிய தூரிகைதான் மிகப்பெரிய ஓவியங்களை தீட்டுகின்றது. ஆகவே ஆசிரியனிடம் காணப்படும் நல்ல தொடர்பாடல் மாபெரும் அறிஞர்களை உருவாக்குகின்றது. இது ஆசிரியர்களினால்தான் சாத்தியமாக்கலாம். ஏனெனில் எந்தவொரு கலைத்திட்டச் செயற்பாடுகளின் வெற்றியும் ஆசிரிய சமூகத்தின் செயலாற்றலிலேயே தங்கியுள்ளது.

Reference:
1. Elizabeth Hatton, Understanding Teaching (1998) Harcourt Brace, London.
2. Philip Hughes, Teachers' Professional Development (1991) ACER.
3. Richard Tabulawa (1998) Teachers' Perspective on classroom practice, qualitative studies in Education, Vol II, 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய மூலஸ்தான அடிக்கல் நாட்டுதல் நிகழ்வில் கலந்து கொண்ட போது...



புளியங்குளம், முத்துமாரிநகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோவில் ஆரம்ப நிகழ்வு



வ/கனகராயன்குளம் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளையை அடிப்படையாகக் கொண்ட கற்றல்



**சுப்பிரமணியம் பரமானந்தம் (SLTES-I)**
உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

## 1.0 அறிமுகம்

நவீன கல்விக்கோட்பாடுகள் ஞாபகப்படுத்தல் கலாசாரத்திலிருந்து பிரச்சினை தீர்த்தல், பகுத்தாராய்தல், மதிப்பிடுதல் போன்ற அறிவு மைய பொருளாதாரத்திற்கு (knowledge-based Economy) ஏற்றவகையில் நிலைமாற்றம் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. கற்பவர் தமக்கிடையேயும், ஆசிரியர்களுடனும் வினாக்கேட்டு, கலந்துரையாடி, சவால்ளை ஏற்படுத்தி தொடர்பாடலை மேற்கொள்ளச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும். அதாவது கற்றலானது சுய செயல்முயற்சிகளிலும், சமூக இடைவினைச் செயற்பாடுகளிலுமே தங்கியுள்ளது இங்கு முக்கியமானதாகும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தகவல்களை பெரும்பாலும் அனுபவமாக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மனிதர்கள் வித்தியாசமாக சிந்திக்கும் போதெல்லாம் மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. எனவே சிந்தனை என்பது மனிதப்பண்பு என்றாலும் அதனை வழிப்படுத்தி அனுபவமாக்க பயிற்சிப்படுத்தவேண்டிய பொறுப்பு கல்வி வழங்குவோரிடமும் பெற்றோரிடமும் காணப்படுகின்றது. பெரும்பாலும் கற்பிப்போராலும் தகவல்களை சேகரிக்கவும், மனனம் செய்யவும் சொல்லிக்கொடுக்கப்படுகின்றதே தவிர தகவல்களைப்பற்றிச் சிந்திப்பதற்கும் அவற்றை அனுபவமாக்குவதற்குமான கற்பித்தல் பொறிமுறைகள் மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

இந்நிலையில் கற்றல் கற்பித்தலில் மூளை மற்றும் நரம்புகளின் தொழிற்பாடு பற்றிய மீள்எழுச்சி தொழில்நுட்ப உபகரணங்களின் பாவனையினால் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதாவது மூளையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் என்பது தொழில்நுட்பப்பாவனை, அறிகை, கற்றல் செயன்முறை என்பவற்றிடையிலான இணைப்புப்பாலமாகக் கொள்ளப்படுகின்றது. பிள்ளைகளின் கற்றல் பாங்குகளில் மூளை மற்றும் நரம்பு மண்டலங்களின் செயற்பாடுகளை ஆசிரியர் அறிந்திருக்கவேண்டியது அவசியமாகின்றது. மூளை, நரம்பு, மற்றும் கற்றல் என்பவற்றிற்கிடையிலான தொடர்பு பற்றி நரம்பியல் வல்லுனர்களும், ஆசிரியர் கல்வித்துறையில் உள்ளோர் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களும் இணைந்து செயலாற்றவேண்டிய தேவை காணப்படுகின்றது.

## 2.0 மூளை அடிப்படையிலான கற்றலில் தாக்கம் செலுத்தும் காரணிகள்:

கட்டுருவாக்கவாதம் என்பது மூளையை ஆதாரமாகக் கொண்ட அறிகைச் செயன்முறையாகும். அதாவது மாணவர்கள் புதிய அறிகையை தமக்கு ஏற்னவே தெரிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்துடன் தொடர்புபடுத்தி பொருந்தச்செய்வதாகும். கட்டுருவாக்கவாதிகளின் கருத்துப்படி அறிகை அல்லது கற்றல் என்பது கற்றல் சூழல், கற்பவனின் சிந்தனையாற்றல், நம்பிக்கை, மனப்பாங்கு, மனவெழுச்சி, முதிர்ச்சி மற்றும் ஈர்ப்பு போன்ற விடயங்களில் தங்கியுள்ளதாக ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அண்மைக்காலமாகக் கல்வியாளர்கள் மூளையின் செயற்பாட்டை மையமாகக் கொண்டு கற்றல் கற்பித்தல் செயலொழுங்கைத் திட்டமிடுதலில் வலியுறுத்தி வருகின்றனர். இங்கு மூளையின் இடது, வலது அரைக்கோளங்களின் செயற்பாடுகளில் உள்ள வேறுபாடுகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. அதனை பின்வருமாறு சுரக்கமாகக் குறிப்பிடலாம். மூளையின் வலது, இடதுபக்க அரைப்பகுதிகளின் செயற்பாடு ஒன்றிற்கொன்று வேறுபட்டதாகும். எனினும் தரமான கற்றலுக்கு முழு மூளையின் செயன்முறையாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

2.1 மூளை இயைபாக்கம் அடையக்கூடியதும் புதியநரம்பியல் இணைப்பாக்கங்களை செய்யக்கூடியதாகும்.

அதாவது மூளை வாழ்நாள் முழுவதும் நாம் பெற்றுக்கொள்ளும் புலக்காட்சித் தூண்டல்களின் மூலம் தன்னை மாற்றிக்கொள்வதற்குரிய இயலுமையைக் கொண்டுள்ளது. தேவையான விடயங்களில் நேரவகையன தூண்டல்கள் அமையும் போது மூளை புதிய நரம்பிணைப்புச் செயன்முறைகயனை (Process) மூலம் புதிய அறிவைக் கட்டுமானம் செய்து கொள்ளும். இதன் மூலம் அறிகை புத்தாக்கச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றது.

2.2 Mirror Neurons கண்ணாடி நரம்புகள்

மிரர் நரம்புகள் ஒருசெயற்பாட்டை செய்யும் போது அல்லது தூண்டலைப் பெறும் போது ஒரு தொகுதி நரம்புகள் செயற்பட ஆரம்பிக்கின்றன. இவை செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதுடன் உடல்மொழி, முகபாவனை மற்றும் மனவெழுச்சி வெளிப்பாடுகளையும் செயற்படுத்துகின்றது. அதேவேளை விஞ்ஞானிகளின் ஆய்வுகளில் பரிவுணர்விற்கும், மொழித்திறன்களை உள்வாங்குவதற்குமான செயன்முறைகளில் மிரர் நரம்புகள் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவ் மிரர் நரம்புகளின் தொழிற்பாடுகளை விளங்கிக்கொள்ளுதல் மூளையை அடிப்படையாகக் கொண்ட கற்றலுக்கு முக்கியமானதாகும்.

2.3 மனவெழுச்சிசெயன்முறைகளும் கற்றலும்.

மாணவரின் அறிகைச் செயன்முறைகளில் மனவெழுச்சிகள் (உணர்ச்சிகள்) முக்கிய பங்கினையும் தாக்கத்தினையும் செலுத்துகின்றது. மூளையை அடிப்படையாகக் கொண்ட கற்றலுக்கு மனவெழுச்சிகளை விளங்கிக்கொள்வதும், கட்டுப்படுத்துவதும், முகாமைசெய்வதும் மிக முக்கியமானதாகும். மாணவர்கள் தமது மனவெழுச்சிகளில் இருந்து கற்றுக்கொள்வதற்கும். மனவெழுச்சிகளையும் உணர்வுகளையும் கற்றலாக்கிக்கொள்வதற்கு நேர் சிந்தனையும், மறைசிந்தனையும் உதவிபுரிவதாக ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்படுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.4 டிஸ்லெக்ஸியா மற்றும் கற்றல் குறைபாடுகள்

கற்றல் குறையாடுகளினை அறிந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளானது ஒவ்வொரு தனி மாணவருக்குரிய தேவைகளை உளரீதியாக வழங்குவதற்கும், அவர்களுக்கான பரிகாரச் செயற்பாடுகளுக்கான உபகரணங்களை தயார்படுத்துவதற்கும் உதவுகின்றது. அத்துடன் நரம்பியல்சார் கற்றல் உபகரணங்களானது டிஸ்லெக்ஸியாவிலிருந்து மாணவர்களை விடுபடச் செய்கின்றது.

2.5 மரபும் - அனுபவங்களும்.

உளவியல் பற்றிய ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே மரபு- சூழல் என்பவற்றிகும் அறிகைக்குமான தொடர்புகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவந்துள்ளது. இவை இரண்டுமே மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதாக குறிப்பிடுகின்றார்கள்.

மரபானது எமதுதிறமைமற்றும் இயலளவு என்பவற்றை அடிப்படையாகவும், அனுபவம் என்பது ஒரு பிள்ளைதான் வாழும் அல்லது சூழலை பொறுத்து வேறுபடலாம் எனவும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றது. அதேவேளை கட்டுருவாக்கவாத கற்றல் சூழலை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களின் அனுபவக்கற்றலை விருத்தி செய்யலாம் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

3.0 கற்பித்தலில் மூளையின் தாக்கம்,

மாணவர் கற்றலில் காரணங்காணல், தர்க்கரீதியாகச் சிந்திப்பதற்கான பயிற்சி, வேலை நினைவகத்தைவிருத்தி செய்தல், நினைவக ஒருங்கிணைப்பு (காரணகாரிய தொடர்புபடுத்தல்), ஞாபகப்படுத்தல் செயற்பாடுகள் போன்றவை மூளையை அடிப்படையாகக் கொண்ட கற்றலுக்கு அடிப்படையாக அமைகின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது.

கற்பித்தல் தொடர்பான ஆராச்சிகள் மனித மூளை பற்றியும் கற்றலின் போது யாது நிகழ்கின்றது என்பது பற்றியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. Caine and Caine (1991) மூளையை அடிப்படையாகக்கொண்ட பொருத்தமான கற்பித்தல் பின்வரும் 12 கோட்பாடுகளைக் கொண்டு காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

3.1 மூளை பல்வேறு செயற்பாடுகளை ஒரேநேரத்தில் சமாந்தரமாகச் செய்யக்கூடியதான செயற்பாட்டு மையம். அதாவது ஒரே நேரத்தில் பலவகையான தகவல்களை, சிந்தனைகளை மனவெழுச்சிகளை கலாசார அறிவியல் விடயங்களை உள்வாங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டது. இதனடிப்படையில் பயனுறுதி வாய்ந்த கற்பித்தல் பல்வேறு நுட்பங்களைக் கொண்டதாகக் காணப்படும். "The Braine is a parallel processor"

3.2 கற்றல் என்பது முழுமையான உடற்றொழிலியல் செயற்பாடாகும்

3.3 கருத்தாராய்தல் மனிதனில் இயல்பாகவே காணப்படும் ஒரு பண்பாகும். விளை திறனுள்ள கற்பித்தல் தனியாள் வேறுபாட்டிற்கமைய மாறுபடும். அதாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரினதும் கற்றல் விளக்கங்களும் அவர்களது உள்ளார்ந்த அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு காணப்படும். The search for meanings is innate.

3.4 ஒருவரின் தன்னகத்தில் காணப்படும் சிந்தனைக் கோலங்களின் கருத்துருவாக்கத்திற்கான தேடல்கள் நிகழ்கின்றது. விளைதிறனுள்ள கற்பித்தல் தூரநோக்கின் அடிப்படையில் பரந்த சிந்தனையுடன் மேற்கொள்வதற்கான வழிகாட்டல்களாகவும், அடையக்கூடிய கற்பித்தல் இலக்காகவும், அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். The search for meaning occurs through patterning of thinkings.

3.5 மனவெழுச்சிகள் சிக்கலான கோலங்களைக் கொண்டதாகக் காணப்படும். கற்றலில் மனவெழுச்சிகள் உணர்வுகள், மனப்பாங்குகள் போன்ற உளவியல் காரணிகளும் செல்வாக்கச் செலுத்துகின்றன. Emotions are critical to patterning

3.6 மூளையானது பகுதி பகுதியாகவும், முழுமையாகவும் ஒரேநேரத்தில் செயற்படும். கற்றலின் அல்லது கற்பித்தலின் போது இதில் ஒருபகுதி செயற்பாடு இல்லாது போனால் அல்லது செயற்படுவதற்கு போதிய தகவல்கள் இல்லாது போனால் கற்றலில் அல்லது கற்பித்தலில் சிரமங்கள் ஏற்படும்.

3.7 குவியப்படுத்தப்பட்ட நோக்கங்களின் அடிப்படையிலும், மேலோட்டமாகவும் கற்றல் நடைபெறுகின்றது. அதாவது கற்றலில் குறித்த இலக்கை அடைவதற்காக அல்லது குறித்த விடயத்தை கண்டுபிடிப்பதற்காக அதனோடிணைந்த சில விடயங்களையும் கற்கவேண்டியேற்படும். கற்றலில் கற்றல் கீழமைவு, கலாசாரம் மற்றும்

3.8 கற்றல் நனவுநிலை செயன்முறைகளாகவும் நனவிலிநிலையிலும் காணப்படும் செயன்முறைகளினூடும் நிகழ்கின்றது. மாணவர் எப்படிக் கற்பது எதைக் கற்பது என்பது பற்றிய செயன்முறைக்கு போதிய காலஅவகாசம் வழங்கப்படவேண்டும். Learning always involves conscious and un conscious process

3.9 மனிதர்களில் இருவகையான ஞாபகங்கள் காணப்படுகின்றது. 1.அனுபவங்கள் மூலம் பெறப்படும் ஞாபகம் (இயற்கையாகக் காணப்படுவது), 2. மனப்பாடம் செய்வதன் மூலம் பெறப்படும் ஞாபகம். மனனம் செய்யும் முறைக்கு முக்கியத்துவம் வழங்குவது கற்றலில் பின்னடைவை ஏற்படுத்துவதுடன் கற்றல் வேகத்தையும் குறைவடையச் செய்யும். We have atleast 2 different type of Memories. A spatial memory system and a set of system for rote learning

3.10 அனுபவங்கள் மூலம் பெறப்படும் ஞாபகத்தினூடு விடயங்களை இலகுவாகவும், காரணத்துடனும் விளங்கிக்கொள்ளமுடியும் என்பதோடு செய்து பார்த்துக்கற்றல் அதிகவினைத்திறனுடையாக அமையும். We understand and remember the best when facts and Skills are embedded in natural, spatial memory

3.11 கற்றல் ஆனது சவால்களினாலும், தடைகளினாலும், தோல்விகளினாலும் விரைவுபடுத்தப்படும். வகுப்பறைச் சூழல் மாணவர்களுக்கு சவாலானதாக அமைதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அதற்காக பயமுறுத்தக்கூடியதாக அமைதல் கூடாது. Learning is enhance by challenges and inhibited by threat

3.12. ஒவ்வொரு மாணவரினது மூளையும் தனித்துவமானது. கற்பித்தல் பன்முகத்தன்மை வாய்ந்ததாக அமைதல் வேண்டும். மாணவர் தமது இயலுமைகளுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடியதாக கற்பித்தல் செயன்முறைகள் ஆசிரியரினால் ஒழுங்குபடுத்தல் அவசியமாகும்.

4.0 மூளையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் செயன்முறைகளில் ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:

கலைத்திட்டம் : ஆசிரியர்கள், மாணவர்களின் விருப்பங்கள் மற்றும் ஆயத்தநிலை, கற்றல் சூழமைவின் அமைப்பாக்கத்திற்கு ஏற்பவும் பாட விடயத்தை தெரிவுசெய்தல் வேண்டும். இது மாணவர்களை யதார்த்த நிலையில் கற்றல் செயன்முறைகளில் ஈடுபடுத்தும்.

அறிவுறுத்தல்கள் : ஆசிரியர்கள், மாணவர்களின் வினைத்திறனும் விளைதிறனும் உள்ளகற்றலுக்கு ஏற்றவகையில் கற்றல் இலக்குகளை படிமுறைக் கட்டுமானஞ் செய்யப்படவேண்டும். அதாவது அறிவை படிப்படியாக பெறுவதற்கு மாணவன் வகுப்பறைச் செயற்பாடுகள் உட்பட அனைத்துச் செயற்பாடுகளிலுமிருந்து கற்கக்கூடியவகையில் ஆசிரியரின் அறிவுறுத்தல் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

மதிப்பீடு : மாணவர்களின் அறிவை மதிப்பிடுவதை விட, மாணவர் கற்றுக்கொள்ளும் விதம் அவர்கள் முன்னுரிமைப்படுத்தும் விடயங்கள், ஆர்வங்களை மதிப்பிடுவதன் மூலம் அவர்களுடைய கற்றலினை மேம்படுத்தவும் மாணவர் தமது கற்றலினை தாமே மதிப்பிடவும் வழிநடாத்தவும் இலகுவாக அமையும்.

**5.0 முடிவுரை:**

கல்வித்துறையில் நரம்பியல் தொடர்பான தகவல்களைப் பயன்படுத்துவதானது கற்றலில் மூளையின் செயற்பாடு பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துவதுடன், கற்றல் குறைபாடுகள் மற்றும் மெல்லக்கற்கும் மாணவர்கள் விடயத்தில் ஆசிரியர்களின் கவனத்தை குவித்து அவர்களை சாதாரண கற்றல் செயன்முறைகளில் ஈடுபடுத்த வழிப்படுத்தும் என்பது கல்வியியலாளர்களின் நம்பிக்கையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கத்திறன் கல்வியின் புதியதோர் பரிமாணம்



**ந.பார்த்தீபன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

**ஆ**க்கத்திறன், படைப்பாற்றல், கற்பனையாற்றல் போன்ற சொற்கள் நீண்ட காலமாக கூறப்பட்டு வந்த போதும் நுண்ணறிவு பற்றிய கற்றல் இடம்பெற்ற பின்னரே மேற்கூறிய சொற்களிலும், அத்துறைகளிலும் அதிக அக்கறை காட்டப்பட்டது. கில்பேட் வெவ்வேறு படைத்தற் திறன்களை (24 - படைத்தற் திறன்கள்) அடையாளம் கண்டு, மனிதனுக்குள் விரிசிந்தனைச் செயல்துறையை ஆக்கத்திறனுடன் தொடர்புபடுத்தினார். இக் கருத்தைப் பல ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஆக்கத்திறன் என்பதைப் பலரும் வரையறை செய்துள்ளனர். கில்பேட் (1946) "பிரச்சினைகள் பற்றிய உணர்வு, கருத்துகளின் ஆற்றொழுக்கு, நெகிழ்பண்பு, சுயசிந்தனை, மீள்வரையறை, மீள்ஒழுங்குபடுத்தும் செய்திறன், தூலத்திறமை, தொகுத்தலும் முடித்தலும், பூரண மற்ற ஒழுங்கமைப்பு என்பவையே ஆக்கத்திறனைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகளாகும்" என்று குறிப்பிடுகின்றார்.

(1956) ட்ரேவ்ஹால் என்பவர் "ஆக்கத்திறன் என்பது குறிப்பிட்ட விளைபொருளைப் பொறுத்தளவில் இதற்கு முன் அறியப்பட்டிராததும் முக்கியமானதும் புதியதும் சாதனமானதுமான கட்டுரைகள், விளைபொருட்கள் அல்லது கருத்துக்கள் என்பவற்றைப் படைக்கக்கூடிய தகைமையை ஒருவர் கொண்டிருத்தல் வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

மக்கின் (1962) "ஆக்கத்திறன் என்பது அடையாளம் காணக்கூடிய இலக்கொன்றை அடைவதற்கு உதவும் வகையில் புதியதும், அரியதுமான படைப்பை உருவாக்கும் ஒரு செயற்பாடு" எனக் கூறுகின்றார். இவர் "ஐன்ஸ்டீனும் (விஞ்ஞான கண்டுபிடிப்பாளர்) பீத்தோவனும் (கவிஞர், இசைஞர்) ஆக்கத்திறனுடைய தனியாட்கள் தான் எனினும் அசாதாரணமான சிறந்ததொரு கவிதை எழுதும் 5ஆம் வகுப்பு மாணவனும் ஆக்கத்திறன் உடைய ஒருவனேயாவான்" என்றும் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம்.

எம்.ஜெ.லெவின் (1978) "பிரச்சினைகளுக்கு புதிய விடைகளைக் காணும் திறமை அல்லது புதிய கருத்துக்களையும் கண்டுபிடிப்புக்களையும் வெளிப்படுத்தும் திறமை அல்லது கலையாக்கங்களைப் படைக்கும் திறமை என்பவற்றைக் கொண்டது" என வரையறுக்கிறார். மேலும் "அது ஒரு விசேட வகையான சிந்தனை உலகை வேறு விதமாக நோக்கி அத்துடன் சாதாரணமான மக்கள் கொள்ளாத முறையில் வித்தியாசமாக இடைத்தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதாகும்" என்கிறார். இவ்வாறு ஜக்சன், மெசிக், பப்லியா, ஒல்ட்ஸ், வேர்னன் போன்றோரும் ஆக்கத்திறன் தொடர்பாக குறிப்பிட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கில்பேட்டின் கருத்து எமது அவதானத்துக்குரியது "வயது அதிகரிப்பைப் பொறுத்து ஆக்கத்திறன் ஆற்றல் அதிகரிக்கின்றது. உதாரணமாக "6ஆம் வகுப்பில் படிக்கும் மாணவனை விட 9ஆம் வகுப்பில் படிக்கும் மாணவன் சகல ஆக்கத்திறன் பணிகளிலும் உயர்மட்டத்தில் இருக்கிறான்" என்று கில்பேட் குறிப்பிடுகிறார். இதற்காக ஐக்கிய அமெரிக்காவில் பல்வேறு துறைகளில் ஆக்கத்திறனை அடையாளம் காண்பதற்காக பல்வேறு துறைகளில் கற்கும் மாணவர்களின் திறமைகளை அடையாளம் காண "திறமைசார் செயற்றிட்டம்" என்பதை உருவாக்கி இனங்கண்டுள்ளார்.

ஆக்கத்திறன் ஒரு சர்வதேச பண்புக்கூறாகும். அது ஒரு குறிப்பிட்ட தனியாளுக்கு அல்லது குழுவுக்கு மட்டும் உரியதாக எல்லைப்படுத்தப்பட்டதல்ல. பலரும் ஏதோவொரு அளவிற்கு ஏதோவொரு ஆக்கத்திறனை வெளிக்காட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்ற முடிவு கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு தெரிந்திருக்கவேண்டும்.

சிலர் ஆக்கத்திறனானது உடன்பிறந்தது. பரம்பரையானது, கற்றல் அல்லது பயிற்சி மூலம் பெறமுடியாத விசேட உளச்சக்தி அல்லது தனித்துவமான அறிவுசார்ந்த ஆற்றல் என நினைக்கின்றார்கள். மேலும் ஆக்கத்திறன் உடையவர்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டவர்களல்லர். பிறப்புத் தொடக்கம் அத்திறன் இயல்பாக அமைந்தவர்கள் என்றெல்லாம் கருதுகிறார்கள். ஆனால் அது அவ்வாறல்ல.

கில்பேட்டின் கருத்துக்கு இசைவாக கெட்செல், டொரன்ஸ் என்போரும் "ஆக்கத்திறன் ஒரு கற்கப்பட்ட திறன். அதை உற்சாகப்படுத்துவதன் மூலமும் அங்கீகரிப்பதன் மூலமும் விருத்தி செய்யலாம்" எனக் கூறுகின்றார்கள். கவிஞர்கள் பிறப்பதில்லை, உருவாக்கப்படுகிறார்கள் என்பது இன்று அதிகம் பேசப்படுகிறது. பொதுவாக ஆக்கத்திறன் கொண்டவர்கள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறார்கள்" என்ற அசைக்கமுடியாத எண்ணம் ஆசிரியர்களுக்கு அவசியம்.

எடிசன் என்பவர் "1% உள்ளுணர்வினாலும் 99% வியர்வையினாலுமே ஒரு மேதை உருவாகின்றான்" என்றார்.

ஆக்கத்திறன் உள்ளவரின் செயற்பாடுகளை உற்சாகப்படுத்தும், அங்கீகரிக்கும் செயற்பாட்டில் ஆசிரியர்கள் ஈடுபடவேண்டும். அவ்வாறின்றி, அவற்றைக் கவனியாது வருமிடத்து அது அடக்கப்படுகின்றது என்பது ஆக்கத்திறன் தொடர்பாக கருத்துரைத்தவர்களின் முடிவாகும்.

ஆசிரியர்கள் மாணவர்களது படைப்பாக்கத்திற்கு வசதிகளை, வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, உற்சாகப்படுத்தி, அங்கீகரித்து விருத்தி செய்யவேண்டும். ஒவ்வொரு மாணவனிடமும் ஏதாவதொரு திறமை இருக்கும் என ஆசிரியர்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும். அதனை இனங்கண்டு தூண்டிவிடவேண்டும்.

எமது நாட்டில் நடைமுறையில் முறைசார் கல்வி முறையில் குவிசிந்தனையும் அதிகாரக் கற்பித்தலும் தான் அதிகம் இடம்பெறுகின்றது. பாடசாலைக் கல்வியில் கல்வியின் அடைவு வலியுறுத்தப்படுகின்றது. பரீட்சைப் பெறுபேறுகளே குறிகாட்டிகளாகக் கருதப்படுகின்றன. பெற்றோரின் எதிர்பார்ப்பும் இங்கு அதிக தாக்கம் செலுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை இலக்கும் உயர் தராதரங்களும் கற்றலின் குறிக்கோளாக இருப்பதால் பாடசாலைச் சூழலும் உயர்ந்த அடைவு பெறுவோருக்கு உதவுகின்றதேயொழிய ஆக்கத்திறன் உடையவர்களுக்கு அல்ல என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

'பரீட்சைகளே கல்வித்திட்டத்தின் சிகரமாயின்' மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கும் நெகிழ்ச்சி நிகழ்வதற்கும் சிறிதளவே இடம் இருக்கும் என்பதை விரும்பியோ விரும்பாமலோ நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

பொதுவாக பாடசாலைகள் நாடகப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், இலக்கியச் செயற்பாடுகள், ஓவியச் செயற்பாடுகள், விஞ்ஞான தினக்கொண்டாட்டம், வர்த்தக தினக் கொண்டாட்டம், ஓவியக் கண்காட்சி போன்றவற்றைக் கொண்டாடுகின்றன. அவற்றிலெல்லாம் முறைப்படி அவதானித்து, ஆக்கத்திறனை இனங்கண்டு, உற்சாகப்படுத்தி தொடர்ந்து அந்த ஆக்கத்திறனில் ஈடுபடும் மாணவன் செயற்பட முழுமையான வாய்ப்புகள் கொடுக்கப்படுவதில்லை.

பாடசாலை மட்டத்தில், கோட்ட, வலய, மாகாண மட்டத்தில் ஒரு காலப்பகுதியில் தனது ஆக்கத்திறனை வெளிப்படுத்திய மாணவன் அடுத்த மட்டங்களிலோ, பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னரோ தனது ஆக்கத்திறனைத் தொடர்வதைக் காணமுடிவதில்லை.

இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஆக்கத்திறனை வெளிப்படுத்திய போதும் பின்னர் பரீட்சைப் பெறுபேறு, உயர்கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்புக்கான தராதர முயற்சி போன்ற காரணங்களினால் ஆக்கத்திறன் செயற்பாடு அற்றுப்போய்விடுகிறது.

இன்று, பாடசாலை மட்டத்தில் ஓவிய, நடிப்பு, விளையாட்டு போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் பின்னர் சிறந்த ஓவியராகவோ, நடிகராகவோ, விளையாட்டு வீரராகவோ தன்னை இனங்காட்டத் தவறிவிடும் நிலையைப் பார்க்கிறோம். இது முன்னர் குறிப்பிட்ட பரீட்சை இலக்கும், உயர்தரப் பெறுபேறும் காரணமாக அமைய ஆக்கத்திறன் சாத்தியமற்றதாகிப் போகும் நிலையை ஏற்படுத்துவதை அறிகிறோம்.

இருப்பினும் புதிய நூற்றாண்டுக்கான கல்வி ஏற்பாடு என்ற கட்டுரையில் "கல்விமுறை ஆக்கத்திறன் கொண்ட புதிய நிறுவனங்களைக் கொண்டிருக்கவேண்டும். இவையே சிறப்பாகக் கல்வியூட்ட முடியும். இன்றைய கல்வி முறையின் முக்கிய குறைபாடு அதன் நிறுவனங்கள் படைப்பாக்கத் துறையில் கவனம் செலுத்தாது இருக்கின்ற பழைய அறிவைத் திரும்பத் திரும்பப் புகட்டுவதாகும். எதிர்கால மையக்கல்வியின் புதிய சவால்களை எதிர்நோக்க புதிய படைப்பாக்க நிறுவனங்கள் உருவாக்கப்படுதல் முக்கியமானதாகும்" என்று பேராசிரியர் சோ.சந்திரசேகரன் குறிப்பிடுவதை ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்நிலையில் பாடசாலைப் பிள்ளைகளின் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்கு இரு முறைகளைப் பாடசாலைகளில் பின்பற்றலாம். ஒன்று ஆக்கத்திறனைப் பயிற்றுவதற்காக விசேட கல்வி அனுபவங்களை அறிமுகப்படுத்துதல். உதாரணமாக காலத்திட்டத்துடன் ஆக்கபூர்வமான சிந்தனை வேலைகள், பிரச்சினை விடுவித்தல் வேலைகள், பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைத் தொடர்புக் குழுக்கள் என்பவற்றைச் சேர்த்துக்கொள்ளுதல். இரண்டாவதாக சாதாரண பாடசாலைக் கலைத்திட்டத்தில் பரிசோதனை தொடர்பான திறந்த அணுகுமுறையைப் பின்பற்றலாம்.

மாணவர்களிடம் ஆக்கத்திறன் செயற்பாட்டின் விருத்தியை விளங்கிக் கொள்வதற்காக வோல்ஸ் என்பவர் குறிப்பிட்ட ஆயத்தம், உருவாக்குதல், உள்ளுணர்வு உந்தப்படுதல், நிரூபித்தல் ஆகிய நான்கு கட்டங்களை அடையாளம் காணவேண்டும். மேலும் டொரன்ஸ், மயர்ஸ் என்போர் ஆக்கத்திறன் செயற்பாடு பிரச்சினையை உணர்தல், தேவையான தகவல்களைச் சேகரித்தல், பெறுபேறுகளின் கருத்துப் பரிமாற்றம் ஆகிய 3 கூட்டங்களைக் குறிப்பிட்டதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றோடு ஆயத்தம் எடுகோள் உருவாக்குதல், எடுகோளைச் சோதித்தல், பெறுபேறுகளைப் பகிர்ந்துகொள்ளுதல் ஆகிய 4 கூட்டங்களை ஆக்கச் செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தியும் பார்க்கலாம்.

ஆக்கத்திறன் அல்லது படைப்பாக்கத்திற்கு விரிசிந்தனை அவசியமென முன்னர் குறிப்பிடப்பட்டது. முறைசார் பாடசாலைகள், முறையில் பாடசாலைகளை ஆய்வுக்குட்படுத்திய போது முறையில் பாடசாலைப் பிள்ளைகள் விரிசிந்தனைகளில் உயர் புள்ளிகளைப் பெற்றுள்ளது அவதானிக்கப்பட்டது.

கல்வியியலாளர் ஆக்கத்திறனை மேம்படுத்த பிள்ளைகள் வினாக்களை எழுப்புவதற்கு உற்சாகப்படுத்தப்படவேண்டும் என்றும் அந்த வினாக்களுக்கு எதுவித அர்த்தமும் காணப்படாவிடின் கூட கேட்கப்படும் எல்லா வினாக்களுக்கும் ஆசிரியர்கள் மதிப்பளிக்க வேண்டும். குழந்தைகள் வினாக்கள் எழுப்ப உற்சாகப்படுத்தப்படுவதன் மூலம் அவர்கள் சரியான திக்கில் சிந்திப்பதற்கு உற்சாகப்படுத்தப்படுவார்கள்.

பியாஜே "ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு அதிகமாக அனுபவரீதியான பயிற்சிகள் தேவை என்றும் பொருத்தமான விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டுக்கள், புத்தகங்கள், அடுக்குக் கட்டைகள் போன்றவற்றையும் கையாளக்கூடிய வேறு விளையாட்டுப் பொருள்களையும் வழங்கினால் அது அவர்களுக்கு பிரயோசனமாக அமையும்" என்று குறிப்பிட்டார்.

இடைநிலைப் பாடசாலையில் ஆக்கத்திறனை ஊக்குவிப்பதற்கு பாடப்பரப்பையொட்டிய செயற்றிட்ட வேலைகள் உதவி செய்யும். எனவே பிள்ளைகள் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கவேண்டும். டொரன்ஸ் என்பவர் "வகுப்பறையில் பிள்ளைகளின் சுயவிருப்பத்திற்காகப் போதனை நடைபெறாத பாடவேளைகளும் ஒதுக்கவேண்டும்" எனக் கூறுகிறார். பாடப்புறச் செயற்பாடுகளின் விரிவு என்பது ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு முக்கியமானது. நாடகக்குழுக்கள், விளையாட்டுக் குழுக்கள், இடைத் தொடர்புக் கழகங்கள் என்பன மாணவர்கள் வளமான அனுபவங்களைப் பெற உதவும் என்பது தெளிவான விடயமாகும்.

ஆக்கத்திறனை ஊக்குவிக்க பின்வரும் வகுப்பறைச் செயற்பாடுகளை முன்வைக்கலாம். வினாக்கள் எழுப்புவதற்கு ஊக்குவிக்கவேண்டும். அவர்கள் செயலற்ற நிலையில் ஆசிரியர் கூறுவதையோ கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது. புதுமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களைக் கூறும் போது அவர்கள் சிந்தனைக்கு மதிப்பளியுங்கள். சுயகற்றல் செயற்றிட்ட வேலைகள் என்பவற்றை ஊக்குவியுங்கள் வாசிப்பதற்கு ஊக்கமளியுங்கள். சிந்திக்கும் திறனை விருத்தி செய்யுங்கள். பாடக்கலைத்திட்டத்திலிருந்தும் வேறுபட்ட கவர்ச்சிகரமான தலைப்புகள் பற்றி கலந்துரையாடுங்கள். மாணவர்களின் உயர் அடைவு மட்டத்திலும் புதிய திறமைகளிலும் அக்கறை செலுத்துங்கள்.

மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு தடையாக பின்வரும் வகுப்பறை நடைமுறைகள் காணப்படுகின்றன. நெகிழ் பண்பு இல்லாத கால அட்டவணை, மாற்றம் ஏற்படுத்த முடியாத வகையில் மையநிலையில் வரையப்பட்ட காலத்திட்டம், பரீட்சையில் வெற்றியை வலியுறுத்தல், அனுசரிப்பு பற்றிய ஆசிரியர் மனப்பாங்கு, தடையற்ற வகுப்பேற்றம் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் ஆக்கத்திறனை மேம்படுத்த, விரிசிந்தனையை உருவாக்க வேண்டுமென்பதில் இரு கருத்தில்லை. விரிசிந்தனையில் சிந்தனைச் செயன்முறையானது பல விடைகளையும் தேடியபின் பல்வேறு திக்குகளுக்கு வழிநடத்தப்படுகின்றது.

மாணவர்களிடம் விரிசிந்தனையை உருவாக்குவதற்கு ஆசிரியர்களுக்கு உதவியாக டேவிஸ் என்பவர் "பகுதி மாற்றும் முறை, சதுரங்கப் பலகை முறை, ஒத்த தன்மையுடையதைக் கண்டுபிடித்தல், பிரச்சினை விடுவித்தல் முறை, சிந்தனைக் கிளறல் முறை" ஆகிய 5 முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளார். இம்முறைகளைத் திட்டமிட்டு ஆசிரியர்கள் பயன்படுத்தவேண்டும்.

பரன் என்பவர் "பிரித்தானிய பாடசாலைகளைக் குறிப்பிட்டு ஆக்கத்திறன் மாற்றங்களைப் பாடசாலை முறைமையில் ஊக்குவிக்க வேண்டுமாயின் ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் திசைநெறிப்படுத்தல் தேவை" என்று குறிப்பிட்டார். இந்தக் கருத்து எமது பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பொருத்தமாயிருக்கும் என்றே குறிப்பிடவேண்டும்.

முதலில் பகுதிமாற்றும் முறையைப் பார்ப்பின் ஒரு பொருளின் பகுதிகளை மாணவர்கள் மாற்றும்படி எதிர்பார்க்கப்படுகிறார்கள். உதாரணமாக ஒரு பொத்தானை நினையுங்கள். அதற்கு உருவம், நிறம், அளவு போன்ற குணங்கள் உண்டு. இதனை விட வேறு வடிவம், அளவு, நிறம் ஆகியவற்றிலான புதிய வகைப் பொத்தானை கீறுதல். இது போன்ற வேறு பொருட்களும் பயன்படுத்தலாம்.

அடுத்து, சதுரங்கப் பலகை முறை 2 அச்சுக்களிலும் கிடையாகவும் செங்குத்தாகவும் சொற்கள் எழுதுவதற்கு இடம்விட்டு சதுரங்கப் பலகையொன்றை உருவாக்க வேண்டும். இதில் சொற்களுக்குப் பதிலாக எண்கள் இட்டும் செய்யலாம். அத்தோடு சரி பார்த்தல் அட்டவணை ஒன்று உருவாக்க வேண்டும். கனிஷ்ட நிலை வகுப்பைச் சேர்ந்த மாணவனொருவன் நிறம் தீட்ட உருவாக்கப்பட்ட அந்த சரிபார்த்தல் அட்டவணையானது பின்வருவனவற்றை கொண்டிருக்கும். 1. நிறம் மாற்றுதல் 2. அளவை மாற்றுதல் 3. உருவத்தை மாற்றுதல் 4. புதிய பொருட்களைப் பயன்படுத்துதல் 5. கூட்டல் அல்லது கழித்தல் 6. மீள் ஒழுங்கு பண்ணுதல் 7. புதிய கோலமொன்றினை அடையாளம் காணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது, ஒத்த தன்மையுடையதைக் கண்டுபிடித்தல். இம்முறையில் புதிய கருத்துக்களை முன்வைக்குமாறு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். உதாரணமாக வினா ஒன்றைக் கொடுத்தல், கடைத்தொகுதி ஒன்றில் வாகனங்கள் நிறுத்துவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதைத் தீர்க்கும் வழிவகைகளைக் கண்டுபிடியுங்கள்.

அடுத்து, பிரச்சினை விடுவித்தல் முறை, பிரச்சினை ஒன்றினைக் கூறி அதற்கான தீர்வுகளைப் பட்டியல்படுத்தும்படி மாணவர்களிடம் கூறவேண்டும். பிரச்சினை : செங்கல்லின் உபயோகங்கள் என்ன? ஓடாத சுவர்க்கடிகாரத்தின் பயன்கள் என்ன? இப் பிரச்சினையைத் தீர்க்க பல்வேறு விடைகளை மாணவர்கள் முன்வைப்பார்கள்.

இறுதியாக, சிந்தனைக் கிளறல், சுதந்திரமாக தம் கருத்துக்களை வெளியிடுமாறு ஒருவரைக் கேட்க வேண்டும். அதன்பின்பு அவரது கருத்துக்கள் பற்றி நுணுக்கமாகப் பரிசீலிக்கப்படும். இது பலர் அடங்கிய ஒரு குழுவேலை. யாவரும் பங்களிப்புச் செய்வர். உதாரணமாக எமது நாட்டில் எவ்வாறு சமாதானத்தைக் கட்டியெழுப்பலாம். விடைகள் கிடைத்தவுடன் அவற்றைக் கவனமாகப் பரிசீலனை செய்யவேண்டும். பயனுள்ள பல மறுமொழிகள் கிடைக்கும்.

சிறந்த கல்வி, தகுந்த கவனிப்பு, போதிய சந்தர்ப்பங்கள் வழங்கல் போன்றவற்றின் மூலம் மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்தி உயிரோட்டம் பெற்றுத் தூண்டப்படுகிறது. ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்கேற்ற சுற்றாடலையும் வசதிகளையும் ஒழுங்குபடுத்துவதற்கு ஆசிரியர்கள் முயற்சி எடுக்கவேண்டும்.

ஆக்கத்திறன் வளர்க்கப்படக்கூடியது. பயிற்சியும் முயற்சியும் இதற்கு அவசியம். கலை அனுபவங்களை ரசிப்பவர்களாகவும் அழகியல் கலைகளை உணரக்கூடியவர்களாகவும் நெகிழ் பண்பு கொண்டவர்களாகவும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்பவர்களாகவும் சுயேச்சையான மனதுடையவர்களாகவும் சுதந்திரமாக செயற்படுவர்களாகவும் பரந்த அளவிலான திறமைகளும் நாட்டங்களும் கொண்டவர்களாகவும் இருக்கக்கூடிய ஆக்கத்திறன் கொண்டவர்களை உருவாக்குவது பண்புத் தரவிருத்தி கொண்ட மாணவ சமுதாயத்தைப் பெற்றுத்தரும். ஆசிரியர்கள் இதற்கான பங்களிப்பைச் செய்யவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தக்கூடிய வளங்கள்



**K.சிவகுமார்**
விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

**கற்றல் கற்பித்தல் வளங்கள் என்றால் என்ன?**

கற்றலிலும் பயிற்சியிலும் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் தனியாளுக்கும் குழுக்களுக்கும் இடையில் தொடர்புகளை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் உபகரணங்கள் கற்றல் துணைச்சாதனங்களாகும். (எட்கார்டேல்)

**கற்றல் கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம்.**

* மாணவர்களைக் கற்றல் செயல்களில் ஊக்குவிக்கிறது.
* புலன்களினூடாக அனுபவங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதால் மாணவர்களுக்கு தெளிவான விளக்கம் கிடைக்கிறது.
* மாணவர்களின் அவதானத்தைப் பெற்றுக்கொள்ள துணையாக அமைகிறது.
* ஒரேவிதமான கற்றல் நிலைமைகட்கு வேறுபாடுகளை வழங்குகிறது.
* கற்றுக் கொள்பவைகளை உண்மையான அனுபவங்களாகப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கிறது.
* தனியாள் வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்ள இடமளிக்கிறது.
* நீண்ட விளக்கம் வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் சுருக்கி ஒழுங்காகவும் பொருளுள்ளதாகவும் சமர்ப்பிக்கலாம்.

நாம் ஞாபகம் வைத்துக் கொள்வது

* வாசிப்பு - 10%
* கேட்டல் - 20%
* பார்த்தல் - 30%
* கேட்டல் + பார்த்தல் - 59%
* பேச்சு - 90%

**கற்றல் கற்பித்தல் வளங்களின் முதன்மையான மூன்று மூலகங்கள்**

* **ஊடகம்**

  ஒரு மூல முதலுக்கும் தகவல் பெறுநருக்குமிடையில் தகவலைக் கொண்டு செல்லும் எதனையும் ஊடகம் எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **தகவல்**

  நூல்களிலும் இணையதளங்களிலும் உள்ள அறிவு செய்திகள், கருத்துக்கள், உள்ளடக்கம் முதலியவையாகும்.

* **போதனை**

  கற்போர் தமது ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியாக அனுபவங்களையும் வளங்களையும் ஒழுங்குபடுத்துவதன் மூலம் கற்றலைத் தூண்டும் எந்த முயற்சியையும் குறிக்கும்.

**கானேயின் கற்பித்தலுக்கான ஒன்பது நிகழ்வுகள்**

* கவனத்தைப் பெறுதல்
* கற்போருக்குக் குறிக்கோள்களைத் தெரிவித்தல்.
* முன்னைய கற்றலை நினைவுபடுத்திக் கொள்ள தூண்டும்.
* உள்ளடக்கதை முன்வைத்தல்.
* கற்றல் வழிகாட்டல்களை வழங்குதல்
* செயலாற்றலை வெளிக்கொணர்தல்
* பின்னூட்டலை வழங்குதல்
* செயலாற்றலை கணிப்பிடுதல்
* நினைவில் நிற்பனவற்றை மேம்படுத்தல்.

**கற்றல் கற்பித்தல் சாதனங்களைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிவை**

* மாணவர்களின் வயது, தரம், நடத்தைகள் ஆகியவற்றுக்குப் பொருந்தக் கூடியதாக இருத்தல். மாணவர்களின் விருப்பையும் ஊக்கலையும் தூண்டக்கூடியது.
* பாடத்தின் நோக்கங்களை அடையக்கூடியதாக இருத்தல்.
* உண்மை நிலையைப் புலப்படுத்தக் கூடியதாக இருத்தல்.
* செலவு குறைவானதாக இருத்தல்
* பிள்ளைகளுக்கு தீங்கு விளைவிக்காதவையாக இருத்தல்.
* மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல்.
* வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய வசதி.
* மாணவர்கள் கையாளக்கூடியதாக இருத்தல்.
* உபகரணத்தின் அளவு போதுமானதாக இருத்தல்.
* எடுத்துச்செல்லக்கூடியதாக இருத்தல்.
* மீளப் பயன்படுத்தும் தன்மை.

**கற்றல் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.**

* சகல மாணவர்களும் பார்க்கக் கூடியதாக இருத்தல்.
* பொருத்தமான சந்தர்ப்பத்தில் மாத்திரம் பயன்படுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்குரிய ஆசிரியரின் ஆயத்தநிலை.
* ஆசிரியர் முன்கூட்டியே செய்து பார்த்தல்.
* இடவசதியை ஏற்படுத்துதல்.
* மாணவர் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
* மாணவரின் கவனத்தை பேணக்கூடியதாக இருத்தல்.
* நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பயன்படுத்துதல்.
* திட்டமிட்ட வகையில் படிமுறையாக முன்வைத்தல்.

**கற்றல் கற்பித்தல் வகைகள்**

1. கட்புல சாதனங்கள்
2. கையாளத்தக்க பொருட்கள்
3. ஒலி - ஒளி சாதனங்கள்
4. பாடமும் ஆட்களும்
5. மாணவர் செயலடைவுக் கோவைகள்

**கற்றல் கற்பித்தல் வளங்களாக கட்புல சாதனங்கள்**

1. எறிவையல்லா கட்புலப் பொருட்கள்
    * வரிப்படங்கள்
    * விகடச்சித்திரங்கள்
    * விளக்கப்படங்கள்
    * வரைபுகள்
    * தேசப்படங்கள்
    * புகைப்படங்கள் / ஒளிப்படங்கள்

2. ஏறிவை வகைக் கட்புலச்சாதனங்கள்
    * தலைமேல் எறியி
    * LCD எறியி
    * ஆவணக் கமரா
    * பல்லூடகக் கருவி

**கையாளத்தக்க பொருட்கள்**

ஒரு கற்றல் சூழலில் பார்க்கக்கூடிய மற்றும் கையாளக்கூடிய பொருட்களாகும்.

1. உண்மைப் பொருட்கள்

    நாணயங்கள், தாவரங்கள், விலங்குகள், இயந்திரங்கள், பொறிகள், மாதிரிகள் போன்றவை.

2. மாதிரிப் பொருட்கள்

    மனித உடல் உறுப்புக்களின் மாதிரிகள், கேத்திர கணித உருக்கள், புவியின் மாதிரி, ஞாயிற்றுத்தொகுதி போன்றவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒலி - ஒளி சாதனங்கள்**

* வானொலி
* தொலைக்காட்சி
* கணனி
* கைபேசி

**பாடமும் ஆட்களும்**

பாடநூல்கள், புனைவு / புனைவு அல்லாத நூல்கள், கைநூல்கள், விபரக்குறிப்புகள், கற்றல் வழிகாட்டல்கள், ஆசிரியராலும் மாணவராலும் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள்.

**மாணவர் செயலடைவுக் கோவைகள்**

மாணவரின் அடைவு அல்லது வளர்ச்சியின் கதையைக் கூறும் மாணவரது வேலைகளின் அர்த்தமுள்ள தொகுப்பாகும்.

**கரும்பலகை வெண்பலகை, பச்சைப் பலகையைப் பயன்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள்.**

* கரும்பலகையில் தெளிவாகவும் சரியாகவும் குறிப்புகளை எழுதுதல்.
* கரும்பலகையில் குறிப்பிடப்படும் சகலவற்றையும் சகல மாணவர்களும் பார்க்கக் கூடியதாகப் பெரிய அளவில் குறிப்பிடல் வேண்டும்.
* கரும்பலகை முறையாகவும் ஒழுங்காகவும் பயன்படுத்தப்படல் வேண்டும்.
* மாணவர்களுக்கு வலியுறுத்திக் கூறவேண்டிய முக்கியமானவைகளை மட்டும் குறிப்பிடல் வேண்டும்.
* கரும்பலகையில் இடம்பெறவேண்டிய படங்கள், வரைபுகள் முதலியவற்றை நேரகாலத்துடன் வரைந்து வைத்திருந்து பயன்படுத்தல் வேண்டும்.
* கரும்பலகையைப் பயன்படுத்தும் போது தேவைப்படும் வெண்கட்டி, அடிமட்டம், கோணங்கள் முதலியவற்றை நேரகாலத்துடன் ஆயத்தம் செய்து வைத்திருத்தல் அவசியம்.
* கரும்பலகையை முடியுமான அளவு மாணவர் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தல் வேண்டும்.
* பாட இறுதியில் கரும்பலகை எழுத்துக்களை அழித்துச் சுத்தமாக வைத்துவிட்டு வெளியேறல்.
* தகவல்களை வழங்கக்கூடிய வேறு வழிகளையும் கவனத்திற் கொள்க.
* கிறீச்சிடும் வெண்கட்டி எரிச்சலூட்டும்.
* நிறங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துக.
* அவசரப்பட்டு அழித்துவிட வேண்டாம்.

**பாடநூல்களைப் பயன்படுத்துவதால் ஆசிரியர் பெறக்கூடிய பயன்கள்**

* ஆசிரியரின் அறிவு திறன்களில் காணப்படும் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கற்பித்தலுக்கு எடுக்கும் நேரத்தை மிகவும் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.
* பயனுள்ள வகையில் வீட்டு வேலைகளை வழங்குவதற்கு உதவுகின்றன.
* அதிகம் திறமையுள்ள ஆசிரியர்களின் கற்பித்தல் பயன்களை அதிகரித்துக் கொள்ள உதவும்.

**பாடநூல்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்**

* பாடநூல்கள் மாணவனின் கற்றலுக்கு உதவும் பயனுள்ள ஒரு நுட்பமுறை மட்டுமேயாகும்.
* பாடநூல்களில் உள்ளவற்றை மட்டும் மாணவனின் கற்றலை வரையறைப்படுத்தக் கூடாது.
* பாடநூல்கள் கற்றலுக்காக பயன்படுத்தக் கூடிய அடிப்படையாகும்.
* கற்றுக்கொள்ளும் பாடங்களுக்குப் பொருத்தமான சகல அம்சங்களையும் பாடநூல்கள் சமர்ப்பிப்பதில்லை.
* பாடநூல்கள் ஆசிரியர்களின் செயல்களுக்கு உதவுபவைகளேயன்றி ஆசிரியர்களின் செயல்களை நிறைவேற்றுபவைகளல்ல.

**தாள் புரட்டி (Flip Chart)**

* மிக எளிமையாக பயன்படுத்தக் கூடியது.
* மாணவர் கவனத்தை ஈர்க்கக்கூடியது.
* கருத்துக்கள், எண்ணக்கருக்களுக்கு கட்புல வெளிப்பாட்டை தரக்கூடியவை.
* சொற்களால் விளக்க முடியாதவற்றையும் கூறக்கூடியவை.
* குழுக்களுக்கிடையில் ஒத்துழைப்பை உருவாக்குபவை.
* மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய இரு பிரிவினரும் விருத்தி செய்து பயன்படுத்தக்கூடியவை.

**தாள் புரட்டியைப் பயன்படுத்துவதற்கான உதவிக் குறிப்புகள்**

* முடிந்தால் நேரகாலத்துடன் தயாரித்தல்.
* எழுதப்பட்ட இரண்டு பக்கங்களுக்கிடையில் ஒரு பக்கத்தை வெறுமையாக விடவும்.
* அட்டவணைகள், உருவப்படங்களை வரைய வேண்டியிருப்பின் முன்கூட்டியே பென்சிலால் அவற்றின் வெளி உருவங்களை வரைந்து கொள்ளவும்.
* தாள் புரட்டியின் இறுதியில் ஒரு முடிவுரைப்பக்கம் இருந்தல் வேண்டும்.
* தாள் புரட்டியின் முதலாவது பக்கம் வெறுமையாக இருத்தல் வேண்டும்.
* ஒவ்வொரு பக்கத்திலும் முக்கிய கருத்துக்களுக்கிடையில் போதிய இடைவெளி விடவும்.
* எழுத்துக்கள் போதுமான அளவுக்கு பெரிதாக இருக்கவேண்டும்.
* அட்டவணைகள், வரைபடங்களுக்கும் முக்கியமான சொற்களின் கீழ் கோடிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆசிரியர் தான் பேசும் போதே எழுதுவாராயின் ஒரு புறமாக நின்று எழுத வேண்டும்.
* முன்வைப்பு முடிந்த பின் புதிதாகச் சேர்க்கப்பட்ட விடயங்கள் மீதான ஒரு குறிப்பைத் தயாரிக்க வேண்டும்.

**மேந்தலை எறியியை பயன்படுத்துவதற்கான குறிப்புகள்**

* தெளிவு
* இடவமைப்பு
* வினைத்திறன்
* முழுப்பந்தியாக எழுதாமல் குண்டுக்குறியிட்டு எழுதுதல்
* ஒரு ஊடுகாட்டியில் மிதமிஞ்சிய விடயங்களை எழுதுவதைத் தவிர்த்தல்.
* பெருந்தொகையான ஊடுகாட்டிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
* ஊடுகாட்டிகளைக் கட்டமைத்தல்
* படைப்புத்திறன்

**கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்தக்கூடிய தொழிநுட்பம்**

கணினி, இணையதளம், மின்னஞ்சல், குறுந்தகடு, ஒளிப்பேழை, விண் அரங்கம், இடைவினை புரியும் காட்சித்தொகுப்புகளின் அமைப்பு போன்ற நவீன நுட்பங்களைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தத்தம் வசதிகளுக்கு ஏற்ப தாமே கல்வித்தகவர்களோடு தொடர்பு கொண்டு கற்றறிந்திட வழிவகை செய்து கல்வித்தரத்தை உயர்த்திட முனைவதையே தகவல் தொடர்பு நுட்பவியலின் துணைகொண்டு கற்பித்தல் என்று அழைக்கிறோம்.

முற்காலத்தில் ஆசிரியர்கள் வாய்மொழியாகவே மாணவர்கள் கற்றறிய வேண்டிய செய்திகளை அல்லது தகவல்களை அளித்திடுவார்.

தற்காலத்தில் ஆசிரியர்கள் கரும்பலகை, வெண்கட்டி ஆகியவற்றைப் பயன்படுத்தி வாய்மொழியாகவும், எழுத்து வடிவிலும் மாணவர்கள் கற்றறிய வேண்டிய செய்திகளை அல்லது தகவல்களை வழங்குகின்றனர்.

இதன் அடுத்த கட்டமாக மாணவர்களது கற்றலை மேம்படுத்த வகுப்பறையில் கட்புல செவிப்புல பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

இன்றைய வகுப்பறைகளில் நவீன மின்னியல் ஊடகங்கள் கற்பித்தலுக்கு பயன்படத்தொடங்கியுள்ளன.

இன்றைய காலகட்டத்தில் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்திட தகவல் தொடர்பு நுட்பங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இவற்றை பின்வரும் நான்கு பிரிவுகளில் உள்ளடக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. **குரல் ஒலி (Voice) அடிப்படையில் அமைந்தவை.**

ஒலி நாடாக்கள், ஒலிப்பேழை, வானொலி ஒலிபரப்பு, ஒலி விண் அரங்கம் (Audio Conferencing) தொலைபேசி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

2. **காட்சி வழியில் அமைந்தவை**

வரைபடங்கள், நழுவல்கள், பதிவு செய்யப்பட்ட நகரும் காட்சிகள், ஒளி நாடாக்கள், ஒளிப்பேழை, இடைவினை புரிதலுக்கு உதவும் காட்சித்தொகுப்பு (Interactive Video), ஒளி விண் அரங்கம் (Video Conferencing) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

3. **விவர அடங்கல் (Data)**

1. கணினி துணைகொண்டு கற்பித்தல் (Computer Assisted Instructing)
   ஆசிரியரின் பணியை கணினியே மேற்கொள்ளும்.
2. கணினி நிர்வகிக்கும் கற்பித்தல் (Computer Managed Instruction)
   மாணவரது கற்றலை தொடர்ந்து கண்காணித்தல், கற்றல் தேர்ச்சிகளையும் முன்னேற்றத்தையும் அவ்வப்போது பதிவுசெய்தல், பராமரித்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்கிறது.
3. கணினியை ஊடகமாகப் பயன்படுத்தி கற்பித்தலுக்கு வகை செய்தல். (Computer Mediated Instruction)
   ஆசிரியர் தனது கற்பித்தலை மேற்கொள்ள கணினிப் பயன்பாடுகளை பொருத்தமான முறையில் மேற்கொள்ளுதலை விவரிக்கிறது.

4. **அச்சு வடிவில் அமைந்தவை**

பாடநூல்கள், வழிகாட்டும் துணைநூல்கள், பயிற்சி ஏடுகள், பாடத்திட்டத் தொகுப்பு, தனியாள் ஆய்வுகள், செயற்றிட்டங்கள் போன்ற அச்சு வடிவில் மாணவர்களைச் சென்றடைகின்றன.

❖ **வலைப்பின்னல் அடிப்படையிலான கற்றல் (Web Based Learning)**

உலகளாவிய வலைப்பின்னல் (World wide web - www) என்று சுருக்கமாகக் குறிக்கப்படுகிறது. இது வரைபடங்களும் உரைநடைப்பகுதிகளும் கொண்டு இணையதளத்தில் உலாவருகின்றன. இணையதள இணைப்பைக் கொண்ட எந்தவொரு கணினி மூலமும் பார்வையிட முடியும். வலைப்பின்னலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சூழ்நிலையை உருவாக்கி தொலைதூரக் கல்வி மற்றும் கல்வி நிறுவனங்களில் நேரடியாகப் பயில்வோர் என அனைத்து வகை மாணவர்களுக்கும் அளித்திட முடியும்.

❖ **மின்னியல் முறையில் கற்றல் (e - Learning)**

மின்னியல் முறையில் கற்றல் என்பது மின்னியல் தூண்டல் நிறைந்த சூழலில் கற்றல் நடைபெறுவதாகும். வகுப்பறைக் கற்றலுக்கு மேம்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கட்ட கற்றலுக்காக ஏற்பட்டவையே மின்னயல் கற்றல். மின்னயல் முறையில் கற்போர் முப்பரிமாணங்களையும் வெளிப்படுத்தும் சூழலில் திளைத்து மேம்பட்ட கற்றல் அனுபவத்தைப் பெற இயலும்.

❖ **மின்னியல் முறையில் கற்பித்தல் (e - Tutoring)**

இணையதளத் தொடர்பு வசதிகள் மூலம் கற்பித்தல் வசதியை மாணவர் பெறுவதே மின்னியல் முறையில் கற்பித்தலின் சிறப்பாகும். இச் சேவையைப் பெற்றிட மாணவர் கணினியும் இணையதள தொடர்பு வசதியும் பெற்றிருக்க வேண்டும். மின்னியல் முறையில் கற்பித்தல் வசதியை அளிக்கும் நிறுவனத்தில் உரிய கட்டணம் செலுத்தி தன்னைப் பதிவு செய்து கொண்டு தனக்குரிய அடையாள எண்ணையும் பெற்றிருக்க வேண்டும்.

❖ **கணிப்பொறி வழிக்கற்றல் (Computer Assisted Instruction)**

கணிப்பொறி வழிக்கற்றல் என்பது மாணவர்கள் தாமே கணிப்பொறியை இயக்கி கணினித்திரையில் வெளிப்படும் தகவல்களைக் கொண்டு கற்றிடுதலைக் குறிக்கிறது.

❖ **விண் அரங்கம் (Tele Conferencing)**

தொலை தூரத்தில் இருப்பவர்கள் நேரிடையாகத் தொடர்பு கொண்டு தங்களுக்குள் கலந்துரையாடல் நிகழ்த்துவதையே விண் அரங்கம் அல்லது வளி அரங்கம் எனப்படுகிறது. இம்முறை தொலைதூரத்தில் இருப்பவர்கள் தங்களுக்குள் தொடர்பு கொள்வதற்கு மேற்கொள்ளும் பயணத்திற்கான பணச்செலவு, காலவிரயம் போன்ற பிரச்சினைகளிலிருந்து விடுபடும் வகையில் தீர்வாக அமைந்துள்ளது. இவற்றில் மூன்று வகைகள் காணப்படுகின்றன.

1. ஒலி விண் அரங்கம்
2. ஒளி விண் அரங்கம்
3. கணினி விண் அரங்கம்

❖ **இடைவினை புரியும் ஒளிப்பேழை (Interactive Video IV)**

இடைவினை புரியும் ஒளிப்பேழை என்பது தனியாள் கற்பித்தலுக்கான உயர் தொழிநுட்பம் வாய்ந்த சாதனமாகும். தொலைக்காட்சி வழிக்கற்றல் மற்றும் கணினி துணைகொண்டு கற்றல் ஆகிய இரண்டு உயர் தொழிநுட்ப சிறப்பம்சங்களையும் இணைத்து பல்லூடகக் கற்றல் சூழ்நிலையை உருவாக்குதலே இடைவினை புரியும் ஒளிப்பேழை என்றழைக்கப்படுகிறது.

❖ **பலவகை ஊடகவழிக்கற்றல் (Multi - Media Learning)**

1. பல்வகை ஊடக மையம் (Multi - Media Learning)
2. கணினி மூலம் பல்வகை ஊடகங்களின் வாயிலாக தகவல் அளித்தல்.
3. பல்நோக்குடைய ஊடகப் பெட்டகங்கள். (Multi - Media Kits)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **செயற்கைக்கோள் துணையுடன் தொலைக்காட்சிக் கல்வித்திட்டம் (Satellite Instructional Television Programme - SITE)**

உலகளாவிய அளவில் தொலைதூர தகவல் தொடர்பை ஏற்படுத்துவதில் செயற்கைக்கோள்கள் இன்று மிகப்பெரிய பங்காற்றுகின்றன.

செயற்கைக்கோள் உதவி கொண்டு குறைந்த செலவில் கல்வி ஒளிபரப்புகளை மேற்கொள்ள முடியுமாதலால் வளரும் நாடுகளில் அதிக அளவு மக்களுக்கு குறைந்த செலவில் முறைசாரா முறையில் கல்வியை வழங்க இயலுகிறது.

இந்தியாவில் செயற்கைக்கோள் உதவியுடன் ஒளிபரப்பும் தொலைக்காட்சி கல்வித்திட்டம் 1975 இல் தொடங்கப்பட்டது. நாசா நிறுவனத்தால் வழங்கப்பட்ட ATS-F என்ற செயற்கைக்கோள் மூலம் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், பீஹார், மத்திய பிரதேசம், ஒரிஸ்ஸா, இராஜஸ்தான் மாநிலங்களில் கிராமப்புற மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொலைக்காட்சி கல்வி ஒளிபரப்புக்கு வகை செய்யப்பட்டது.

1986 இல் இன்சாட் 1B செயற்கைக்கோள் இந்திய அரசால் ஏவப்பட்டு டில்லியில் அமைக்கப்பட்டிருக்கும் மத்திய கல்வி நுட்பவியல் கழகம் மூலம் தொடக்கப் பள்ளி பாடங்கள், வளர்ந்தோருக்கான முறைசாராக் கல்வி, உடல்நலக் கல்வி, வேளாண்மைக் கல்வி, மனையியல் நிர்வாகம் போன்றவை இடம்பெற்றன. கல்வி ஒளிபரப்புக்கான தனி அலைவரிசைகள் பல நாடுகளில் கல்வித்தர மேம்பாட்டுக்கு உதவி வருகின்றன.

❖ **தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. **வணிகத் தொலைக்காட்சி**

   பல்சுவை நிகழ்ச்சிகள், குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் போன்றவற்றை வழங்குகின்றன.

2. **கல்வித் தொலைக்காட்சி**

   குறிப்பிட்ட வகையில் காண்போரின் நடத்தைகள் அறிவு, மனப்பான்மைகள், விழுமங்கள் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்திடும் முறையில் அமைக்கப்படுபவையே கல்வித்தொலைக் காட்சிகள்

3. **கற்கும் தொலைக்காட்சி**

   தொலைநிலைக் கல்வியை வழங்குவதற்கான சிறந்த அமைப்பு முறையாகத் திகழும் கற்பிக்கும் தொலைக்காட்சியை முறைமைக் கல்வியின் வகுப்பறைப் போதனைக்கும் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **கல்விக்கான செயற்கைக்கோள்**

கல்விக்காவே தனியானதொரு செயற்கைக்கோள் 2004 ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வுமையம் ஏவியது. இதன் முக்கிய நோக்கம் தொலைதூரத்தில் அமைந்திருக்கும். கிராமப்புறங்களில் வசிக்கும் மாணவர்கள், பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்குச் செல்ல முடியாதவர்கள் ஆகியோருக்கு கல்வி புகட்டுவதே ஆகும்.

❖ **மின்னியல் புத்தகம் (e-book)**

மின்னியல் புத்தகம் டிஜிட்டல் ஊடகத்தின் துணைகொண்டு தயாரிக்கப்படுகிறது. இது வழக்கத்தில் உள்ள அச்சிடப்பட்ட புத்தகத்திற்கு இணையானது.

❖ **டிஜிட்டல் நூலகம் (Digital Library)**

டிஜிட்டல் நூலகம் என்பது நூல்கள், ஆவணங்கள் தகவல்கள் திரட்டுக்கள் ஆகியவை டிஜிட்டல் வடிவமைப்பில் சேகரித்து வைக்கப்பட்டு கணினிகள் வாயிலாக தொடர்பு கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டதாகும்.

இவற்றை தொகுத்து நோக்கின் கணினி பற்றியும், இணையதளத்தைப் பற்றியும் அறிந்து கொள்வதிலும், பயன்படுத்துதலிலும் இளைய தலைமுறையினர் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவற்றுடன் கல்வி ஒலிபரப்புக்கள், ஒளிபரப்புக்களையும் கேட்கவும் காணவும் ஊக்கம் அளிப்பதுடன் வழிகாட்டுதல் அளித்தலும் ஆசிரியர்களது கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலுபாயத் தலைமைத்துவமும் பாடசாலையின் வெற்றியும்



சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்
Spe.Trd.Tamil, B.A Hors (2nd upper), PGDE, M.Ed ,SLTES-III
முகாமையாளர்
ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி நிலையம்
புளியங்குளம், வவுனியா

## 1. அறிமுகம்:

"ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பு ஒன்றின் அல்லது அந்த அமைப்பின் பகுதியொன்றுக்கு செயலுபாயத் தூரநோக்கு ஒன்றினைத் உருவாக்கி எல்லோரும் அத் தூரநோக்கினை முயன்று பெறுவதற்கு ஊக்குவித்து இணங்கவைக்கும் தலைவர் ஒருவரின் உள்ளார்ந்த ஆற்றலே செயலுபாயத் தலைமைத்துவம் ஆகும்." (Conger.J et al.,(1999).The Leader's Change Handbook: An Essential Guide to Setting Direction and Taking Action,Jossey- Bass. San Francisco, CA) எனக் குறிப்பிடுகின்றார்.

"பணியாளர் முகாமைத்துவத்திற்குச் செயலுபாயத்தினைப் பயன்படுத்தல். இதுவே அமைப்பின் உறுப்பினர்கள் மீது செல்வாக்குச்செலுத்தவும் அந்த அமைப்பினுள் மாற்றங்களைக் ஏற்படுத்துவதற்குமான உள்ளார்ந்த ஆற்றல் செயலுபாயத் தலைமைத்துவம் ஆகும்." (மெல்சர் மற்றும் கேர்ஸ்னர், 1988) என்கின்றனர். மேலும் "அமைப்பு ஒன்றின் வளர்ச்சிக்கும் வெற்றிக்குமான தூர நோக்கினையும் உபாயத்தினையும் வழங்குதல்". செயலுபாயத் தலைமைத்துவம் ஆகும்." (Simpson.D, (1995)."The Planning Process and the Role of the Planner" Planning Review, pp. 20-23.) எனக் குறிப்பிட்டுள்ளார். "பணியாளரை முகாமைத்துவம் செய்வதற்குச் செயலுபாயத்தினைப் பயன்படுத்தல்." (தொம்ஸன், 1996) செயலுபாயத் தலைமைத்துவம் ஆகும்." எனவே முகாமை செய்கின்ற அதிபர் செயலுபாயத் தலைமைத்துவப் பண்புகளையும் திறன்களையும் அதற்கான ஆற்றல்களையும் கொண்டிருப்பதோடு நாளாந்தம் பாடசாலையில் அதனை நடைமுறைப்படுத்தும் போது பாடசாலை வெற்றிகரமான பயணிப்பில் முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும். இருபத்தோராம் நூற்றாண்டிற்கான அறிவும் ஆற்றலும் கொண்ட பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலையினை இருபத்திரண்டாம் நூற்றாண்டு நோக்கிய தூர நோக்குடன் செயலுபாயங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய காலநகர்வுத் தலைமைத்துவத்தை ஏற்றாக வேண்டும்.

பாடசாலை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாகும். பாடசாலைகள் வெறுமனே பௌதிக வளங்களை பராமரிக்கின்ற நிறுவனமல்ல. அது ஒரு பண்டகசாலையுமல்ல. அது மனித வள அபிவிருத்தி நிறுவனம். பெருமளவிலான மனித உயிரிகளுடன், பிரிவினருடன் தொடர்புபட்டுள்ள நிறுவனம். பொருட்கள் முகாமைத்துவம் செய்யப்படலாம்; ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கள் வழிநடாத்தப்படல் வேண்டும் (Inventories can be managed but people must be led.)

நவீன முகாமைத்துவ சிந்தனையாளரான பீட்டர் ட்ரக்கரின் கருத்துப்படி : ஒரு நிறுவனத்திலுள்ள ஆட்களே அந்நிறுவனத்தின் மிகக்கூடிய பெறுமதிமிக்க சொத்தாகும். (The most valuable asset in any organization is its people)

பாடசாலை என்ற ஒழுங்கமைப்புக்குரிய மிகப் பெறுமதி மிக்க சொத்து ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றார்கள். அவர்களைச் சரியாக வழிநடாத்த செயலுபாயத் தலைமைத்துவப் பண்புகள் அவசியம்.

**2. பாடசாலையில் செயலுபாயத் தலைவர் :**

பாடசாலையின் செயலுபாயத் தலைவர் தனது பாடசாலைக்கான நிறுவனக் கட்டமைப்பினை உருவாக்கி, வளங்களை ஒதுக்கி, செயலுபாயத் தூரநோக்கினைத் வெளிப்படுத்துவர். மிகக் கடினமான பிரச்சினைகளின் செல்வாக்கு மிகுந்த தெளிவற்ற சூழலிலும், வெளிப்புற அமைப்புகள் மற்றும் புறக் காரணிகளின் ஆதிக்கத்தினால் ஏற்படும் சிக்கலான சூழலிலும் செயலுபாயத் தலைவர்பணியாற்றுவார். செயலுபாய விளைதிறனே செயலுபாயத் தலைமைத்துவத்தின் முதன்மை நோக்கமாகும்.

பாடசாலையின் சூழமைவுகளுக்கமைய, பாடசாலையின் தேவைகளை முன்கூட்டியே திட்டமிடக்கூடியதான சூழலை விருத்தி செய்வதே செயலுபாயத் தலைமைத்துவத்தின் இன்னொரு நோக்காகும்.

பாடசாலையின் ஆளணியினர் மற்றும் மனித வளத்தினர் தமது ஆக்கபூர்வமான சிந்தனைகளுக்கு ஊக்கமளிபார். பாடசாலைக்கு உத்தமநிலை செயலாற்றலைப் பெறுவதற்காக, விளைதிறன் மற்றும் தரம்வாய்ந்த ஆளணியினரை ஊக்குவிப்பதற்கு வெகுமதி மற்றும் சன்மானம் வழங்கும் முறைமைகளை கைக்கொள்வார். செயலுபாயத் தலைவருக்கு கீழுள்ளவர்கள், அச்சுறுத்தலின்றி மகிழ்ச்சியாக பணியாற்றுவதுடன் அவர்களுக்கு வலுவளிக்கவும் உற்சாகப்படுத்தவும் பொருத்தமான தலைமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்துவார். அத்துடன் தகவல்களை விரைவாக முறைமைப்படுத்திப், பூரணமற்ற தரவுகளின் அடிப்படையில் மாற்றுவழிகளை மதிப்பிட்டு, தீர்மானங்களை மேற்கொண்டு, சமூக மற்றும் நிறுவன ஆதரவினைப் பெற்றுக்கொள்வார்.

செயலுபாயத் தலைவர்,தனது பாடசாலையின் தூர நோக்கு, பணிக்கூற்று, இலக்குகள், குறிக்கோள்கள் ஆகியவற்றை அடைவதற்கான புத்தாக்க ஆற்றல், புலனாற்றல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் பற்றியே எப்போதும் சிந்திப்பார்கள். இதற்கு பாடசாலையினதும் பாடசாலைச் சமூகத்தினதும் சூழமைவினை பூரணமாகப் புரிந்து கொள்ளும் உள்ளார்ந்த ஆற்றல் தேவைப்படுகின்றது.

நிறைவாகக் குறிப்பிடுவதானால், பாடசாலையின் செயலுபாயத் தலைவர்கள் தூர நோக்கினை உருவாக்குவோராகவும், அதனை வெளிப்படுத்துவோராகவும், தூர நோக்கு மீது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரார்வம் கொண்டோராகவும், கற்றற்பேறுகளை அடையுமுகமாக விடாமுயற்சியுடன் அவற்றின் மீது போதனா தலைமைத்துவத்தை பிரயோகிப்பவராகவும் செயலுபாயத்துடன் பாடசாலையில் செயலாற்றுவார்கள். பாடசாலையின் செயலுபாயத் தலைவர்களுக்கு சில சிறப்பார்ந்த குணாம்சங்களும் காணப்படுதல் வேண்டும். குறிப்பாக : பணி புரிவோர் மற்றும் பயன்பெறுவோர் மீதான கருணை, கவனத்தைத் திசைதிருப்புகின்ற, குழப்புகின்ற, மனோநிலைகள் ஆர்வங்களினின்றும் தம்மைக் கட்டுப்படுத்தக்கூடிய உள்ளார்ந்த தன்னடக்கம், நடைமுறைசார் சமூகத் திறன்கள், சுய விழிப்புணர்வு, சேவை மீதும் ஆளணியினர் மற்றும் பாடசாலை சமூகத்தின் மீதும் விசுவாசம், முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் ஆகியவற்றின் கால மாற்றத்திற்கேற்ப அறிவினைப் புதுப்பித்துக்கொள்ளல் அதாவது வெற்றிகரமான பாடசாலை அதிபர் கற்பவராக இருத்தல், மக்களிடமிருந்து மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்காக தமது அதிகாரத்தினை எப்போது, எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்பதனை ஆற்றல் மிகு அதிபர்கள் மதிநுட்பத்துடன் அதிகாரத்தைப் பயன்படுத்தல், பாடசாலை தொடர்பிலும் அதிபர் சேவை தொடர்பிலும் விசாலமான பார்வையினையும் கண்ணோட்டத்தையும் கொண்டிருத்தல், செயற் தூண்டல் மற்றும் சுயஊக்குவிப்பு கொண்டிருத்தல் ஆகியன செயலுபாயம் மிகு ஓர் அதிபர் சக்தியுடனும் உறுதிப்பாட்டுடனும் இலக்குகளை அடைவதற்கான முயற்சியும் பேண்தகு அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் பாடசாலை அதிபர்களிடத்தில் இருக்க வேண்டிய சிறப்பார்ந்த குணாம்சங்களாகும்.

### 3. செயலுபாயச் சிந்தனையும் பாடசாலையின் வெற்றியும் :

"செயலுபாயச் சிந்தனை என்பது, இன்னமும் பயன்படுத்தப்படாத (பயன்படு நிலையிலுள்ள) வாய்ப்புக்கள் நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியதைக் கோரி நிற்கின்றதும் அத்துடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவர் மீதும் அத்தகைய வாய்ப்புக்கள் சார்பாக சில தெரிவுகளை உண்டாக்கவல்ல பரந்த விளைவினைக் கவனத்திலெடுப்பதுமான வழிமுறை ஒன்றாகும். அதாவது நீண்டகால நோக்கில் மிகையான பலாபலன்களை அளிக்கவல்ல தெரிவுகளை மேற்கொள்ளும் இலக்குடன், தீர்மானம் இயற்றுவதற்கு உலகளாவிய அணுகுமுறை ஒன்று அதிகளவு கடைப்பிடிக்கப்படுவதைச் செயலுபாயச் சிந்தனை வேண்டி நிற்கிறது" (டற்றும். எம், 2011)

"நிறுவனத்தின் (பாடசாலையின்) செயலுபாயத்தில் விளைவுகளை உண்டாக்கவல்ல மக்கள் மத்தியில் தூண்டுதலும் புத்தாக்கமும் உள்ள உரையாடலை ஏற்படுத்துவதன் மூலம் விழுமியங்களை உருவாக்கவல்ல தனிச்சிறப்பான வாய்ப்புக்களைக் கண்டறிந்து விருத்திசெய்வதில் செயலுபாயச் சிந்தனை கவனம் செலுத்துகிறது" (டற்றும். எம், 2011)

நடைமுறையில் ஐந்து பிரதான தனியியல்புகள் செயலுபாயச் சிந்தனைக்கு உண்டென லீட்கா என்பவர் குறிப்பிடுகின்றார்.

1. முறைமைகள் சார்ந்த உளப்படமாக்கல் மாதிரி.
2. உள்நோக்கிற் கவனம் செலுத்தல்.
3. காலத்திற் சிந்தித்தல் என்பது கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலத்தினை மனத்திற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக்க இயலுவதுடன் சிறந்த தீர்மானம் எடுத்தலுடன் விரைவாக நடைமுறைப்படுத்தல் எனப்பொருள்படும்.

4. ஆக்க சிந்தனையும் விமரிசின சிந்தனையும்
5. புத்திசாதுரியமான சூழமைவுவாதம்

இவற்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வினைத்திறனுடனும் ஆக்கத்திறனுடனும் தொழிற்படும் பாடசாலைகள் மாணவரின் தரத்தினை விருத்தி செய்வதனூடாக நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திலும் நேரான விளைவினை ஏற்படுத்தவியலும்.

ஒவ்வொரு பாடசாலையும் கல்வியின் தரத்தினை விருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு பாடசாலைக்கான தர மேம்பாட்டுத் திட்டங்களைத் தானாக உருவாக்குதல் வேண்டும். அதுவே வெற்றிக்கான முதற்படியாகும். அது செயலுபாயத் திட்டத்தின் ஊடாக பயனாளிகளின் தேவைகளை ஈடுசெய்யக்கூடியதாக பாடசாலைகளை ஒழுங்குபடுத்த வேண்டியது அவசியமாகிறது.

கல்வித்துறையில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், நீண்ட காலமாக உதாசீனம் செய்யப்பட்டவையும் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியவையுமான பல்வேறு விடயங்களை வெளிக்கொணர்ந்துள்ளன. பாடசாலைத் திட்டமிடலில் அதிபர்கள் செயலுபாயச் சிந்தனையின் மூலம் பெறவேண்டிய பாடசாலை இலக்குகளை அடையாளப் படுத்த இயலும். குறிப்பாக:

- அவசியமான அடிப்படைக் கல்வியை நியாயமானளவு வழங்குதல்.
- மாணவர்களது பெறுபேற்று மட்டத்தினை உயர்ந்த மட்டத்தில் பேணுதல்.
- மாணவர்கள் உலகப் பணிகளுக்குப் பழக்கப்படத்தக்கதாக அவர்களிடத்தில் அவசியமான தகுதிகளை விருத்திசெய்தல்.
- எதிர்காலப் பிரஜைகளாக வளர்வதற்கு அவசியமான தகுதிகளை விருத்தி ஆக்கல்.
- பாடசாலையினுள்ளே ஜனநாயகச் சூழல் ஒன்றினை உருவாக்குதல்.
- அதிபர் மற்றும் ஆசிரியர்களின் வாண்மைத்துவ மற்றும் தலைமைத்துவத் திறன்களை விருத்திசெய்தல்.
- பாடசாலை முகாமைத்துவத்தில் அதிகளவு பங்கேற்பினைப் பெறுவதற்கு பாடசாலைச் சமூகத்தைப் பலப்படுத்துதல்.

இதன் சாரத்தைச் சொல்வதாயின், கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்று நாளாந்த இற்றைப்படுத்தலோடு முறையாகப் பேணப்படுதல் அவசியமாகின்றது. தகவல்கள் அனைத்தும் பாடசாலை மட்டத்தில் முறையாகச் சேமிக்கப்பட்டு நாளாந்த முகாமைத்துவத்திற்குப் பயன்படுத்தப்படல் வேண்டும்.பாடசாலையினால் பின்வரும் பகுதிகளில் தரவு சேகரிக்கப்பட வேண்டும்.

- பாடசாலையின் நல்லாட்சி தொடர்பான தகவல்
- பாடசாலையின் முகாமைத்துவம் தொடர்பான தகவல்
- பாடசாலையின் சூழல் தொடர்பான தகவல்
- கற்றல் வெளியிடுகைகள் தொடர்பான தகவல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, பாடசாலையில் கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமையினைக் கட்டியெழுப்புதல் வெற்றிக்கான திசைகோலாகும். நியமமான பதிவு உபகரணங்களைப் பயன்படுத்தி அத்துடன் நியமநடைமுறைகளையும் செயல்முறைகளையும் பின்பற்றி, ஒழுங்கு முறையான பாடசாலைப் பதிவு பேணுதல் உருவாக்கப்படுதல்வேண்டும். பாடசாலைப் பதிவு பேணுதலை நியமப்படுத்துதலானது, பாடசாலை அறிக்கையின் தரத்திற்கும் ஒழுங்குக் கிரமத்திற்கும் நேரடியாகப் பங்களிப்பதுடன் செயலாற்றல் மீளாய்வு செய்யப்படுதலையும் பிரச்சினைகள்,இடர்கள்,குறைபாடுகள் மற்றும் தடைகளை இனங்காணவும் இலகுவாகின்றது.

## 4. செயலுபாயத் திட்டமிடலும் பாடசாலையின் வெற்றியும் :

செயலுபாயத் திட்டமிடல் என்பது, நிறுவனம் ஒன்றினது செயலுபாயம் அல்லது செல்திசையினை வரைவிலக்கணப்படுத்தும் வழிமுறையாவதுடன் அச்செயலுபாயத்தைப் பின்பற்றுவதற்கு நிறுவனத்தின் மூலதனம், மக்கள் ஆகியன உள்ளளடங்லாக அதனது வளங்கள் அனைத்தையும் பகிர்ந்தளிப்பதற்குத் தீர்மானமியற்றுதலாகும். (டேவிட், 1995)

பாடசாலையின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, பாடசாலை என்பது யாது, அது என்ன செய்கிறது, ஏன் செய்கிறது, என அதனை உருவமைக்கவும் வழிநடத்தவுமான அடிப்படை தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் உருவாக்குவதற்கான ஒழுங்குமுறையான முயற்சியே பாடசாலை செயலுபாயத் திட்டமிடலாகும்.

நிறுவனமானது (பாடசாலையானது) அடுத்த வருடத்தில் அல்லது அதற்குமேல் எங்கு செல்லவுள்ளது, எப்படி அங்கு செல்லவுள்ளது, சென்றுள்ளதா? என்பதை எப்படி அறிவது என்பனவற்றை செயலுபாயத்திட்டமிடல் உறுதிசெய்கிறது. வியாபாரத் திட்டமிடலின் கவனக் குவிப்பு வழக்கமாக ஒரு உற்பத்தியின் மீது அல்லது சேவையின் மீது அல்லது நிகழ்ச்சித் திட்டத்தின் மீது இருக்கையில் செயலுபாயத் திட்டமிடலின் கவனக் குவிப்பு வழக்கமாக முழு நிறுவனத்தின் மீதும் இருக்கும். (மின்ட்ஸ்பெர்க்,1994)

செயலுபாயத் திட்டமிடலின் வகைகள், செயலுபாயத் திட்டமிடலில் பலவகையான தொடர்பு நிலைகள், மாதிரிகள் மற்றும் அணுகுமுறைகள் கல்வித்துறையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. செயலுபாயத் திட்டமொன்று விருத்தி செய்யப்பட்டிருக்கும் முறையானது,பாடசாலைத் தலைமைத்துவத்தின் தன்மை, பாடசாலை கலாசாரம், பாடசாலையின் சிக்கலான சூழலமைவு, பாடசாலையின் பரிமாணம், திட்டமிடுவோரின் நிபுணத்துவம் போன்றவற்றிற் தங்கியுள்ளது.

குறிப்பாக:

அ. இலக்குகள் சார்ந்த செயலுபாயத் திட்டமிடல்
ஆ. பிரச்சினைகள் சார் செயலுபாயத் திட்டமிடல்
இ. உள்ளமைப்பு சார்ந்த செயலுபாயத்திட்டமிடல்

ஆகிய மூன்று முக்கிய வகைகளில் பாடசாலைத் தலைமைத்துவம் கவனங் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில திட்டமிடல்கள் எதிர்காலத்தினுள் ஒரு வருட கால எல்லைக்கும், பல திட்டமிடல்கள் மூன்று வருட கால எல்லைக்கும் இன்னும் சில ஐந்து முதல் பத்து வருட கால எல்லைக்கும் குறியிலக்குக் கொண்டன.

திட்டமிடலானது பாடசாலை தலைமைத்துவத்திற்கு குறித்த சில நோக்கங்களையும் செல்திசைகளையும் வழங்குகின்றது. பாடசாலைத் திட்டமிடலானது எதிர்காலம் சார்ந்ததாக உள்ளதால், நிகழ்காலத்துக்கும் அப்பால் தரிசனம் பெற வேண்டுமென்பதை பாடசாலை தலைமைக்குத் தூண்டுகிறது. இது பாடசாலையின் வெற்றிக்கு அடித்தளமிடுகின்றது. இதனால் தனக்கும் பாடசாலைக்கும் பொருத்தமான திட்டமிடல் ஒன்றை ஊக்குவிக்கும் வழிமுறைக்கு உதவுகிறது. பாடசாலைத் திட்டமானது பங்குதாரர்கள் அனைவரையும் ஈடுபடுத்தியிருப்பின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் அவர்கள் ஒவ்வொருவரும் ஈடுபடுவதற்காக முன்வருவர். இது வெற்றிக்கான பாதையை திறந்து விடுகின்றது. மேலும் தீர்மானம் மேற்கொள்வதற்கான வரைபுச்சட்டகம் ஒன்றினை திட்டமிடல் வழங்குகிறது. பாடசாலையின் குறிக்கோள்களையும், அவற்றை அடைவதற்கான வழிமுறைகளையும் அறிந்திருப்பது, தீர்மானம் மேற்கொள்ளலின் தெளிவற்ற தன்மையினை இல்லாதொழிக்கும். முறையான திட்டமிடல் பாடசாலையின் மனித வளங்கள் மற்றும் பௌதிக வளங்களின் முறையானதும் விளைதிறனுள்ளதுமான பயன்பாட்டினை தோற்றிவித்து பேண்தகு அபிவிருத்திக்கு இட்டுச்செல்லும். திட்டமிடலானது, பாடசாலையின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்கான செயலாற்றல் நியமங்களை வழங்குவதுடன் நடைமுறைப்படுத்தலின் போது கட்டுப்படுத்தல் வழிமுறைக்கும் உதவுகிறது.

செயலுபாயத் திட்டமிடல் பாடசாலைக்கு எதிர்காலம் நோக்கிய பலநன்மைகளைத் தோற்றுவிக்கின்றது.

- ❖ பாடசாலையினது நோக்கங்களைத் தெளிவாக வரையறை செய்வதற்கும் அத்துடன் பாடசாலையின் செயற்பாட்டுடன் முரண்படாததும் அதன் செயற்பாட்டு ஆற்றலுக்குட்பட்டதான வரையறுக்கப்பட்ட காலச் சட்டகத்தினுள் அடையக்கூடிய உண்மையான இலக்குகளையும் குறிக்கோள்களையும் உருவாக்குவதற்கும் பாடசாலைச் சமூகத்திற்கு இலக்குகளையும் குறிக்கோள்களையும் தெரியப்படுத்துவதற்கு உதவுகின்றது.
- ❖ திட்டத்திற்கு உரிமைகோரும் உணர்வினை உருவாக்குவதற்கும் மாணவரது வெளியீடுகளை மேம்படுத்துவதற்கும் பாடசாலையினது ஒட்டுமொத்த மேம்பாட்டிற்குமான வளத்தில் கவனம் செலுத்தி, பாடசாலையினது வளங்கள் அதிகளவு விளைதிறனுடன் பயன்படுத்தப்பட்டிருப்பதனை உறுதிசெய்வதற்கு உதவுகின்றது.
- ❖ முன்னேற்றத்தினை அளவிடக்கூடியதான அடித்தளம் ஒன்றினை அளிப்பதற்கும் தேவையானபோது மாற்றத்தினை அறிவிப்பதற்குரிய நுட்பத்தினை உருவாக்கிக்கொள்வதற்கும் பாடசாலை செல்லும் திசை பற்றிய கருத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொருவரினது அபிப்பிராயங்களைக் கேட்பதற்கு செயலுபாயத் திட்டமிடல் உதவுகின்றது.

- ❖ பாடசாலைக்குத் தெளிவான கவனக்குவிப்பினை அளித்து அதன்மூலம் அதிக வினைத்திறனும் விளைதிறனும் பெருகிக்கொள்கிறது. பாடசாலைச் சமூகத்திற்கு தூர நோக்கினையிட்டு அதிகளவு திருப்தியையும் விளக்கத்தையும் உண்டாக்குகிறது. அதிகரித்த வினைத்திறன் மற்றும் விளைதிறனூடாக பாடசாலையின் விளைதிறன் அதிகரிக்கிறது. பாடசாலையிலுள்ள பிரதான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுகிறது.

எனவே செயலுபாயத் திட்டமிடல் பாடசாலையின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்கு உதவும் கருவியினை வழங்குவதுடன் உரித்துள்ள சகலருக்கும் அத்துடன் நிதிவழங்கு முகவர்களுக்குமான வகைகூறலுக்கும் உதவுகின்றது. (லியோன்ஸ் 2001) ஆகையால் பயன்படு திட்டமிடல் பாடசாலையின் வெற்றிக்கு அடிப்படையாகும்.

பாடசாலையின் செயலுபாயத் தலைமைத்துவத்தின் வெற்றிக்கு சில கொள்கைச் செலுத்திகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதாவது கொள்கைச் செலுத்தி என்பது பிரதானமான கொள்கை மாற்றம் அல்லது அபிவிருத்தியினைச் செலுத்தும் சமூகத்தின் மீது தாக்கம் விளைவிக்கின்ற தனித்த அல்லது ஒருகூட்டமான சமகாலப் பிரச்சினைகள் அல்லது போக்குகள் ஆகும். குறிப்பாகளு கட்டாயக் கல்வி, அடிப்படைக் கல்வி, அறிவுச் சமூகத்தின் விருத்தி, உலகமயமாக்கல், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சூழற் பிரச்சினைகள், புவி வெப்பமடைதல், உலகளாவிய நிதி நெருக்கடி, பால்நிலைசார் பிரச்சினைகள் போன்றன பாடசாலைத் திட்டமிடலிலும் பாடசாலையின் வெற்றியிலும் செல்வாக்கு மிக்கவை என்பதை மறத்தலாகாது.

பாடசாலைக் கொள்கையும் பாடசாலையின் வெற்றியைத் தீமானிப்பதாகும். பாடசாலைக் கொள்கை என்பது பாடசாலையின் தொழிற்பாட்டுக்கு நேரடியாகத் தொடர்புள்ளஅல்லது உள்ளூர் சூழ்நிலைகளுக்கேற்ப பொருள்விளக்கமளிக்கப்பட்ட ஒழுங்குமுறையான எழுத்துருவாகும்.இது பொதுவாக பாடசாலையின் பங்குதாரர்களால் விருத்திசெய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாகும். பாடசாலைக் கொள்கையின் வகைகள் பாடசாலையினுள்ளே அதன் தேவைக்கேற்றவாறு அத்துடன் குறிப்பிட்டதொரு செயலுபாய இலக்கினை நடைமுறைப்படுத்துவதற்கும் பல்வேறு கொள்கைகள் விருத்திசெய்யப்படலாம். குறிப்பாகளுபாடசாலையின்நல்லாட்சி முறை,சாதகமான பாடசாலைச் சூழல். பாடசாலை முகாமைத்துவம் மற்றும் கற்பித்தலும் கற்றலும் ஆகிய கொள்கையாக்கங்களிலும் செயலுபாயத் தலைமைத்துவம் கவனக் குவிப்பைச் செலுத்துவதன் மூலம் பாடசாலையினை வெற்றிக்கு இட்டுச் செல்லலாம்.

எனவே, பாடசாலையின் முழுமையான அபிவிருத்திக்கும் மேம்பாட்டிற்கும், பாடசாலையில் செயலுபாயத் தலைமைத்துவம் இன்றியமையாததாகும். செயலுபாயத் தலைவர் (அதிபர்), அவரது மாணவர்கள் (வாடிக்கையாளர்கள்) ஒவ்வொருவரினதும் கற்றலை இடைவிடாது மேம்படுத்தவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டியுள்ளது. உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய பெரிய உளப்படமாக்கல் எதிர்கால மனித வளத்தின் முன் இருக்கின்றது. அவர்கள் இலக்குகளை அடைவதனை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அதற்காக செயலுபாயத் தலைமைத்துவம், பாடசாலையின் பெறுமானங்கள், நம்பிக்கைகள் கொண்ட கலாசாரம் ஒன்றினை உருவாக்கி அதனூடே திட்டமிடல்களை தயாரித்து நாம் ஒரு பாடசாலை என்பதனால் எதனைப் புலப்படுத்தப் போகிறோம்? நாம் ஒரு பாடசாலை என்பதனால் எதனை நம்புகிறோம்? எதன் அடிப்படையில் நம்பிக்கையைக் கட்டமைக்க உள்ளோம்? ஆகிய எழுவினாக்களுக்கு விடைகாண பாடசாலைக்கான செயலுபாயத்தினை இருபத்தோராம் நூற்றாண்டின் அதிபர்வகிபாகத்தினூடே எவ்வாறு உருவாக்கி வெற்றி காணுதல் என்பதற்கான சிந்தனைகள் விரிவடைகின்ற போது செயலுபாயத் தலைவரின் "கனவுகள்" மெய்மையாகி பாடசாலைக்கென நாம் விரும்புகின்ற எதிர்காலம் தோற்றம் பெறும்.

**உசாத்துணைகள்:**

*Conger.J et al.,(1999).The Leader's Change Handbook: An Essential Guide to Setting Direction and Taking Action,Jossey- Bass. San Francisco, CA*

*David.F, (1995).Concepts of Strategic Management, 5th Edition, Prentice-Hall: New York.*

*Drucker,P. (1998). The Drucker Foundation: Self Assessment Tool Process Guide. Retrieved on November 09 2011 from http://www.wiley.com/WileyCDA/WileyTitle/productCd-078794436X.htm*

*Parson,W. (1995).Introduction to the Theory and Practice of Policy Analysis. London: Edward Elgar*

*Simpson.D, (1995). "The Planning Process and the Role of the Planner" Planning Review, pp. 20-23.*

*Thompson. A, Jr., (1996).Strategic Management: Concepts and Cases, 9th Edition III. Irwin: New York.*

*Ministry of Education (2009).Innovative teaching: A teacher's manual on teaching and learning methodologies. Sri Lanka: Gonzales, R. DLC.,&Jayasena,*

*World Health Organization.(1997). Policy. Retrieved on November 25 fromhttp://www.who.int/lymphatic_filariasis/policy/en/*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளும் எழுவினாக்களும்



**திருமதி.பத்மாவதி ஜெயச்சந்திரன்**
விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

இன்று உலக நாடுகளின் பொருளாதார முறைமைகள் அனைத்தும் அறிவுசார் பொருளாதார முறைமையாக மாற்றம் பெற்றுள்ளது. உலகமயமாதலின் விளைவாக உலகப்பந்தின் அறிவுப் பெருக்கம் குறுங்காலத்தில் உலக வியாபகமாக மாறி விடுகின்றது. இவ் அறிவு சமுதாயம் முழுவதும் பரப்பப்படல் வேண்டும். பொருள்சார் அறிவு உற்பத்தியானது உள்வாங்கப்படவும் உருவாக்கப்படவும் பல்கலைக்கழகங்கள் தங்களது அறிவார்ந்த பணியினை ஆற்ற வேண்டியுள்ளது. மிலேனியம் இலக்குகளை அடைவதற்கான அடிப்படைகள் பல்கலைக்கழகங்களில் தான் அதற்கான தொடக்கப்புள்ளி இடப்பட வேண்டியுள்ளது.

**அறிவுத்துறையின் பரப்புக்களையும் அவற்றின் உட்பொருளையும் அதற்கான விளக்கங்களையும் நடைமுறை அவதானிப்புக்களையும் ஆய்வுகளையும் அபிவிருத்திக்கான ஆய்வுப் பொருளையும் கண்டறிகின்ற, அதேவேளையில் ஒரு நாட்டின் அதிஉயர் அறிவு வழங்கும் நிறுவனமாகவும் பல்கலைக்கழகங்கள் திகழ வேண்டும்.** பல்கலைக்கழகங்கள் சமூகத்தின் உயிர்நாடி என்றும், புலமையாளர்களின் கூட்டுச்சமூகம் என்றும், ஆய்வுக்கான இருப்பிடம் என்றும் சிறப்பிக்கப்படுகின்றது. சுருங்கக்கூறின் சமூக மாற்றத்திற்கான முதல்நிலை அறிவாலயம் பல்கலைக்கழகங்களாகும்.

மிக உயர்ந்த, தரமான கல்வியையும், எதிர்கால மனிதவளப் பயிற்சியையும் வழங்குகின்ற இடம் எனவும் பல்கலைக்கழகங்கள் சிறப்பிக்கப்படுகின்றன. அத்துடன் திறமையுடன் கூடிய ஆசிரியர்கள், மாணவர்கள் நுழையக்கூடிய இடம் எனவும் **"சமூகத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான ஆராய்ச்சிக்கும், அறிவுக் கையளிப்புக்கும், புதிய தேடலுக்கும், விஞ்ஞான, தொழிநுட்ப முன்னேற்றத்துக்கும் உயரிய சமூகம் கூடுகின்ற இடமாகவும் பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன."**

அறிவுச் சுதந்திரம், மனிதநேயங்களைப் பின்பற்றல், ஜனநாயகப் பேணுகை, சமூக நீதி சார்ந்த சகிப்புத்தன்மை, கல்விக்கான நல்லாட்சி மற்றும் சமுதாய நல்லாட்சி போன்ற, குறித்த சமூகம் விரும்புகின்ற செயற்பாடுகளை மேற்கொள்கின்ற நிறுவனமாக பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன. .

பல்கலைக்கழகங்கள் சுதந்திரமான தேடலுக்கு வழிகாட்டுபவையாகவும், தர்க்கரீதியான சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டும். கற்றுக் கொள்பவற்றின் மூலம் சமூகத்தில் நல்மிகு மாற்றங்களை உருவாக்குதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண்மையாளர்களை உருவாக்குதல், பிராந்தியத்தின் தனித்துவம் மற்றும் தேசியத்தின் பொதுமை சார்ந்த கொள்கைகளை உருவாக்குதல், உலகம் எதிர்பார்க்கின்ற புதிய சமூகத்தை உருவாக்குதல், புதியவற்றை நடைமுறைப்படுத்தல், ஒரு சமூகத்தின், ஒரு நாட்டின் விழுமியங்களையும் பண்பாடுகளையும் பேணுதல் மற்றும் பாதுகாத்தல் முதலிய நோக்கங்களை நிறைவேற்றும் தன்மை கொண்டவையாக பல்கலைக்கழகங்கள் விளங்க வேண்டும்.

பல்கலைக்கழகங்களின் நோக்கம் பற்றிக் கூறுமிடத்து **டெயில்டன்** என்பவரது கருத்துப்படி; **"சமூகமானது பல்கலைக்கழக உயர் கல்வியினூடாக சமூக, பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்க வேண்டுமெனவும், சமூக பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்பதற்கான ஒரு பாரிய ஊடகமாகவும் பல்கலைக்கழகத்தைக் கருத முடியும்"** எனக்குறிப்பிட்டுள்ளார். **பெற்றிக்கோமேயர்** குறிப்பிடும்போது **"பல்கலைக்கழகம் சமூகத்துடன் எண்ணிடலங்காத தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும். சமூகத்துடனான நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும். வர்த்தகம், விவசாயம், கைத்தொழில், பத்திரிகை சார்பான தொடர்பு இருக்க வேண்டும். இதனூடாக சமூகம் பற்றிய முன்நகர்வுப் பார்வையை பல்கலைக்கழகங்கள் வழங்க முடியும்."** என்கின்றார்.

மேற்குறித்த நோக்கங்களையும் இலக்குகளையும் கொண்டுள்ள பல்கலைக்கழகங்களில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் எத்தகைய செயற்பாடுகளைக் கொண்டுள்ளன என்பது இன்றுள்ள முதன்மையான எழுவினாவாகும். சமூகப் பொருத்தப்பாடு, உலகப் பொருந்துநிலை மற்றும் இயங்குநிலை, இவற்றின் உள்ளார்ந்த இயல்புகள், உட்கட்டமைப்பு, சர்வதேச தரவரிசையில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பெற்றுள்ள தரங்கள் யாவும் இன்றைய யதார்த்தத்தைப் புலப்படுத்தும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகள், கலைத்திட்ட வடிவமைப்பு, கற்பித்தல் முறையியல், மதிப்பீட்டுக் கட்டமைப்பு, ஆய்வு நிலை, விஞ்ஞானபூர்வமான தன்மை, சமூகப் பொருத்தப்பாடு பற்றிய விமர்சனங்கள் கவனத்திற்குரியவை; பல்கலைக்கழகங்கள் வழங்கும் பட்டங்களைத் தொகுத்துப் பார்க்கும் போது இப்பட்டங்களின் ஒரு வாய்ப்பாட்டுத் தன்மையைக் காணலாம். இவை மாறிவரும் உலகமயமாதலின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய இயலுமையைக் கொண்டிருக்காமையாலும், இப்பட்டங்களில் உடனடி வேலைவாய்ப்பைப் பெறும் பட்டங்களாக எவை உள்ளன என்பதும், பல்கலைக்கழகத்தின் கல்வி வழங்கலில் ஆய்வுக் கொள்ளளவு ஆகியன உலகத் தரத்திற்கும் பல்கலைக்கழகங்களின் தர உறுதிப்பாட்டுக்கும் சவால் மிக்கதாகவே உள்ளன. இவ் எழுவினா பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவன நகர்வுக்கு மனிதவளத்தை இட்டுச் செல்ல சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

இதற்கான முக்கிய காரணியாக பல்கலைக்கழகத்தின் கலைத்திட்டம் அமைந்து விடுகின்றது. பல்கலைக்கழகங்களில் வாழ்க்கைக்கு பயன்படும் கலைத்திட்டங்கள் பின்பற்றப்படுவது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அரசின் கொள்கைக்கும், பல்கலைக்கழகங்களின் அறிவுப் பகிர்வுக் குழுமத்தின் இயல்புக்கும் ஏற்றதாக, பாரம்பரியமான முறைகளையே பின்பற்றும் மனப்பாங்கும் இருப்பதனால் விரிவாகவும் ஆழமாகவும் அறிவை வழங்க புலமையாளர்களால் முடியாதுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய கற்றல் மற்றும் சுயதேடல் மிக்க மனிதவளத்தை உருவாக்க முடியாதுள்ளது. இதனால் தேசிய கல்வி இலக்கை அடைய முடியாத ஒரு நாடாக இலங்கையை உலகத்தில் கணிக்கும் நிலை தோன்றியுள்ளது. இந்நிலைமையைப் போக்குவதற்கு பல்கலைக்கழகங்கள் தொடர்பாடல், சூழல், விழுமிய மேம்பாடு, சமயம், ஓய்வு நேரத்தைச் சிறப்பாக மேற்கொள்ளல், சர்வதேச செயற்பாடுகளுக்கு முகங்கொடுத்தல், வேலை உலகுக்குத் தயாராதல், வாழ்நாட் கல்வி, தேர்ச்சி மிகு மனிதவளச் சமூகம் என்பவற்றை உள்ளடக்கிய கற்றல் சமூகத்தை உருவாக்க வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளதால் பல்கலைக்கழகத்தின் கலைத்திட்டத்தில் மாற்றுநிலையை உருவாக்க வேண்டியுள்ளது.

அறிந்து கொள்வதற்காகக் கற்றல், செயல்களை ஆற்றுவதற்காகக் கற்றல், சேர்ந்து வாழக் கற்றல், கற்றலுக்காகக் கற்றல் ஆகியன உலகக்கல்வியின் நான்கு தூண்கள் என **"யுனெஸ்கோ"** குறிப்பிட்டுள்ளது.இவற்றை அடைவதற்கான செயன்முறைகள் பல்கலைக்கழகங்களில் காணப்படுதல் வேண்டும். இத்தகைய செயன்முறைகளை பல்கலைக்கழகங்கள் மேற்கொள்கின்ற போது உயர் கல்வியினூடே பேணதகு அபிவிருத்தி நோக்கி நகர முடியும். கால்றோஜர்ஸ் கூற்று இங்கு கவனத்திற்குரியது, **"எவ்வாறு கற்க வேண்டும் என்று கற்றுக் கொண்டவனே கற்ற மனிதன். இதற்கு கற்கக் கற்றல் தேர்ச்சி வழிகாட்டுகிறது"** என்கின்றார். உயர் புலமையாளர்கள் சுய ஆய்வாளர்களாக தம்மை மாற்றிக் கொள்ளுதலுக்கு கற்கக் கற்றல் தேர்ச்சி உதவுகின்றது. **"தாமாகவே கற்கும் மனிதர்களை உருவாக்குதல் என்ற கல்வி இலக்கை"** நோக்காகக் கொண்டு பல்கலைக்கழகங்கள் செயற்பட வேண்டும்.

தேசிய ரீதியில் பல்கலைக்கழக கலைத்திட்டம், இணைக்கலைத்திட்டம், மறைக்கலைத்திட்டம் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்தும் வெளிக்காரணிகள் பற்றி விளங்கிக் கொள்ள வேண்டும். இவை தொடர்பான மாற்றங்கள் எவ்வாறு உலகமயமாதற் கொள்கை மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளன என்பதையும் பல்கலைக்கழக கலைத்திட்ட வடிவமைப்போர் கவனத்திற் கொள்ள வேண்டும். இவை சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள், பேராளர் மாநாடுகள் போன்றவற்றில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழகச் சமூகம் பங்குபற்றுவதன் மூலம் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டுக்குத் தேவையான மனிதவளத்தை பல்கலைக்கழகங்கள் உருவாக்க முடியும்.

இலங்கையில் பல்கலைக்கழக உயர் கல்விக்கான சேர்வு வீதம் குறைவாக இருப்பதுடன் அதிலும் பெரும்பகுதி முறைசார் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு வெளியிலேயே உள்ளதென்ற எழுவினா சமூகத்தில் உள்ளது. அத்துடன் இக்கற்கை நெறிகள் தனியார்துறையின் கல்வி நிறுவனங்களிலேயே வழங்கப்படுகின்றன. இத்தகைய செயன்முறைகளால் மரபுவழிப் பல்கலைக்கழகங்களில் பின்னடைவு நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

ஆய்வுப்புலம் வலுவற்றதாக அல்லது சமூகப் பெறுமானமற்றதாக காணப்படுகின்றது. ஜப்பானில் அமைந்துள்ள உயர்கற்கைநெறிக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர். சக்ரி **"வளர்முக நாடுகளின் பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப்பணிகளுக்கு சர்வதேச**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதவி தேவை"** என்று கூறியுள்ளமை இங்கு கவனத்திற்குரியது. அத்துடன் பல்கலைக்கழகமொன்றின் வெற்றி ஆராய்ச்சிகளின் பொருத்தப்பாட்டிலும் அவற்றின் பயன்பாட்டிலும் தங்கியுள்ளது. அரசாங்கக் கொள்கை, மக்களின் தேவைகள், குறித்த சமூகத்தின் தேவைகள் என்பவற்றுக்குப் பொருத்தமாக ஆராய்ச்சிகள் அமைதல் வேண்டும். இல்லாவிடின் பல்கலைக்கழகக் கல்வி நீடித்து நிலைத்து நிற்க முடியாது என்று கூறியுள்ளார். மேலும் ஆய்வாளர் தொகை, விஞ்ஞானப் பிரசுரங்கள், ஆய்வேடுகள், இணையத்தள வசதிகள் என்பவற்றில் வளர்முக நாடுகள் பின்தங்கியிருப்பதுடன் நாட்டில் கைத்தொழில்புரட்சிபசுமைப் புரட்சியையும் உருவாக்கவும் தகவல் தொழில் நுட்பப் புரட்சி, உயர் தொழில்நுட்பப் புரட்சியையும் ஏற்படுத்தும். இதனால் நன்மைகளை உருவாக்கும் ஆராய்ச்சித்திறன்களை வளர்முகநாடான இலங்கையும் தனது பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளாத நிலை காணப்படுகின்றது.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பெருமளவில் மருத்துவம், பொறியியல், இயற்கை விஞ்ஞானம், கலை மற்றும் சமூக விஞ்ஞானம் முதலாந் துறைகளில் பொறிமுறையான கற்றலும் நெட்டுருச்செய்தலும்மே லோங்கத் தொடங்கியுள்ளன. விரிவுரையாளர்களால் வழங்கப்படும் குறிப்புக்களை நெட்டுருச்செய்து ஒப்புவிப்பதனால் உயர்தரச் சித்தி பெறலாம் என்ற நிலையே மேலெழுந்துள்ளது. உயர்கல்வியின் சிறப்பார்ந்த பரிமாணங்களாகிய உணர்நிலைப் படைப்பு, மலர்ச்சித் திறன்கள், கண்டறியும் ஆற்றல்கள், புத்தாக்கங்கள், அகத்தெறிதற் கருத்து வினைப்பாடுகள் முதலியவை புறக்கணிக்கப்பட்ட நிலை இலங்கைப் பல்கலைக்கழகங்களில் நிலவுகின்றமையை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பில் பேராசிரியர். சேனக பண்டாரநாயக்காவின் கூற்று இங்கு கவனத்திற்குரியது. **"அறிவு நிலையில் பெரும் பாய்ச்சல்களை ஏற்படுத்தவல்ல அடிப்படை ஆய்வுகள் கலைத்துறைகளிலோ, விஞ்ஞானத் துறைகளிலோ பல்கலைக்கழகங்களில் பெருமளவு நிகழ்த்தப்படவில்லை".** அடிப்படை ஆய்வுகளை முன்னெடுக்காது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் "மிகல் எழுகையினை" (Break Through) அறிவுத்துறைகளில் ஏற்படுத்த முடியாது. பல்கலைக் கழகங்களில் புள்ளி விபர ஆய்வுகள் நிகழ்கின்ற போதும் இவை தோற்றப்பாடுகளைக் காட்டும் அதற்கு மேலான எழுபாய்ச்சலை (Leap) அவற்றால் ஏற்படுத்த முடியாது. அத்துடன் பிரயோக ஆய்வுகளும், உயர்நுண்மதியாற்றல் பண்பாட்டியல் ஆய்வுகளும் வறியதாகவே உள்ளன என்பதும் கவனத்திற்குரியது.

நீண்ட காலத்திற்கு முன்அறிமுகம் செய்யப்பட பாட ஏற்பாடு, பரீட்சை முறை, கற்பித்தல் முறை என்பன இன்றும் அதிக வேறுபாடின்றி பின்பற்றப்பட்டு வருகின்றது. **"சமூக பொருளாதார முறை மாறிச் செல்லும் துரிதகதியில் கல்வி முறைகள் மாறுவதில்லை", "கல்வி முறைகளின் முக்கிய இயல்பு மாற்றமுறாது தேங்கி நிற்பது", "சமூக நிறுவனங்களில் மாற்றங்களுக்கு எதிரான பழமைப் போக்குடையது கல்வி முறையே"** என பல நியாயமான எழுவினாக்கள் பல்கலைக்கழகக் கல்வி முறைமை தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ளன.

தனியார்துறை வழங்கும் வேலை வாய்ப்புக்களை தேசிய பல்கலைக்கழக பட்டதாரிகளால் பெற முடியாதுள்ளது. இதற்கு நீண்டகாலமாக மாற்றமின்றி இருந்துவரும் பழைய பாட ஏற்பாடுகள், உலகளாவிய ரீதியாக பல்கலைக்கழக அமைப்பில் ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட மாற்றங்கள் என்பவற்றை உள்வாங்கி பல்கலைக்கழகங்கள் தனது கல்விச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டை இற்றைப்படுத்தாமையும் இன்று பல்கலைக்கழகக்கல்வியின் பொருத்தப்பாட்டைஎழுவினாவாக்கியுள்ளது.

விரிவுரையாளர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் தமது ஆற்றல்களை விரிவாக்கி தேடித், தொகுத்து, அளிக்கை செய்வதுடன் மாணவர்களும் அவை தொடர்பான தேடல்களைச் செய்வதற்கான குறிப்புக்கள், வழிகாட்டல் கையேடுகளை, உசாத்துணைகளை வழங்கி வழிப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றமையும், தொழில்நுட்ப ரீதியான கருவிகளைப் பயன்படுத்தி அதன் வழியான கற்பித்தலையும் வகுப்பறைகளில் மேற்கொள்கின்றனர். இவ்வம்சம் பல்கலைக்கழகங்களில் குறைவாகவே உள்ளமையினால் தரமான பட்டதாரிகளைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கவில்லை என்ற எழுவினாவுமுண்டு. இதனால் தேசிய பல்கலைக்கழகங்க பட்டதாரிகளின் தொழிற்றகைமை மற்றும் தொடர்பாடற்றிறன் தாழ்மட்டத்திலேயே உள்ளதாக உலகவங்கியின் அறிக்கை குறிப்பிடுகின்றது.

பல்கலைக்கழகச் செயற்பாடுகளை மறுசீரமைப்புச் செய்யும் செயற்பாட்டில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயற்பாடுகளில் மிதமான மேம்பாடுகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக;

1. பல்கலைக்கழகங்கள் கூட்டாக இணைந்து செயற்படல் அதனூடாக பின்வரும் இலக்குகளை அடைதல்.
   - ❖ வளங்களைப் பகிர்ந்து கொள்ளல்.
   - ❖ கல்விச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல்.
   - ❖ விரிவுரையாளர்களைப் பகிர்ந்து கொள்ளல்.
2. பல்கலைக்கழகங்களின் திறமை அடிப்படையில் நிதி வழங்குதல்.
3. தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை உறுதிப்படுத்தல்.
4. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார் துறைகளில் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தல்.

இத்தகைய செயற்பாடுகளை பல்கலைக்கழகம் சார்பாக அரசு மேற்கொண்டு வருவது பல்கலைக்கழகங்களின் தகுதி மற்றும் தரம் ஆகியவற்றின் செல்வாக்கை சிறப்பார்ந்த செயற்பாட்டை விளக்கி நிற்கின்றது. ஒரு நாட்டின் மனித வளத்தின் நடத்தைக் கோலங்களைச் செம்மைப்படுத்துவதன் மூலம் அவர்கள் தமக்கும், தமது குடும்பத்திற்கும், நாட்டிற்கும், முன்னேற்றம், அமைதி, மகிழ்ச்சி என்பவற்றை வழங்குவதை இலக்காகக் கொண்டே பல்கலைக்கழகங்கள் தொழிற்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அவை அமைந்துள்ள சமூகத்தின் பன்முக இயல்புகளையும் வெளிப்படுத்தத் தவறிவிடுகின்றன. எனவே பல்கலைக்கழகங்கள் பலமான தொழிற்பாட்டு நிறுவனமாக, இயலுமை, வினைத்திறன், விளைதிறன் என்பவற்றையும் மாற்றுவதற்காக தங்களைத் தயார்படுத்த வேண்டியுள்ளது. இதனால் வலிமைமிக்க சமூக நிறுவனமாக பல்கலைக்கழகங்கள் தங்களை மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

ஆர்வமும் தகுதியும் உடைய அனைவருக்கும் உயர்கல்விக்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அதற்கேற்ப உயர்கல்வி வாய்ப்புக்களை உள்நாட்டில் அபிவிருத்தி செய்து கொண்டால் மாத்திரமே இலங்கையின் கல்வித்தரத்தினையும் மனித வளத்தினையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதிப்படுத்தலாம். இதனூடாக எதிர்பார்க்கப்படும் நாட்டின் பேண்தகு அபிவிருத்தியை அடையலாம்.

பல்கலைக்கழகங்களில் கற்கும் காலத்தில் மாணவர்கள் தமதாற்றல், சுயமதிப்பீடு, இலட்சியம், ஊக்கம், சுயபடிமம் என்பவற்றுக்கேற்ப பொருத்தமான தொழில்பற்றி அறிந்திருப்பதுடன் தொழில் செய்யுங் காலத்தில் சவால்களை எதிர்கொள்ளுதல், நிபுணத்துவம் பெறுதல், திட்டமிட்டுச் செயற்படல் ஆகியவற்றில் விழிப்புணர்வைப் பெறுதல் வேண்டும். இதற்கு பல்கலைக்கழக நிருவாகம், தொழில் வழிகாட்டல் ஆலோசனை சேவை, தொழில் நிறுவனத் தொடர்பு என்பவற்றுக்கு உதவுதல் வேண்டும். எனவே நாட்டின் பேண்தகு அபிவிருத்தியினை பல்கலைக்கழகத்தின் அறிவார்ந்த சமூகத்தினால் மாத்திரமே உருவாக்க முடியும்.

**உசாத்துணைகள் :**

அம்மன்கிளி.மு,(2010) இலங்கைப் பல்கலைக்கழகக்கல்வியில் தனியார் நிறுவனங்களை அனுமதித்தல் - விவாதங்களும் யாதார்த்தமும். பேராசிரியர் சின்னத்தம்பி கல்விச்சேவையின் பொன்விழா மலர், குமரன் அச்சகம், கொழும்பு.

சந்திரசேகரன்.சோ, மற்றும் சின்னத்தம்பி.மா(2000) கல்வித் திட்டமிடல்: கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும், எஸ்.எச். பதிப்பகம், கொழும்பு.

சந்திரசேகரன்.சோ,(2009) சமகால கல்விமுறைகள் ஒரு விரிநிலைநோக்கு, சேமமடு பதிப்பகம், கொழும்பு.

நித்தியவர்ணன்.அ,(2008) இலங்கையில் உயர்கல்வியின் அண்மைக்காலப்போக்குகள், சபா ஜெயராசா விழாக்குழு, உதயா அன்கோ லிமிட்டெட், கொழும்பு.

ஜெயராசா.ச, (2007) இலங்கையின் பல்கலைக்கழகக்கல்வியும் எதிர்பார்ப்புக்களும் எறிவுகளும்" அகவிழி, நவம்பர், கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் இசை மரபு – ஒரு சுருக்கக் குறிப்பு



சி.வே.ஞானசம்பந்தன்
B.A (Hons), Dip. in Edu, M.A. (Dis), M.Phil
விரிவுரையாளர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் எனும் மூன்றாகும். இதில் இயற்றமிழ் பண்ணோடு புணர்ந்த தாளத்தோடு நடைபெறும் போது அது இசைத்தமிழாய் உருவெடுக்கின்றது. அத்தகைய தமிழிசை தமிழரின் வாழ்வியலோடு பண்டு முதல் பின்னிப்பிணைந்து வந்திருக்கின்றது. இசை என்பது இனிய கலை. மனிதர் மட்டுமன்றி அஃறிணை உயிர்களும் இசைக்குக் கட்டுப்படும். "இசைக்குக் கட்டுப்படாதவன் எத்தகைய கொடுஞ்செயலையும் செய்யக் கூடியவன்" என்றார் சேக்ஸ்பியர்.

ஆங்கிலத்தில் Music என்பது இசையைக் குறிக்கும். இது கிரேக்கச் சொல்லான மௌசிக் (Mousik) எனும் சொல்லினின்று வந்தது. கிரேக்க நாட்டின் கலைகளுக்குரிய மியூஸ் (Muse) என்ற பெண் தெய்வத்திடமிருந்து இசை வந்ததாகக் கிரேக்கர்கள் நம்பினார்கள்.

தமிழில் இசை என்பது பெயர்ச்சொல்லாக இருக்கும் போது இனிமை, புகழ், பாட்டு முதலிய பொருள்களைத் தருகின்றது. இந்தச் சொல் வினைச் சொல்லாக அமையும் போது இணங்கு, உடன்பாடு என்ற பொருளினைத் தருகின்றது. இசையைக் கேட்கும் எவரும் அதன் இனிமையில் மயங்குவார்கள், அதற்கு உடன்படுவார்கள். எனவே முதனிலைத் தொழிற் பெயராகிய இசை என்பது காரணப்பெயராகின்றது.

பண்பட்ட எல்லா மொழிகளிலும் இசை வாழ்கின்றது. ஆனால் எந்த மொழியிலும் இசை மொழியின் முக்கிய கூறாகச் சொல்வதில்லை. சிறப்பித்துப் போற்றவும் இல்லை. தமிழில் மட்டும்தான் 'இசைத்தமிழ்' என்ற பிரிவே விளங்குகின்றது.

தமிழரின் வாழ்வில் இசை பெரும்பங்கு ஏற்றுள்ளது. குழந்தைப் பருவத்தில் தாலாட்டு, விளையாட்டு நிலையில் நிலா, காக்கா பற்றிய பாட்டுக்கள், உடற்பயிற்சி நிலையில் சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு, கைவீசச் சொல்லிப்பாடும் பாட்டு, இறைவனை வணங்கும் போது பக்திப்பாடல்கள், கதை கேட்கும் போது நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், வசதியும் ஓய்வும் கொண்டோருக்கு மேடை இசைப்பாடல்கள் பின்னர் தத்துவப்பாடல்கள், ஒப்பாரிப்பாட்டு என்று தமிழரின் வாழ்வில் எல்லா நிலைகளிலும் இசை இடம்பெற்றுள்ளது.

பழந்தமிழ் மக்கள் நுட்பமான இசைப்புலமையும் இசை இலக்கண அறிவும் பெற்றிருந்தனர். பழந்தமிழ் நூல்களான தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் இது பற்றிக் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழ் மக்கள் இயற்கையில் எழும் ஒலிக்கூறுகளை நுண்மையாக ஆராய்ந்தனர். அதனை ஒட்டி இனிமையான ஓர் இசை முறையை உருவாக்கினர். படிப்படியாகப் பண்படுத்திய அந்த இசை முறையை 'பண்' என அழைத்தனர். வாழும் நிலத்துக்கேற்பப் பண்களை வகைப்படுத்தினர். காலத்துக்குப் பொருந்த பண்களைப் பாடினர். பண்கள் 103 என்று வகுத்தனர். இசையால் பண்ணப்படுவது பண் எனப்பட்டது. பண்ணை ஒட்டிப்பாடும் இசைப்பாடல்களைத் தொல்காப்பியர் 'பண்ணத்தி' என்றார். (தொல்.பொருள் : செய்யுள் : 173) "பண் என்னாப் பாடற்கு இயைபு இன்றேல்" (குறள் 573) என்று வினாவினார் திருவள்ளுவர். அகத்தியர் காலத்தில் 108 தாளங்கள் இருந்தன என்று இசை அறிஞர்கள் கூறுகின்றனர். அடியார்க்கு நல்லார் காலத்தில் 11991 பண்கள் இருந்தன என்பது அவருடைய உரையிலிருந்து தெரிகிறது.

குறிப்பிட்ட பண் அதற்குரிய காலத்தில் பாடப்படவேண்டும் என்ற வரன்முறை இருந்தது. யாமத்தில் குறிஞ்சிப்பண்; விடியலில் மருதப்பண்: நண்பகலில் பாலைப்பண்; முன்மாலையில் நெய்தற் பண்; மாலையில் முல்லைப்பண் என்று இவை அன்று பாடப்பட்டன. தமிழகம் அன்று நால்வகை நிலங்களாக இயற்கையின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலத்துக்கும் தனித்தனியாக இசைக்கருவிகளும் பண்களும் இருந்தன. குறிஞ்சிக்கு வெறியாட்டுப் பறையும் தொண்டகப் பறையும் குறிஞ்சிப் பண்ணும் உரியதாக இருந்தன. இவ்வாறு ஏனைய நிலங்களுக்கும் வகுக்கப்பட்டிருந்தது.

'தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகைப் பிறவும் கரு என மொழிப'

(தொல். பொருள் : அகம் : 20) என்ற தொல்காப்பிய நூற்பாவின் உரையில் இளம்பூரணர் இவற்றை கூறுகின்றார்.

செயன்முறைத் தகைமைக்கு ஏற்ப கலைஞர்கள் வெவ்வேறு வகுப்பினராகத் தொழிற்பட்டனர். பாட்டுப் பாடியவர்கள் பாணர், கூத்தாடியவர்கள் கூத்தர், கருவி இசைத்தோர் யாழ்ப்பாணர், பறையர், துடியர், இணைஞர் என்றவாறு அவரவர் கருவிப்பெயர் கொண்ட வகுப்பினராயினர். அத்துடன் இசை வளர்த்த நங்கையரும் இருந்துள்ளனர்.

மாங்குடி மருதனார்,

"துடியன் பாணன், பறையன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை" (புறம் : 335. 7-8)

என்று கூறுகின்றார்.

மேற்கூறப்பட்ட நால்வரில் கடம்பனைத் தவிர மற்ற மூவரும் இசைவளர்த்த கலைஞர்களே. பண்ணைப் பாடிய ஆண் 'பாணர்' எனப்பட்டான். இசையைப் பாடிய பெண் 'பாடினி' எனப்பட்டாள். யாழ் என்ற இசைக்கருவியுடன் பாடியவர் 'யாழ்ப்பாணர்' எனப்பட்டனர். கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் என்றும் (தொல் : பொருள் : புறம் 39) பாணன், பாடினி, இளையர், விருந்தினர் என்றும் (தொல் : பொருள் : கள . 52) தொல்காப்பியத்தில் இவர்கள் சுட்டப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க காலத்தில் கணவர் மார்பில் புலி தாக்கியதால் ஏற்பட்ட புண்களை ஆற்றுவதற்காக துணைவியர் பாட்டுப்பாடினர்.

"கொடுவரி பாய்ந்தெனக் கொழுறர் மார்பில்
நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பு என
அறல்வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்" (மலைபடுகடாம் 302-4)
என மலைபடுகடாம் கூறுகின்றது.

சிலப்பதிகாரம், அக்காலத்தமிழிசையைப் படம் பிடித்துக்காட்டுகிறது. தமிழின் சுரங்களும் சுரவரிசைகளும், சுர அமைப்பு முறைகளும் பண்கள், நிறங்கள், சுர அழகியல் நுட்பங்கள் என ஒரு Melodic இசைக்குத் தேவையான அனைத்துச் சட்டகங்களும் சிலப்பதிகார காலத்தில் தமிழில் நடைமுறையில் இருந்தது. சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும் பல இசைக் குறிப்புக்களைத் தருகின்றன. அரங்கேற்று காதையில் பண், நிறம், தூக்கு ஆகியன குறித்தும் ஏழு சுரங்கள் குறித்தும் பாடலாசிரியன், யாழாசிரியன், குழலாசிரியன், தண்ணுமை ஆசிரியன் ஆகியோரின் இலக்கணங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளது. கானல் வரி, வேட்டுவவரி ஆகியவற்றில் நாட்டுப்புற இசை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழன் முதல் இசை வடிவங்களாக நாயன்மார்களின் தேவாரங்கள் தோன்றுகின்றன. தேவாரங்கள் பண்களின் அடிப்படையிலான இயலிசை வடிவங்கள், சங்கப் பாடல்கள் கூட இசையால் பாடப்பெற்றிருக்கலாம். பரிபாடல் இசைப்பாடல்களால் அமைந்தது. திருஞானசம்பந்தரின் பதிகங்களே இசைப்பண்களைக் கொண்டு இயற்றப்பட்டவையாதலினால் பண்முறைத் தொகுப்பில் முதலாம் திருமுறையாகக் கொள்ளப்பட்டது. தனது History of Indian Music என்ற புத்தகத்தில் சாம்பமூர்த்தி அவர்கள் இந்தியாவின் மிகத்தொண்மையான இசைவடிவம் தேவாரமே என்கிறார். 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்', 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்', 'ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய்' எனும் திருமுறைப் பாடலடிகள் இங்கு குறிப்பிடத்தக்கன. தேவாரங்களைப் போலவே இக்காலகட்டத்திலே தோன்றிய வைணவ நூல்களான பிரபந்தங்களும் பண்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டன.

இவைதவிர, அச்சோ, அம்மானை, ஆற்றுவரி, உந்தியார், ஊசல், கப்பற்பாட்டு, கானல்வரி, கோத்தும்பி, திருவங்கமாலை தெள்ளேணம், தோணோக்கம், பற்றியெழுச்சி, பொற்சுண்ணம், வள்ளைப்பாட்டு என பலவகைப்பட்ட இசைப்பாட்டு வகைகள் தமிழில் வழங்கிவந்தன.

தமிழிசையினை என்றும் வாழ்விப்பதற்காக கோயில்களில் இசைத்தூண்களை பழந்தமிழர் நிறுவினர். மதுரை சுசீந்திரம், திருக்குறுங்குடி, திருநெல்வேலி முதலிய கோவில்களில் இத்தகைய இசைத்தூண்கள் உள்ளன. இவற்றைத் தட்டினால் இன்றும் ஏழு சுரங்கள் எழும். அத்துடன் கோவில்களில் "ஓதுவார்கள்" நியமிக்கப்பட்டிருந்தனர்.

கி.பி.14ஆம் நூற்றாண்டில் டெல்லி சுல்தான்கள் தமிழகத்தை ஆக்கிரமித்தனர். கோவில்கள் அழிக்கப்பட்டன. கலைகள் நலிவுற்றன. இதைத்தொடர்ந்து விசயநகர அரசர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டை ஆண்டனர். இவர்கள் தமிழிசைக்கு ஆதரவு கொடுக்கவில்லை. தெலுங்கு மொழிக்கும் இசைக்கும் ஆதரவு வழங்கினர். 16 ஆம் நூற்றாண்டில் தமிழிசையின் மரபுகள் நுணுக்கங்கள் பல உள்வாங்கப்பட்டு கருநாடக இசையாக உருவகப்படுத்தப்பட்டது. இடையே அருணகிரிநாதர் திருப்புகழ் பாடி இசைத்தமிழை வளர்த்தார். 1008 மேளகரித்தாப் பண்களுக்கும் அவர் திருப்புகழ் பாடினார்.

தமிழர்கள் தெலுங்கிசையைக் கேட்கவேண்டிய நிலைமையில், அதைக் கேட்பதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் மடங்கியிருந்த தமிழர்களின் காது இரும்புக்காது என்று கடிந்துரைத்தார் பாரதியார்.

தமிழ்நாட்டில் தமிழிசை பாடப்பட வேண்டும் என்பதற்காக ஓர் இயக்கம் தோன்றியது. அண்ணாமலை அரசர். டி.கே.சி. கல்கி, இராஜாஜி, சம்பந்த முதலியார் முதலியோர் அந்தத் தமிழிசை இயக்கத்தை (1943) வளர்த்தனர். தண்டபாணி தேசிகர், சீர்காழி கோவிந்தராஜன் முதலியோர் தமிழிசைப் பாடல்களைப் பாடி வழிகாட்டினர்.

இவ்வாறு நின்று நிலைத்த தமிழர்தம் இசைமரபு இன்று தமிழகத்தில் எவ்வாறிருக்கின்றது. புலம்பெயர் நாடுகளில், தமிழர் வாழும் நாடுகளில், குறிப்பாக இலங்கையில் எத்தகைய நிலையில் உள்ளது என்பது சிந்தனைக்குரியது. தமிழரும் தமிழர் தம் வாழ்வும் மொழியும் பண்பாடும் மரபுகளும் பல்வேறுபட்ட இன, மத, கலாசார மொழிக் கலப்புகளால் கட்டுண்டிருக்கும் இன்றைய நிலையிலே, தமிழர் இசைமரபு எத்தகைய நிலையில் உள்ளதென்பது ஆய்வுப் பொருளாய் நிற்கின்றது.

**உசாவியவை :**


- சாமிநாதையர் உ.வே, (1929) சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும், ஆனந்தா அச்சுக்கூடம், சென்னை.

- சிங்காரவேலு முதலியார் ஆ, (2001), அபிதான சிந்தாமணி, தமிழ்க்கலைக்களஞ்சியம், 11 ஆம் பதிப்பு, தில்லி ஏசியன் எடுகேஷனல் சர்வீஸல்.

- சிலப்பதிகாரம், (2016), உமா பதிக்கம், சென்னை

- திருக்குறள், தெளிவுரை, மு.வரதராசனார், (2004), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், சென்னை.

- தொல்காப்பியம், (1993) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.

- பத்துப்பாட்டு மூலம், (1993), பதிப்பாசிரியர் உ.வே.சா, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக நுண்மதி



**இ.நிர்மலன் B.sc, PGDE**
ஆசிரியர்
வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயம்

நுண்மதி என்பது ஆரம்பகால கிரேக்க தத்துவ ஞானிகளினால் திறன், ஆற்றல், அனுபவங்கள், தைரியம், நல்லொழுக்கம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பதமாக பயன்படுத்தப்பட்டது. Intelligence என்ற ஆங்கிலச்சொல் Intelligentia என்ற பதத்திலிருந்து வந்ததாக கிரேக்க தத்துவவியலாளர்கள் கூறுகின்றனர். நுண்மதி என்பது சகல அறிவாற்றல்களையும் பிறப்பிக்கும் உள்ளார்ந்த இயல்பு என பிரன்சிஸ் கோல்டன், ஹேர்பட்ஸ் பென்சன் ஆகியவர்கள் குறிப்பிடுகின்றனர். ஸ்பியர்மன், வோர்னர், தேஸ்டர், கில்பேட் என்பவர்கள் நுண்பதி என்பது சிலகாரணிகளை உள்ளடக்கியது என்று கூறுகின்றனர். தோண்டைக் ஒருவர் எதிர்நோக்கும் பிரச்சனையினை தீர்க்கும் ஆற்றல் நுண்மதி எனக் குறிப்பிடுகின்றனர்.

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் மாணவர்களின் நுண்மதி பிரதான இடத்தை வகிக்கின்றது. பொதுவாக நுண்மதி ஈவு 130 இற்கு மேலாக இல்லாது இருக்குமிடத்து அவர்கள் மீத்திறன் கொண்டவர்களாக கருதப்படுவதில்லை. இவ்வகையான கணிப்பீடு பொதுவாக அவர்களின் மொழிசார்ந்த, கணிதம் சார்ந்த துறைகளிலேயே நடைபெறுகின்றது. மரபு அடிப்படையிலான இத்தகைய நுண்மதி அறவீடுகள் ஒருவரின் உள்ளார்ந்த அறிவை அளப்பதற்கு போதுமானது என கருதப்பட்டது.

பொதுவாக வகுப்பறை ஒன்றிலே மீத்திறனுள்ள, சராசரி, கற்றலில் இடர்படும் மாணவர்கள் என பல்வகைமை உடையவர்களை அவதானிக்கின்ற அதேநேரம் அவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையான திறன்களைக் கொண்டு இருக்கின்றார்கள். உதாரணமாக ஆடுதல், ஓடுதல், பேசுதல், ஓவியம் வரைதல், விளையாடுதல் சிந்தித்தல் போன்ற பல்வகைத் திறன்களைக் குறிப்பிடலாம்.

இவ்வகையான பல்வகைமைகளை இனங்கண்டு கற்பித்தல் ஒரு பிரச்சனையாகவே காணப்படுகின்றது. பாடசாலையில் அனுபவங்களின் படி வகுப்பறையில் உள்ள மீத்திறன் மாணவர்களே வகுப்பில் உள்ள பொறுப்புக்களை வகிப்பதற்கு தெரிவு செய்யப்படுகின்றனர். இந்நிலை மீத்திறன் மாணவர்களினது விருத்தியை வகுப்பிலுள்ள ஏனைய மாணவர்களுடன் பொதுமைப்படுத்தலை ஏற்படுத்துகின்றது. எமது நாட்டில் பரீட்சை மையமான கல்வியே காணப்படுகின்றது. மாணவர்களின் பல்வகைமைகளை வெளிப்படுத்த அறிமுகப்படுத்தப்பட்ட இணைப்பாடவிதானங்கள் முன்னிலைப்படுத்தாத கல்வி முறையே காணப்படுகின்றது. ஞாபகப்படுத்தும் ஆற்றல் உள்ளவர்கள் கல்வியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையாளர்களாக கருதும் நிலை காணப்படுகின்றது. வாசிப்பு, எழுத்து கணிதம் போன்ற அறிவாற்றல்சார் திறன்களை அளவிடுவதன் மூலம் ஒருவரின் நுண்மதி மட்டத்தை அளவிடலாம் என்ற பிழையான சிந்தனையே இன்றும் காணப்படுகின்றது.

இதன் காரணமாக பிள்ளைகளின் ஆற்றல்களின் பண்முகப்பாடு புறக்கணிக்கப்படுவதனை ஹவாட் பல்கலைக்கழகத்தின் கல்வியல் துறை பேராசிரியர் ஆள ஹவாட் காடினர் எடுத்துரைத்தார். நுண்மதி தேர்வுகளில் ஒரு மனிதனுடைய நுண்மதி சார்ந்த ஆற்றல்களின் அளவு கோலாக தனியே மொழிவளம், தர்க்கரீதியான கணிதம் ஆகியவற்றை மாத்திரம் கவனத்தில் கொள்ளாது அவனது பல்வேறு புலம்சார்ந்த ஆற்றல்களையும் கவனத்தில் எடுத்து பரந்தவீச்சில் ஊடாக அளவிடையினை மேற்கொள்ளவேண்டும் என்று காடினர் வலியுறுத்தினார். பரந்த ஒரு தொடரில் அமைந்த கலாசார விழுமியங்கள் கொண்ட செயல் நடவடிக்கைகளில் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும் உற்பத்திகளை படைக்கவும் புதிய அறிவை கண்டுபிடிக்கவும் கூடியதாக வெவ்வேறு செயல்முறை தொழிற்பாடுகள் சார்பாக நுண்மதி என்பது வரைவிலக்கணப்படுத்தவேண்டும் என்று கூறினார்.

நுண்மதி என்பது ஒன்றோடு ஒன்று இணைந்த ஒருவாளவு போன்ற தனியாள உள ஆற்றல் என்ற கருத்தை காரினர் மறுதலித்தார். 1984 இல் 7 தனிதனியான நுண்மதிகளை முன்வைத்தார். அவையாவன மொழிசார்ந்த நுண்மதி, தர்க்கம் சார்ந்த நுண்மதி, இசை சார்ந்த நுண்மதி, வெளிசார்ந்த நுண்மதி, உடலியக்கம் சார் நுண்மதி, அளிடைத் தொடர்புசார் நுண்மதி, ஆள் அகத் தொடர்பு சார் நுண்மதி என ஏழுவகையான நுண்மதிகளை அறிமுகம் செய்தார். 1997 இல் இயற்கைசார் நுண்மதி என்ற எட்டாவது நுண்மதியையும் இப்பட்டியலில் சேர்த்தனர். இன்று மேற்கொள்ளும் ஆய்வுகள் மேலும் சில நுண்மதிகளை இனங்காட்டுகின்றன.

இவ்வாறு பன்முக நுண்மதிகளை தனித்தனியே முன்வைத்தல் ஆனது முன்னைய நுண்மதி அளவீட்டின் ஊடாக புறக்கணித்தவர்களைக் குறித்து கவனத்தை வேண்டிதோடு அவர்கள் பற்றிய நம்பிக்கைகளை வளர்ப்பதாக உள்ளது. இவ்வாறு பன்முக நுண்மதி ஆற்றல்களைக் கொண்டவர்களிடத்து காணப்படும் ஆற்றல்களையும் தேர்ச்சிகளையும் அவர்களை எந்ததுறை நோக்கி வழிப்படுத்தலாம் என்பதனையும் காடினர் எடுத்துரைத்தார்.

மொழிசார்ந்த நுண்மதிகளை உடையவர்கள் ஒலிகளையும் ஒழுங்கான சந்த நடைகளையும் சொற்களின் கருத்துக்களையும் மொழியின் வெவ்வேறு தொழிற்பாடுகளையும் எளிதில் கிரகிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். இவர்களை எழுத்துத்துறை, கவிதை, பத்திரிகை துறை நோக்கி வழிப்படுத்தவேண்டும்.

தர்க்கம்சார்ந்த கணிதம் சார்ந்த நுண்மதிகளை உடையவர்கள் தர்க்கரீதியான கோலங்கள், எண்சார் கோலங்கள், கிரகிக்கக்கூடிய ஆற்றல் கண்டறியக் கூடிய ஆற்றல், நீண்ட சங்கிலி போல் அமைந்த தர்க்க தொடர்புகளை கையாளக்கூடியதாக இருப்பர். இவர்களை கணிதத்துறை விஞ்ஞானத்துறை நோக்கி வழிப்படுத்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைசார்ந்த நுண்மதிகளை உடையவர்கள் சுருதி, லயம், அழகியல்சார் ஒலிப்பு, ஒலிகள் என்பவற்றை உருவாக்கக்கூடிய ஆற்றல் சங்கீத வடிவங்களின் வெளிப்பாட்டுத் திறன் விளங்கிக் கொள்ளல் போன்ற திறன்களை கொண்டு இருப்பவர்களை இசை அமைப்பு, இசைக்கருவிகள் சங்கீதத்துறை நோக்கி வழிப்படுத்தவேண்டும்.

வெளிசார் நுண்மதி ஆற்றல்களை உடையவர்கள், கட்புல வெளிசார்ந்த உலகப் புலக்காட்சி பெறுதல், இப்புலக்காட்சிகளை உருமாற்றம் செய்யக்கூடிய ஆற்றல் தூண்டிகள் அற்றநிலையிலும் புலக்காட்சி அனுபவங்களை மீள உருவாக்குதல் என்ற ஆற்றல்களைக் கொண்டவர்களை சிற்பத்துறை, கள ஆய்வுத்துறை என்பவை நோக்கி வழிப்படுத்தவேண்டும்.

உடலியக்கம்சார் நுண்மதி ஆற்றல்களை உடையவர்கள் வெளிப்பாடுகளை காட்டுவதற்காக உடலை திறனாகப் பயன்படுத்துவார்கள். பொருள்களை திறன் ஆற்றலுடன் பயன்படுத்துதல் போன்ற ஆற்றல்கள் காணப்படும். இவர்களை நடனத்துறை, விளையாட்டுத்துறை நோக்கி வழிப்படுத்த வேண்டும்.

ஆளிடைத்தொடர்புசார் நுண்மதி ஆற்றல்களை உடையவர்கள் ஏனையவர்களின் மனநிலைகளை, சுபாவங்களை, ஊக்கங்களை, நோக்கங்களையும் கண்டறியக்கூடிய ஆற்றல் போன்ற ஆற்றல்களையும் கொண்டவர்களை விற்பனைத்துறை, சிகிச்சைத்துறை, உளவியல்துறை நோக்கி வழிப்படுத்தவேண்டும்.

ஆள் அகத்தொடர்புசார் நுண்மதி ஆற்றல்களை உடையவர்கள் தன்னை உணர்தல், தன்னை நெறிப்படுத்தல், தனது மன எழுச்சி இயல்புகளை பொருத்தமாக கண்டறிதல் போன்ற ஆற்றல்களை கொண்டவர்களை வழிகாட்டுனர், உளவளத்துணையாளர் நோக்கி வழிப்படுத்த வேண்டும்.

இயற்கைசார் நுண்மதிசார் ஆற்றல்களை உடையவர்கள் உயிர் இனங்களை இனங்காணுதல், வேறுபிரித்து அறிதல், இயற்கை உணர்வின் இயல்புகளை உணர்தல் போன்ற ஆற்றல்களைக் கொண்டவர்களை தாவரவியல்துறை, விவசாயத்துறை, சூழல்துறை நோக்கி வழிப்படுத்தவேண்டும்.

காடினர் முன்வைத்த பன்முக நுண்மதி கொள்கையானது மாணவர்களின் பன்முகப்பாடுகளை இனங்கண்டு அவர்களின் ஆற்றல்களை மதித்து அவர்களுக்கு பொருத்தமான துறையில் அவர்களை ஆற்றுப்படுத்த உதவக்கூடியது. இதனால் மாணவர்கள் ஊக்கம் பெற்று தமது ஆற்றல்களை வளர்க்கமுடிகின்றது.

**நுண்மதி வேறுபாடுகளும் கற்றல் கற்பித்தலும்**

கற்றலானது ஒருபோதும் கூட்டாக நிகழ்வதில்லை. கற்றானது தனியாள் முறையிலேயே நடைபெறுகின்றது. எனவே கற்போனின் வேறுபாடுகளை அறிந்து கற்பிக்கவேண்டும். கற்போனின் தனித்தன்மையினை கவனத்தில் கொள்ளாது கற்பிக்கும் முயற்சியானது ஒரு போதும் வெற்றியளிக்கமாட்டாது. வகுப்பறையில் பன்முக நுண்மதியுடையவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றனர். அவர்களுக்கு ஒரு குறித்த முறையைப் பயன்படுத்தி கற்பிக்கமுடியாது. எனவே குறித்த விடயத்தை கற்பிப்பதற்கு பன்முக நுண்மதியினை பயன்படுத்த வேண்டி இருக்கும். கற்போனின் பலம், பலவீனம் என்பவற்றை நுண்மதி அடிப்படையில் இனங்கண்டு கற்பித்தாலே கற்பித்தல் முழுமையடையமுடியும்.

காடினரின் கருத்துப்படி பொதுவாக ஏற்றுக்கொள்ளும் விடயம் இரண்டு மனிதர்கள் குறித்த விடயம் தொடர்பாக ஒரே மாதிரி சிந்திப்பது இல்லை என்பதாகும். கலைத்திட்டம் என்பது கற்றல் கற்பித்தலில் பிரதானமாகும். கலைத்திட்டத்தினூடாகவே அடையவேண்டும் என்று எதிர்பார்க்கும் இலக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே கலைத்திட்டத்தை வகுப்போர் பன்முக நுண்மதி உடையோர்க்கும் பொருந்துவகையில் காலத்திட்டத்தை வகுத்துக்கொள்ளவேண்டும்.

காடினரின் பன்முக நுண்மதி தொடர்பான பல்வகையான விமர்சனங்கள் இருந்த போது கற்றல் கற்பித்தல் செயன்முறையில் குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்துகின்றது. கலைத்திட்ட ஆக்கத்திலும் குறிப்பிட்ட பங்களிப்பு செய்கின்றது ஒருவரிம் பல்வகைத் திறன்களும் பன்முக நுண்மதியும் உள்ளடக்கி இருப்பதால், வகுப்பறையில் அனைவரையும் ஈடுபடுத்தும் வாய்ப்பு உண்டு. மாணவர் மத்தியில் தன்னம்பிக்கையினை உருவாக்குவதோடு வேறுபட்ட திறன்கள் அடையாளங்காணப்பட்டு ஆசிரியர்களை முறையாக வழிப்படுத்துவதற்கு இக் கொள்கை பெரிதும் உதவுகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**


சின்னத்தம்பி.க & சுவர்ணராஜா.க. (2011). அறிகைத் தொழிற்பாடும் ஆசிரியரும். கொழும்பு : சேமமடு புத்தகசாலை.

கேதீஸ்வரன்.க. (2017-Feb). மாணவர்களின் பல்வகைமையை விளங்கிக் கற்பித்தல். பன்முக நுண்மதிக்கோட்பாட்டின் பயன்பாடு. பார்வை.7.78-96

ஸ்ரலின்.இ. (2015-June). ஆளுமை வளர்ச்சிக்கு வழிகோலும் நுண்ணறிவுக் கொள்கை.கடல், 23-28.

ஸ்ரலின்.இ. (2016-June). நுண்ணறிவை விருத்தி செய்யும் முறைகள். கடல்.14,13-17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிப்பு விழா சான்றிதழ்







## மனித உரிமை மற்றும் இயற்கை வள பாதுகாப்பிற்கான அமைப்பு

## Organization For Protection Human Rights & Natural Resources

**Regd No :- 15880**

## தேசிய ரீதியில் கௌரவிப்பு சான்றிதழ் - 2019

கல்வி, கலை, கலாசார, விளையாட்டு சமூக விடயங்களில் ஈடுபாடு கொண்டுள்ள சிறந்த கல்விமான்களுக்கும், கலைஞர்களுக்கும் விளையாட்டு வீரர்களுக்கும், சமூகசேவையாளர்களுக்கும் தேசிய ரீதியில் கௌரவப்படுத்தல்.

வவுனியா வடக்கு ........... பிரதேசத்திலே

சிறந்த அதிபர் சேவை. என்னும் துறைக்கு

திரு/ திருமதி/ ~~செல்வன்~~/ ~~செல்வி~~:

ரேவதி கிருஸ்ண மூர்த்தி ...........

அவர்கள் ஆற்றிய உயரிய சேவையினைப் பாராட்டிக் கௌரவித்து மனித உரிமை மற்றும் இயற்கை வள பாதுகாப்பிற்கான அமைப்பினால் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது.

OPHRNR

Deshamaniya Deshakeerthi
B.M. Uwais
Vice President of
Human Rights & Natural
Resources

Deshamaniya
M.S.H.Hyder
Human Rights & Natural
Resources

Deshamaniya Deshakeerthi
Sriman M.S.Kanesswaran - J.P
Director of Education and Art cultural
Sports Children and Women development
Northern Province
Human Rights & Natural Resources

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ/புளியங்குளம் இந்துக்கல்லூரிக்கும்
கல்மடு மகா வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற
மென்பந்து சுற்றுப்போட்டியின் போது...



வ/புளியங்குளம் இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டியில்
அமரர் திரு.வரதராஜன் (முன்னாள் அதிபர்)
பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி.ரேவதி கிருஸ்ணமூர்த்தி அவர்களின் அறுபதாவது அகவை மணிவிழாச் சிறப்பு மலருக்கு தமது சிரமங்களைப் பாராது ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், வாழ்த்துப்பாக்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றை தந்துதவியவர்களுக்கு மலர்க்குழு சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"ரேவதியம்"** எனும் இம் மணிவிழா மலரைச் சிறப்பாக அச்சுப்பதித்த வவுனியா, கலைமகள் அச்சக உரிமையாளர் திரு.க.கிருபாகரன் அவர்களுக்கும், கணினி வரைஞர் திரு.க.முரளிதரன் அவர்களுக்கும் மலர்க்குழுவின் நன்றிகள் பற்பல.

நன்றி.

- மணிவிழா மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org